# வீரமாமுனிவ மாலைகள்



சூ. இன்னாசி

கிறித்தவத் தமிழ் இலக்கியத் துறை

சென்னைப் பல்கலைக் கழகம்

UG2478
R006B05
U.G
2478

சென்னைப் பல்கலைக் கழகக் கிறித்தவத் தமிழ் இலக்கியத் துறை
வெளியீடு : 1

# வீரமாமுனிவ மாலைகள்

ஆசிரியர்
டாக்டர் சூ. இன்னாசி
பேராசிரியர் - தலைவர்
கிறித்தவத் தமிழ் இலக்கியத் துறை
சென்னைப் பல்கலைக் கழகம்

சென்னைப் பல்கலைக் கழகம்

1985

# POEMS IN PRAISE OF FR. BESCHI

*Author*

**Dr. S. INNASI**

Professor and Head

Chair on Tamil Christian Literature

University of Madras

UNIVERSITY OF MADRAS

1985

# வீரமாமுனிவ மாலைகள்

ஆசிரியர்

டாக்டர் சூ. இன்னாசி

பேராசிரியர் - தலைவர்

கிறித்தவத் தமிழ் இலக்கியத் துறை

சென்னைப் பல்கலைக் கழகம்

சென்னைப் பல்கலைக் கழகம்

1985

முதற் பதிப்பு: 1985

உரிமம் :
சென்னைப் பல்கலைக் கழகம்

விலை ரூ. 18/-

அச்சிட்டோர் :
அவ்வை அச்சுக்கூடம் சென்னை-13.

# வாழ்த்துரை

தமிழ் மொழியின் வளர்ச்சி தமிழகச் சமயங்களின் வளர்ச்சியோடு இரண்டறக் கலந்தது. தமிழால் சமயங்களும் சமயங்களால் தமிழும் ஒருசேர வளர்ந்தன. இவ்வாறு தமிழை வளர்த்த, தமிழால் வளர்ந்த சமயங்களுள் கிறித்தவத்தின் பங்கும் குறிப்பிடத்தக்கது.

மேலை நாட்டிலிருந்து சமயம் பரப்ப வந்த துறவியர் தமிழைக் கற்றதோடன்றித் தமிழ் வளர்ச்சியின் பல்வேறு புதிய துறைகளுக்கும் முன்னோடிகளாகத் திகழ்ந்தனர். தமிழைப் பிறமொழியாளர் உணரவும், மேனாட்டுப் புதிய போக்குகளைக் கொண்டு தமிழ் வளரவும் வழிவகுத்தவர் கிறித்தவத் தமிழ்த் தொண்டர்களே. கிறித்தவத் தமிழ்த் தொண்டர்களின் படைப்புகளையும் பணிகளையும் ஆய்ந்து வெளிக்கொணரத் தமிழக அரசால் கிறித்தவத் தமிழ் இலக்கிய அறக் கட்டளை, பல்கலைக் கழகத்தில் நிறுவப்பட்டுள்ளது.

கிறித்தவத் தமிழ்த் தொண்டர்களுள் தலைமையிடம் பெறத்தக்கவர் பெஸ்கி என்னும் வீரமாமுனிவர். திருவள்ளுவர் பெருமையைப் பல்வேறு புலவர் பெருமக்கள் பாடிப் புகழ்ந்துள்ளது போல் வீரமாமுனிவர் பெருமையையும் பலர் பாடியுள்ளனர். அவை இதுவரை வெளியுலகிற்கு அறிய வாராதிருந்தன. அதை வெளிக்கொணர்வதாகவும் அவரது ஆற்றல் முழுமையும் ஆய்வு நோக்கோடு புலப்படுத்துவதாகவும் 'வீரமாமுனிவ மாலைகள்' என்னும் இந்நூல் அமைந்துள்ளது.

கிறித்தவத் தமிழ் இலக்கியத்துறை வெளிப்படுத்தவிருக்கும் தமிழ் இலக்கியச் செய்திகள், வரலாறுகள், ஆய்வுகள், நூற்றொகுதிகள் பல உள்ளன. அவற்றுள் முதல் நூலாக வெளிவரும் இந்நூல் கிறித்தவத் தமிழ்த் தொண்டருள் முதன்மை நிலை பெறத்தக்க வீரமாமுனிவர் பற்றியதாக உள்ளது மிகவும் பொருத்தமே.

இதுபோன்ற வெளியீடுகள் பல கிறித்தவத் தமிழ் இலக்கியத் துறையின் சார்பில் விரைவில் வெளிவர வாழ்த்துகின்றேன். அறக் கட்டளை நிறுவிய தமிழக அரசுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்நூலை ஆக்கிய பேராசிரியர் சூ. இன்னாசி அவர்கட்குப் பாராட்டுக்கள். அவரது முயற்சி மேலும் வளர்வதாகுக.

அன்பன்,

**பா. சுந்தரேசன்**

சென்னை,
*10—9—1985*

# முன்னுரை

கிறித்தவத் தமிழறிஞருள் முதன்மை நிலை பெறத்தக்கவர் வீரமாமுனிவரே. அவருக்குப் பின்வந்த அயல்நாட்டறிஞர்களாய கால்டுவெல், ஜி. யூ. போப் முதல், தமிழகத்து அறிஞர்களாய உ. வே. சா., சேதுப்பிள்ளை ஈறாக அவரைக் குறித்துக் கூறியிருக்கும் பாராட்டு மொழிகளே அவரது பெருமைக்குச் சான்று பகரும்.[1] ஏ. எல். பாஷாம் என்பார் 'வியப்பான இந்தியா' (The Wonder That Was India) என்னும் நூலில், 'பிற்காலத் தமிழுலகில் வீரமாமுனிவரே மிகச் சிறந்த இலக்கியப் படைப்பாளி' (Perhaps the greatest literary figure in later Tamil was Viramamunivar...) எனச் சுட்டுவர். பரிதிமாற் கலைஞர் வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் பதினெட்டாம் நூற்றாண்டில் எழுந்த பயனுள்ள நூல்களாக ஆறனைக் குறிப்பிடு வர். அவற்றுள் வீரமாமுனிவரின் தொன்னூல் விளக்கமும் தேம்பா வணியும் அடங்கும்.[2] மறைத்திரு பி. பெர்சிவல் அவர் காலத்திய தாய் நாட்டார் உள்ளிட்ட தமிழ் அறிஞருள் மறைத்திரு பெஸ்கி அடிகளே மிகச் சிறந்த தமிழறிஞர் என உறுதிப்படுத்தலாம் எனக் குறிப் பிடுவர்.[3]

பல்கலைக்கழகத்தின் கிறித்தவத் தமிழ் இலக்கியத்துறைக்குக் கால்கோளிடக் காரணமானவர் ஒருவகையில் அவர்தாம் எனலாம். அவரது முந்நூறாவது பிறந்த நாள்விழா சென்னையில் கொண்டாடப் பட்டது. அவ்விழாவில் தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் **எம். ஜி. இராமச்சந்திரன்** அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித் தார்கள். அவ்விழாவில் கிறித்தவத் தமிழ் இலக்கியம் பற்றி ஆய்வதற்குச் சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஓர் அறக்கட்டளை நிறுவ வேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்பட்டது. அதற்குப் பதிலிறுக்கும் முகமாக ஐந்து இலக்க ரூபாயில் அறக்கட்டளை நிறுவப்படும் என மாண்புமிகு முதல்வர் கூறினார். பின்னர், திட்டம் செயலுக்கு வந்த பொழுது அறக்கட்டளைத் தொகையினை ஐந்தரை இலக்கம் ரூபாயாக உயர்த்தித் தமிழக அரசு வழங்கியது. எனவே எவர்தம் விழா அறக்கட்டளைக்கு வழிவகுத்ததோ அவரே அவ்வறக் கட்டளைத் துறையின் முதல் வெளியீட்டுக்குக் கருப் பொருளாவது பொருத்தம் எனக் கருதப்பட்டது.

வீரமாமுனிவர் பற்றிய நூல் வெளியிடுவது மட்டும் சிறப்பன்று. இதுவரை வெளிவராத செய்திகளையோ, கருத்துக்களையோ,

கொண்டதாக அவ்வெளியீடு அமைதல் வேண்டும் என்பதே கருத்திற் கொள்ளப்பட்டது. அந்நோக்கில் அவர்தம் படைப்புக் களையும் குறிப்பாக அவற்றின் பழைய பதிப்புக்களையும் ஆயும் எண்ணம் ஏற்பட்டது. இதனையறிந்த தமிழ் இலக்கியத்துறைத் தலைவர் பேராசிரியர் **டாக்டர் ந. சஞ்சீவி** அவர்கள், அவர்தம் தந்தையார் போற்றிப் பாதுகாத்து வந்த தொன்னூல் விளக்கப் பதிப் பொன்றனைத் தந்துதவினார்கள். அது கி. பி. 1838 இல் வெளி வந்தது. அதன் இறுதிப் பகுதியை நோக்கிய பொழுது புதிய செய்தி ஒன்று தெரியவந்தது. திருக்குறளுக்குப் பல புலவர்கள் அளித்துள்ள பாராட்டுப் பாக்களைப் போல, வீரமாமுனிவர் படைப்புக்கட்கும் பலர் பாராட்டுப் பாடல்கள் பாடியுள்ளனர். அவற்றைத் தொகுத்து, புகழ்ச்சி மாலை, வெற்றி மாலை என்னும் இருபகுதிகளாக்கி, தொன்னூல் விளக்கத்தைப் பதிப்பித்தோர் அதன் இறுதியில் இணைத்துள்ளனர். இரண்டிரண்டு வரிகளில் ஒவ்வொரு செய்யுளும் அமைந்திருந்த போதிலும் அவற்றைக் கூர்ந்து நோக்கியபொழுது அவை அனைத்தும் வெண்பாக்கள் எனத் தெரிய வந்தது. திரு வள்ளுவருக்குப் பாடப்பட்ட திருவள்ளுவமாலை போல வீரமா முனிவருக்குப் பெருமை சேர்க்கவே அவை பாடப்பட்டுள்ளன. அத் தொகுப்பில் காணப்படும் வெண்பாக்களுள் ஓரிரண்டு, ஒரு சில கட்டுரைகளில் மேற்கோளாக ஆளப்பட்டிருப்பினும், அவை எதனின்று எடுக்கப்பட்டன என்பது பற்றியோ, இவ்வகை மாலைகள் உள்ளன என்பது பற்றியோ எவ்வாராய்ச்சி அறிஞரும் இதற்கு முன் குறிப்பிட்டுள்ளதாகத் தெரியவில்லை. 1891 இல் வெளிவந்த தொன்னூல் விளக்கப் பதிப்பிலும் இவை காணப்பட்டில. சென்னைக் கீழ்த் திசைச்சுவடி நூலகத்தில் உள்ள எட்டுச் சுவடிகளும் பார்வை யிடப்பட்டன. அவற்றிலும் இப்பாக்கள் இல்லை. எனவே குடத் தில் இட்ட விளக்காய் உள்ள இவற்றை வெளிப்படுத்துவது துறை யின் முதற்பணியாக எடுத்துக்கொள்ளப்பட்டது.

அவ்வெண்பாக்களுள் சில சிதைந்தும், ஏடு பெயர்த்தெழுதியோர் கவனக்குறைவால் பிழைபட்டும் போயிருந்தமையின் அவற்றிற்குப் பொருள் விளக்கம் செய்வதும் தேவைப்பட்டது. இலக்கண யாப்புக் கிசைய வெண்பாக்களை முதலில் பிரித்துக் காட்டி, எளிதில் பொருள் விளங்கிக் கொள்ளத்தக்க வகையில் சொற்களைப் பின்னர்ப் பிரித்துக் காட்டி, இறுதியில் அவற்றுக்கான பொருள் விளக்கம் தரும் முறை மேற்கொள்ளப்பட்டது. விளக்கங்கட்குக் கீழ் பிறைக் கோட்டிற்குள் சிற்சிலவற்றுக்குக் குறிப்புப் பொருள் முதலியன தரப் பட்டுள்ளன. திருத்தப்பட்ட பிழைகள், மூல பாடவேறுபாடுகள் போன்றனவும், பக்க அடிக்கோட்டிற்குக் கீழ் காட்டப்பட்டு, முறை யான ஆராய்ச்சிப் பதிப்பாக வெளிவர ஆவன செய்யப்பட்டது. மாலைகளின் இறுதியில் வெண்பாக்களின் முதற்குறிப்பகராதிகள் தரப்பட்டுள்ளன.

இத்தகைய மாலைகட்குத் தலைவரான வீரமாமுனிவரின் நன்கு அறியவாராச் சிறப்புக்கள், ஆராய்ந்து தெளியப்பட வேண்டிய

செய்திகள் ஆராய்ச்சி உலகிற்குப் பயன்தரும் எனக் கருதி இருபத்தாறு தலைப்புக்களில் அவர்தம் வாழ்வு, படைப்பு, ஆற்றல், திறன் முதலியவை காட்டப்பட்டு ஒவ்வொரு தலைப்பின் கீழும், தலைப்பின் கருப்பொருள் புலப்பட ஒவ்வொரு வெண்பா யாக்கப்பட்டது. அவ்வவ் வெண்பாவின் பொருள் அவ்வவற்றிற்கு முன்னரே தெளிவு செய்யப்படுவதால் அவ்வெண்பாக்களுக்கு விளக்கம் தரப்பட்டிலது. அவர்தம் பெருமையைப் பொதுப்பட விளக்குவதால் இத்தலைப்புக்களும் வெண்பாக்களும் அடங்கியவற்றுக்கு வாழ்த்துமாலை எனத் தனிப் பெயரிடப்பட்டுள்ளது. இம்மாலையின் தொடக்கத்தில் இறை, மொழி, முனிவர் என்னும் தலைப்புகட்குக்கீழ் ஒவ்வொரு காப்புச் செய்யுளாக மூன்று காப்புச் செய்யுட்கள் இடம்பெற்றுள்ளன.

வாழ்த்துமாலை, புகழ்ச்சி மாலை, வெற்றிமாலை மூன்றனையும் இணைத்து வீரமாமுனிவ மாலைகள் என்னும் பெயரிடப்பட்டுள்ளது. வாழ்த்து மாலையில் அடங்கியுள்ள கருத்துக்களும் வெண்பாக்களும் இந்நூலாசிரியர் யாத்தவை. பிற மாலைகளில் உள்ள வெண்பாக்கள் பெயரறிய வாராப் பலரால் யாக்கப்பட்டுத் தொன்னூல் விளக்கப் பதிப்பாசிரியரால் தொகுக்கப்பட்டவை. அவற்றைப் பிழைநீக்கிச் செம்மை செய்ததும் விளக்கங்கள் தந்ததும் தலைப்புக்கள் இட்டதும் மட்டுமே இந்நூலாசிரியர் பணியாகும். நூலின் கையெழுத்துப்படிகளைத் தட்டச்சில் வடித்துத் தந்த உதவியாளர் திரு. **மா. அமிர்தலிங்கம்** அவர்கள் பணியும் நினைவிருத்தற்குரியது.

பல்கலைக்கழகத் துறைகள் ஆய்வு நோக்கிலும் ஆக்கப் பணிகளிலும் தத்தம் ஆற்றலை முழுதுமாகப் பயன்படுத்த வேண்டும் என்னும் கருத்தினை வலியுறுத்திவரும் எம் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பெருமான் **டாக்டர் பொ. பா. சுந்தரேசனார்** வாழ்த்துரை வழங்கி ஊக்கம் தந்துள்ளார்கள். அவர்கட்கு நெஞ்சார்ந்த நன்றியுடையேன்.

இந்நூலை வெளியிடத் துணைநின்ற அனைவர்க்கும், சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிக்குழுவிற்கும், இம் மாலைகள் வெளிவர அடிப்படை நூலான தொன்னூல் விளக்கப் பதிப்பினைத் தந்துதவிய பேராசிரியர் **டாக்டர் ந. சஞ்சீவி** அவர்கட்கும் என்றும் நன்றியன்.

அன்பன்

சென்னை–5
*8—2—1985.* **சூ. இன்னாசி**

---

## மேற்கோள்


1. 'வீரமாமுனிவர் மலர்ச்செண்டு', *1968*, பக். 4, 5.
2. 'தமிழ் வியாசங்கள்'. 1950, பக். 59.
3. John Murdoch, 'Classified Catalogue of Tamil Printed Books', 1968 p. 40.

# உள்ளுறை


வாழ்த்துரை ... v

முன்னுரை ... vii


## I. வாழ்த்து மாலை


நூன்முகம் ... *1*

காப்புச் செய்யுள் ... *2*

*1.* வாழ்க்கைச் சுருக்கம் ... *3*

*2.* படைப்புக்கள் ... *6*

*3.* ஆசிரியர் ... *12*

*4.* காப்பியப் புலவர் ... *19*

*5.* பிரபந்தப் புனைவர் ... *22*

*6.* இலக்கண அறிஞர் ... *27*

*7.* உரைநல வலவர் ... *29*

*8.* உரைநடை வளவர் ... *33*

*9.* அகராதி முதல்வர் ... *35*

*10.* மொழியியல் முனைவர் ... *38*

*11.* மொழிபெயர்ப்பு மூலவர் ... *40*

*12.* சிறுகதை முன்னோடி ... *43*

*13.* எள்ளல் நூல் வல்லுநர் ... *45*

*14.* வரலாற்று நூலினர் ... *47*

*15.* நாட்டுப்புறவியலாளர் ... *49*

*16.* பாடநூல் வழிகாட்டி ... *51*

*17.* ஆய்வுமுறை நெறிஞர் ... *54*

*18.* தமிழோசை பரப்புநர் ... *57*

*19.* தனித்தமிழ் ஆர்வலர் .. *58*

*20.* ஒப்பியல் விருப்பினர் ... *60*

*21.* ஓவிய விற்பனர் ... *62*

*22.* எழுத்தறி நுணுக்கர் ... *63*

*23.* மருத்துவச் சித்தர் ... *65*

*24.* தமிழக மரபினர் ... *67*

*25.* சமுதாய நினைவினர் ... *69*

*26.* திருமறை பரப்புநர் ... *71*

செய்யுள் முதற்குறிப்பகராதி ... *73*

## II. புகழ்ச்சி மாலை

நூன்முகம்
1. பாமாலை
2. அறநூல்
3. முந்நூல்
4. அறிவு, ஒளி, வாக்கு
5. சிந்திப்பாய் நெஞ்சே
6. புண்ணிய நூல்
7. முப்பால்
8. முற்றும் உள
9. எங்கும் இல
10. நல்தாட்டியனார்
11. ஈரையர்
12. ஒப்பார் யார்?
13. வல்லார் யார்?
14. குறைவிலா நூல்
15. தொன்னூல் விளக்கச்சுடர்
16. தெருள்குரு
17. பொருள் தீபம்
18. கதிரவனே நேர்
19. ஐந்திலக்கணப் பயன்
20. சத்திய வேதப்பொருள்
21. தவமகன்
22. அறிவூற்று
23. கற்றோர் மனைவி
24. திறவுகோல்
25. இன்பம்
26. கற்க எளிதாம்
27. இலக்கண ஆலை
28. இலக்கணக் கப்பல்
29. எழுத்தியல்
30. நூற்பாத்தொகை
31. ஐம்பொருளிற் சிறந்தது
32. இலக்கணத்தில் தொன்னூல் விளக்கம்
33. கலக்கங்கள் நீங்கும்
34. தெள்ளிய நூல்
35. பல்காலும் பயில்
36. தொன்னூல் நெய்
37. தொன்னூல் கனி
38. தொன்னூல் ஆரம்
செய்யுள் முதற்குறிப்பகராதி

# III. வெற்றி மாலை


நூன்முகம்

1. மவுன ஆசாரியன்
2. மவுன ஆசான்
3. ஏம ஒளி
4. நாற்படை
5. அஞ்சனம்
6. சர்க்கரை
7. யாவர்க்கும் அளித்தார்
8. ஏங்காதெடுக்க அளித்தார்
9. பன்னூற்கும் பயன்
10. போதி வைக்கும் வர்த்தி
11. பாவலன் ஆவாய்
12. ஓர்ந்தால் உணர்வாய்
13. தேவை நீ ஆவாய்
14. பின்னும் அகமகிழும்
15. நல்ஆசிரியர்
16. இரத்தின ஆரம்
17. படபடென வாசிப்பாய்

செய்யுள் முதற்குறிப்பகராதி

துணைநூற் பட்டியல்

# வீரமாமுனிவர்
# வாழ்த்து மாலை

# நூன்முகம்

வாழ்த்து மாலை, இந்நூலாசிரியரால் வீரமாமுனிவர் சிறப்புக்களையும், திறன்களையும் விளக்கப் புதுவதாகப் புனையப்பட்டது. இதுகாறும் வீரமாமுனிவர் வரலாறு, திறன் களை வரையறுத்து எழுந்த நூல்களுள் ஐயத்திற்கிடமான கருத்துக்களை அகற்றித் தெளிவுறுத்துவதும், அவர்தம் திறன்களை வகுத்தும் தொகுத்தும் காட்டுவதுமே இதன் நோக்கம். அவற்றை விரித்துரைப்பின் பெரியதொரு வரலாற்று நூலாக அமைதல் கூடும். எனவே சுருங்க உரைத்தலே நெறியாகக் கொள்ளப்பட்டது. எனினும் உறுதிபெறத்தக்க சான்றுகள் ஆங்காங்கே காட்டப்பட் டுள்ளன. பிற மாலைகளோடு இணைத்து இக்கருத்துக்களை வெளிப்படுத்த நோக்கம் கொண்டமையின், அதற்குப் பொருந்தும் வகையில் வெண்பாக்களை யாத்து வாழ்த்து மாலை எனப் பெயரிடப்பட்டது. தொடக்கத்தில் செய்யுள் நூற்போக்குக்கிணையக் காப்புச் செய்யுட்கள் மூன்று இயற்றப்பட்டன. அவை முறையே இறையருள், தமி ழன்னை, வீரமாமுனிவர் வேண்டலாக அமைந்தன.

இம்மாலையை, வளமார்ந்த தமிழ்த்தாயை வையமறியச் செய்த தொண்டருள் முதல்வராகிய வீரமாமுனிவர் பெரு மையை வரையறுத்தும், முறைப்படுத்தியும் கூறும் முதற் றமிழ் மாலை எனக் கொள்ளல் தகும்.

# காப்புச் செய்யுள்

## இறை

அருள்மழை பொழிமுகில் அறிவொளி தருகதிர்
இருளவி முழுமதி இகபர முதல்வனைக்
குருமுனி புகழ்தனைக் குவலயம் மகிழ்வுறத்
தரும்வகைத் திறம்பெறத் தலைகவிழ்த் திறைஞ்சுவன்!

## தமிழ்

தலைமகள் எனப்பலர் தமிழினைப் புகழுவர்;
நிலைமொழி எனுமவள் நிறைவினைத் துலக்குவர்;
அலைகடந் தவள்புகழ் அவனியில் முழக்கிய
தலைமகன் வளம்சொலத் தனயனுக் கருளுவள்!

## முனிவர்

இறைப்புகழ்ப் பணிக்கென இளமையில் துறந்தநல்
மறைமுனி தமிழ்தனை மனங்கொள இசைத்தவை,
நிறைவுற உலகினில் நிலைபெற முயன்றவை
குறையிலை எனத்தர குருவரம் நினைகுவன்!

# 1. வாழ்க்கைச் சுருக்கம்

வானமனைத்தும் அளந்த தமிழென வாழ்த்திய மொழியை முதன்முதல் வைய மறியச் செய்த பெருமைக் குரியவர் வீரமாமுனிவர். இற்றைக்கு வளர்ந்து விட்ட புதிய துறைகள் பலவற்றுக்குத் தமிழில் முதலில் வழிகோலியவர் அவர். முப்பது வயதுக்குமேல் தமிழ் கற்கத் தொடங்கி, முத்தமிழில் துறைபோகிய இத்தாலியர் அவர். அவ்வித்தகரின் வாழ்க்கையைப் பற்றி விரித்துக் கூறும் நூல்கள் பலப் பல. எனினும் அவையனைத்தும் பெஸ் அடிகளார் ஆங்கிலத்தில் இட்ட புள்ளியை' மையமாக வைத்துக் கோலம் புனைய முனைந்தவையே எனலாம்.

கான்ஸ்டண்ட் ஜோசப் பெஸ்கி என்னும் இயற்பெயர் பெற்ற வீரமாமுனிவர் இத்தாலி நாட்டில், வெனிஸ் மாநிலஞ் சார்ந்த காஸ்திகிளியோனே என்னும் ஊரில் பிறந்தவர். கவுண்ட் கொண்டல்போ பெஸ்கி என்பாரும், எலிஸபெத் பெஸ்கி என்னும் அம்மையாரும் இவருடைய பெற்றோரா வர். இவரது இளமைக்கால வரலாறு இதுவரை தெளிவுற வில்லை. கி.பி. 1680-ஆம் ஆண்டு, நவம்பர்த் திங்கள் எட்டாம் நாள் பிறந்தார்; பதின்மூன்றாம் நாள் திருநீராட்டுப் பெற்றார்; 1698-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள், இருபத் தொன்றாம் நாள் இயேசு சபையிற் சேர்ந்தார்; இத்தாலி, இலத்தீன், பிரெஞ்சு, கிரேக்கம் முதலிய மொழிகளில் புலமை பெற்றார்; அடுத்துத் தத்துவம் பயின்றார்; பின்னர் மறையியல் கற்றார். 1709-ஆம் ஆண்டு, செப்டம்பர்த் திங்கள், குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார் என்னும் செய்திகள் மட்டும் தெரிய வருகின்றன.

இந்தியாவிற்குச் சமயப்பணி யாற்ற 1710-ஆம் ஆண்டு வந்தார். இலிஸ்பனிலிருந்து கப்பலில் கோவாவுக்கு வந்து, அங்கிருந்து கொச்சிக்குச் சென்றார். கொச்சிக்கருகில் உள்ள அம்பலக்காட்டுக் குருமடத்தையடைந்தார். பின்னர், கடற்

கரை வழியாகத் தூத்துக்குடிப் பகுதிக்கு வந்தார். 1711, மேத் திங்கள், எட்டாம் நாள் மதுரை மறைபரப்பு மாநிலத்தைச் சார்ந்த காமநாயக்கன்பட்டியை அவரது பணித்தளமாகக் கொண்டார். தமிழகத்தில் பணியாற்றும் துறவியர், தமிழ ராகவே மாற வேண்டும்; தமிழரொடு தமிழராக ஒன்றித்தல் வேண்டும் என்னும் நெறியை அவருக்கு முன் வகுத்துச் சென்றவர் தத்துவ போதகர் என்னும் இராபர்ட் டி நோபிலி அடிகள். அவரைப் பின்பற்றித் தம் நடையுடை முறைகளை மாற்றிக் கொண்டு தமிழ் முனிவராகச் செயல்படத் தொடங் கினார்.

வீரமாமுனிவர் தம் சமயப்பணிக்காகத் தமிழகமெங்க ணும் சென்றுள்ளார். போக்குவரத்து வசதிகளற்ற 18–ஆம் நூற்றாண்டில் ஒரே ஆண்டில் பலவிடங்களுக்குச் சென்று பணியாற்றியுள்ளார். காமநாயக்கன்பட்டியை யடைந்த அதே ஆண்டில், திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த புதுப்பட்டி, குருக்கள்பட்டியிலும் பொறுப்பேற்றார். அவ் வாண்டு நவம்பர்த் திங்களில் திருச்சிராப்பள்ளியையடுத்த ஆவூரில் இருந்தார். தஞ்சாவூர் அரசுக்குட்பட்ட அய்யம் பட்டிப் பகுதியிலும் தொண்டாற்றினார். மறுமுறை 1713–இல் குருக்கள் பட்டியில் பொறுப்பேற்றதோடு கயத்தாறு, காமநாயக்கன்பட்டி முதலிய இடங்களையும் கண்காணித்து வந்தார். 1716–இல் மறவ நாட்டிலும், மதுரையிலும் பொறுப் பேற்றுள்ளார்.

1717–இல் உடல் நலக்குறைவால் புதுச்சேரி சென்று திரும்பிக் காவிரிக் கரையிலுள்ள வடுகர்பட்டியில் பணியாற் றினார். 1720, 21–ஆம் ஆண்டுகளில் ஏலாக்குறிச்சியில் வாழ்ந்ததாகத் தெரிகிறது. 1726–இல் மறைத்தொண்டு புரிந்த தற்காகக் கொலை செய்யப்பட்ட அருளானந்தரின் புது மைகள் பற்றி ஆய்ந்தறிய மறவ நாடு சென்றார்.

1727 முதல் 1740 வரை உள்ள ஆண்டுகள் வீரமா முனிவர் வாழ்வியலின் பொற்காலம் ஆகும். மரி அன்னைக்கு ஏலாக்குறிச்சியை அடுத்த திருக்காவலூரில் ஆலயம் எழுப் பியதும், தமிழ் அன்னைக்குக் கோனான்குப்பத்திலிருந்து காப்பியம் புனைந்ததும், வேறுபல இலக்கிய, இலக்கண, உரைநடை, அகராதிகளைப் படைத்தளித்துப் பெருமை கொண்டதும் இக்காலமேயாம். சந்தாசாகிப் போன்றோரின்

அரசுத் தொடர்புகள் கிட்டியதால் பெருஞ்சிறப்புக்கள் கொண்டதும் இக்காலத்தே தான்.

1740–இல் வீரமாமுனிவர் வாழ்க்கை இறங்குமுகம் காணத்தொடங்கியது. சந்தாசாகிபின் வீழ்ச்சி வீரமாமுனிவரையும் தாக்கியது. அவர் வாழ்ந்த பகுதியில் அமைதி காண இயலவில்லை. 1742–இல் அப்பகுதியை விட்டு நீங்கித் தூத்துக்குடி, மணப்பாடு ஆகிய பகுதிகளுக்கு வந்து வாழ்ந்தார். 1746–இல் அம்பலக்காட்டுக் குருமடத்திற்குப் போய்ச் சேர்ந்தார். அங்கு, 1747, பிப்ரவரித் திங்கள், 4–ஆம் நாளில் இறைவன் திருவடியடைந்தார்.

முப்பதாம் வயதில் தமிழகம் போந்த வீரமா முனிவர் முப்பத்தாறாண்டுகள் சமயப் பணியாற்றினார். அப்பணிக்கிடையே அவரியற்றிய அரிய படைப்புக்கள், புரிந்த மொழிப் பணிகள் அளப்பரியன. அவற்றை அறிந்து போற்றிப் பரவுதல் அறிஞர் கடனாம்.

## வாழ்த்துப்பா

முந்நூறு ஆண்டுகட்கு முன்னோன்; பெசுகியவன்
வந்தநிலத் தோனாக வாழ்ந்தநற் — செந்தமிழன்
விற்பனன் பல்வகையில்; வீரமுனி நாமத்தான்
நற்புலவன் நாமத்தை நாட்டு.

## குறிப்பெண் விளக்கம்

1. Besse, Fr. L., 'Fr. Beschi, His Times and Writings', 1918.

# 2. படைப்புக்கள்

வீரமாமுனிவரின் படைப்புக்கள் பல்வகையின; பல் திறத்தன; பல்நடையின; பல்அமைப்பின. தமிழில் இலக்கணம் வகுத்தார்; இலக்கியம் கண்டார்; காப்பியம் படைத்தார்; பிரபந்தம் புனைந்தார்; உரைநடை எழுதினார்; அகராதி வரைந்தார்; சிறுகதைக்கு முதற்கோடிட்டார்; எழுத்துகட்குப் புதுவடிவம் காட்டினார்; மொழிபெயர்ப்புப் பணியாற்றினார்; முதுதமிழ்ப் புலவர்களைப் பிற நாட்டா ருக்கு அறிமுகப்படுத்திய முதல்வரும் ஆனார்.

இத்தகைய பணிகளை நமக்குப் புலப்படுத்தும் அவரு டைய படைப்புக்களை மிகுதிப்படுத்திச் சொல்லும் போக்கு ஒருபுறமும், குறைத்து மதிப்பீடு செய்யும் போக்குப் பிறி தொரு புறமும் காணப்படுகின்றன. ஆதலின் அவர் பெய ரால் வழங்கப்படுவனவற்றுள் அவருடையவை எவையென உறுதி செய்தல் உண்மை மதிப்பீட்டிற்குத் துணை நிற்கும்.

வீரமாமுனிவர் தமிழகத்தில் தாம் வாழ்ந்த முப்பத் தாறாண்டுகளில் முப்பத்தாறு நூல்கள் படைத்ததாகப் பெருமை கொள்ளும் கட்டுரைகள் சில வெளிவந்துள்ளன. அக்கருத்துக்கள் தவறானவை எனவும், முப்பத்தாறு என்னும் முடிவினைத் திட்டமிட்டுக் கொண்டு அதற்கேற்ப ஏதேனும் சிலவற்றைத் தள்ளுவதும், கொள்ளுவதுமாகிய முயற்சி ஆராய்ச்சியில் நிலைபெறாதெனவும் சதுரகராதி ஆராய்ச்சி என்னும் நூலில் காட்டப்பட்டுள்ளது.[1] இதுவரை கிடைத்த சான்றுகளின் அடிப்படையில் வீரமாமுனிவரின் படைப்புக்களாக உறுதி செய்யத்தக்கவை இருபத்தைந் தெனலாம். **தேம்பாவணி** என்னும் காப்பியமும், பிற செய்யுள் படைப்புக்களாகக் **கித்தேரியம்மாள் அம்மானை, திருக்காவலூர்க் கலம்பகம், அன்னை அழுங்கல் அந்தாதி, அடைக்கலமாலை, அடைக்கல நாயகிமேல் வெண்கலிப் பா, பதிகம், வண்ணம்** ஆகிய ஏழு செய்யுள் நூல்களும்,

பரமார்த்த குரு கதை, வேதியர் ஒழுக்கம், வேத விளக்கம், லூத்தர் இனத்தியல்பு, பேதகம் மறுத்தல், வாமன் சரித்திரம் ஆகிய ஆறு உரைநடை நூல்களும், தொன்னூல் விளக்கம், செந்தமிழ் இலக்கணம், கொடுந்தமிழ் இலக் கணம், இலக்கணத் திறவுகோல் ஆகிய நான்கு இலக்கண நூல்களும், சதுரகராதி, தமிழ்-இலத்தீன் அகராதி, போர்த் துகீஸ்-இலத்தீன் - தமிழ் அகராதி ஆகிய மூன்று அகராதி களும், திருக்குறள் மொழிபெயர்ப்பும், திருநாட் கணக் கீடாகிய திருச்சபைக்கணிதமும், திருக்கடையூர்த் திருச் சபையினர்க்கு எழுதிய நிருபம், பொது நிருபம் ஆகிய அறிவிப்பு மடல் வடிவினவாகிய இரண்டும் வீரமாமுனிவர் படைப்புக்கள் என்பதில் ஐயமில்லை. அவர் பெயரால் வழங்கும் மற்றவற்றுள் சில அவருடையவல்லனவெனவும், வேறுசில ஒரே படைப்பே வெவ்வேறு பெயர்களில் வழங்கி வருகின்றனவெனவும், தனித்துக் கருதுதற்குரியன அல்ல வெனவும் ஆய்ந்து முன்னரே காட்டப்பட்டுள்ளது.[2]

மருத்துவ நூல்கள் பல வீரமாமுனிவர் பெயரால் வழங் கப்படுகின்றன. அண்மையில் அவற்றுட் சில வெளிவந் துள்ளன. வீரமாமுனிவருக்குப் பரந்த மருத்துவ அறிவு இருந்துளது என்பது அவரது தமிழ்-இலத்தீன் அகராதி வழியாகத் தெரிய வருகிறது. எனினும் வெளிவந்துள்ள நூல்கள் அவர் பெயரில் வழங்கினாலும் நூலிற் கூறப்படு கின்ற பொருள், சொற்களை ஆய்வோருக்கு அவருடையன வல்ல என்பது எளிதில் விளங்கும். இடைக்காலத் தமிழ கத்தில் மருத்துவக் குறிப்புக்கள், நூல்கள் வழங்கியவர் பலர் அகத்திய முனிவர் பெயரில் அவற்றை வெளிப்படுத்தியது போன்றே, சிலர் வீரமாமுனிவர் பெயரில் வெளியிட்டிருப் பதாகத் தோன்றுகிறது.

**'அனுபோக வைத்திய சிகாமணி'** என்னும் நூல் வீரமாமுனிவர் அருளிச் செய்ததாக எஸ். ஏ. கே. சுவாமி என்பார் 1969-இல் பதிப்பித்துள்ளார். அந்நூலுக்கு முக வுரை தந்துள்ள வாசுதேவன் என்பார் வீரமாமுனிவர் பாடி யுள்ள செய்யுளுக்கு இனிய எளிய நடையில் விளக்கம் தந்துள்ளதாகக் குறிப்பிடுகிறார். வீரமாமுனிவர் காலத்தில் தமிழ்நாட்டில் ஆங்கில ஆதிக்கமோ, ஆங்கில மொழிச் செல்வாக்கோ இல்லை. அவருடைய தமிழ்ப் படைப்புக் களில் ஐரோப்பிய மொழிச் சொற்களைப் பயன்படுத்திய

தில்லை. ஐரோப்பியச் சிறப்புப்பெயர்களைத் தம் காப்பியத்தில் பயன்படுத்தியபோதும் தமிழ் மரபினுக்கியையத் தமிழாக்கம் செய்தோ, புதிய சொற்களைப் படைத்தோதான் காட்டியுள்ளார். அவ்வாறிருக்க அனுபோக வைத்திய சிகாமணியில் இங்கிலாண்ட் (England), கிளீஸிரின் (Gleasarin), பெப்ரமெண்ட் (Peppermint) போன்ற ஆங்கிலச் சொற்கள் இடம்பெறுகின்றன.[3]

நசகாண்டம் என்னும் மருத்துவ நூல் 1980–இல் ந. கோவிந்தசாமியால் பதிப்பிக்கப்பட்டுள்ளது. அதன் உரை மா. வடிவேலு முதலியாரால் எழுதப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அந்நூலையும் வீரமாமுனிவர் இயற்றினார் என ஒப்புதற்கு இயலவில்லை. ஏனெனில் திருக்குறள் இலத்தீன் மொழி பெயர்ப்பு வீரமாமுனிவரால் செய்யப்பட்டுள்ளது. அறத்துப்பால், பொருட்பால் இரண்டனுக்கு மட்டுமே செய்யப்பட்டுள்ளது. காமம் பற்றிச் சிந்தித்தல் முனிவர்க்குத் தகாதெனக் காமத்துப்பாலை மொழிபெயர்க்க முனைந்திலர். தம் காப்பியத்திலும் காம இன்ப உணர்வு எழ வழிவகுக்காமல் பாடி முடித்துள்ளார். அவ்வாறிருக்க, தாம் படைத்த மருத்துவ நூலில், ஒருவர் மீது ஒரு பெண் காம உணர்வால் கொண்ட நேசம் விடாமல் இருக்க மருந்து கூறுவாரா? நசகாண்டம் பத்தாம் செய்யுள் அவ்வாறு கூறுகிறது. இறுதியாகத் தாம் படைத்த தமிழ்–இலத்தீன் அகராதியில் உள்ள மருத்துவக் குறிப்புக்கள் அனுபோக வைத்திய சிகாமணி, நசகாண்டம் ஆகிய இரு நூல்களிலும் இல்லை. கிடைக்கின்ற ஓரிரு குறிப்புக்களும் மாறுபாடாகக் காணப்படுகின்றன. எனவே யாரோ வேறு சிலர் எழுதிய நூல்களை வீரமாமுனிவர் பெயரால் வெளியிட்டுள்ளதாகத் தோன்றுகிறது.

வீரமாமுனிவருடைய சிறந்த படைப்புகள் சிலவற்றை அவர் படைத்திருப்பாரா என்னும் ஐயத்தைத் தோற்றுவிக்கும் கருத்துக்களும் சிலரால் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.[4] அவ் ஐயத்திற்கு அடிப்படை இத்தகையதோர் அரிய படைப்பினை அயல் நாட்டார் எழுதும் ஆற்றல் பெற்றிருக்க இயலாது என்பதுதான். எல்லாம் எல்லாராலும் செய்ய இயலாதெனினும், சிலருக்குரிய தனித்த ஆற்றல் வியப்பெய்த வைக்கிறது. பைரன், பாரதி போன்றோரின் இளமைக்காலக் கவித்திறமும், மெக்காலே என்பாரின் மனப்

பாடம் செய்யும் திறமும், சதாவதானி செய்குத்தம்பிப் பாவலரின் நினைவாற்றல் திறமும், சகுந்தலா அம்மையாரின் கணித வேகமும் எல்லோருக்கும் கைகூடி வருவனவல்ல. அவ்வாற்றல் எல்லோராலும் பெற இயலாது என்பதால் அவர்தம் திறமையினை எவரும் ஐயுற்றிலர். அதுபோன்றதோர் இறையருளின் தனித்த ஆற்றல் வீரமாமுனிவருக்கு இருந்துள்ளது. மேலும் தம் இளமைப் பருவத்தில் பன்மொழிகளைக் கற்றுக் கொள்ளும் ஆர்வம் அவருக்கு இயல்பிலேயே இருந்துள்ளது. அவ்வார்வமும் அவருக்குத் துணை நின்றிருக்கலாம்.

அவ்வையப்பாட்டினை எழுப்புபவர்கள் குறிப்பாகத் தேம்பாவணி என்னும் காப்பியத்தையும், சதுரகராதியையுமே ஐயுறுகின்றனர். தேம்பாவணிக் காப்பியத்தை முழுமையாகப் படித்துணரின் மேனாட்டார் ஒருவர் படைப்பு அஃதென்பது தெளிவுறும். ஐயுறுவோர் தேம்பாவணியை முழுமையாகப் படித்திலரோ என்னும் வினா எழுவதற்கு அவர்தம் குறிப்புச் சான்றாகிறது. தேம்பாவணியில் இயேசுபிரான் வாழ்க்கைக் குறிப்புக்கள் அமைந்து கிடக்கின்றனவன்றி ஐயுறுவோர் குறிப்பிடுவது போன்று அக்காப்பியத் தலைவன் இயேசுபிரான் அல்லர்; அவர்தம் வளர்ப்புத் தந்தையாகிய சூசையே. சூசையின் வரலாறே தேம்பாவணிக் காப்பியம் என்பதனை, **'ஆரிய வளன்றன் காதை அறமுதல் விளங்கச் சொல்வாம்'** என்னும் பாயிர முதற் செய்யுட் பகுதியே விளக்கும். மேலும் மேனாட்டார் ஒருவர் படைப்பே தேம்பாவணி என்பதைச் சில செய்யுட்களில் காணப்பெறும் மொழி மரபுகள் விளக்கும். வீரமாமுனிவரின் குற்றியலிகரம் பற்றிய புதுச்சிந்தனை காணப்படுதல், உளப்பாடுண்மை உளப்பாடின்மை என்னும் இருவேறு தன்மைப் பன்மை வடிவங்களிருக்கச் சில மேனாட்டு மொழிகள் போன்று 'நாம்' என்னும் ஒரே வடிவத்தையே கையாளுதல், சுட்டுக்களைச் சாரியைகளாகப் பயன்படுத்துதல், இடைச் சொற்களை இடம்மாற்றிச் செய்யுட்களில் அமைத்தல், ஏதேனும் ஒன்றனை ஏற்கும் முறையில் 'ஆம்' (yes) எனக் கூறி ஒப்புதல், 'நான்' என்னும் சொல்லினை மனிதன் என்னும் பொருளில் கையாளுதல், 'செய்' என்னும் வாய்ப்பாட்டுப் பகுதி வடிவத்தை **'உண்** எனவே' (உண்ணும் எனவே), **தாழ்** ஓடி (தாழ்ந்து ஓடி) என்றாற் போன்று மற்ற

வற்றிற்கும் கடைக்குறைபோல் பயன்படுத்துதல் ஆகிய வழக்காறுகள். தேம்பாவணி மேனாட்டு முனிவர் படைப்பே என்பதனைத் தெளிவாக்கும் என்னும் குறிப்பு, 'தேம்பாவணித்திறன்' என்னும் நூலில் தக்க சான்றுகளுடன் விளக்கப்பட்டுள்ளது.[5]

மேலும் வீரமாமுனிவரின் நூல்களிலேயே அகச் சான்றுகள் சில உள. தேம்பாவணியின் புரோகிதப் படல முப்பதாம் பாடலில் தம் நாட்டை "எனையீன்ற இத்தாலியா நாடு" எனக் குறிப்பாகப் பெறவைத்துத் தாம் இத்தாலியர் என்பதைக் காட்டுகிறார். தம் செந்தமிழ் இலக்கண 113-ஆம் விதியில், விருத்தங்களின் வண்ண வேறுபாடு பற்றிக் கூறும் பொழுது, "12, 016 பாடல்களுடைய இராமாயணத்தில் கம்பன் 87 வண்ணங்களை அறிமுகப்படுத்தியிருக்க 3615 பாடல்களைக் கொண்ட தேம்பாவணியில் எளிதாக, 90 வண்ணங்களைக் காட்டியிருக்கிறேன்" எனக் கூறுவர். இவற்றினின்று தேம்பாவணியைப் படைத்தவர் வீரமா முனிவரே என்பது தெளிவுறும்.

சதுரகராதி பற்றி ஐயம் எழுப்புவோர் அந்நூலுக்கு ஆசிரியரே எழுதியுள்ள முன்னுரையைக் கண்ணுற்றிருப் பதற்கான வாய்ப்பில்லை. ஏனெனில் அண்மையில்தான் தமிழில் அம்முன்னுரை முழுமையாக முதன்முதல் வெளி வந்துள்ளது.[6] அம்முன்னுரையினை ஆசிரியர் இலத்தீனில் எழுதியுள்ளார். அம்மூலவடிவமும் 'சதுரகராதி ஆராய்ச்சி' என்னும் நூலில் பின்னிணைப்பாகத் தரப்பட்டுள்ளது. தமிழ் நாட்டைச் சார்ந்த பதினெட்டாம் நூற்றாண்டுத் தமிழ்ப் புலவருக்கு இலத்தீன் எவ்வளவில் தெரியும்? இயேசுசபைத் தொண்டர்கட்காகவே இந்நூலைப் படைக்கும் கவலை தமிழ்ப் புலவர்கட்கு ஏன்? என்பன போன்ற கேள்விகள் எழுகின்றன.

மேலும் சதுரகராதியை நுணுகி ஆய்வோருக்கு மேனாட் டார் படைப்பே என்பது தெளிவாகும். சில இடங்களில் மரபு பற்றி நினையாமல் தருக்கவியல் நோக்கில் மட்டுமே சிந்தித்து ஆசிரியர் சொற்களை அமைத்துப் பொருள் கூற முற்பட்டிருக்கிறார்.[7] மேலும் கிறித்தவக் கோட்பாடுகட்கான விளக்கங்கள் சிலவும் தொகையகராதியில் இடம் பெறு கின்றன.[8] இக்குறிப்புக்கள் அனைத்தும் கிறித்தவ

மேனாட்டு இயேசு சபை சமயத் தொண்டராகிய வீரமா முனிவரே சதுரகராதியைப் படைத்தார் என்பதனை நிலை நாட்டும்.

## வாழ்த்துப்பா

படைப்புப் பலபடைத்த பாவலனின் பாரில்
கிடைத்தற் கரியவுயர் கீர்த்தி — அடைந்த
இருபத்து மைந்தும் இனியநூல் என்றே
சிரந்தாழ்த்தி வாழ்த்துவது சீர்.

## குறிப்பெண்கள் விளக்கம்

1. சதுரகராதி ஆராய்ச்சி, பக். 20–22.
2. ,, ,, பக். 22–24,
3. அனுபோக வைத்திய சிகாமணி, பக். 1, 2, 3.
4. Arunachalam, M., 'Some Christian Pioneers in Tamilnadu', Vivekananda Kendra Patrika, Aug. 1979, pp. 45–46.
5. தேம்பாவணித் திறன், பக். 79–82.
6. சதுரகராதி ஆராய்ச்சி, பக். 64–66.
7. சதுரகராதி ஆராய்ச்சி, பக். 105–106.
8. ,, ,, ப. 155.

# 3. ஆசிரியர்

தேம்பாவணி, சதுரகராதி போன்ற படைப்புகள் வீரமா முனிவருடையவைதாமா என ஐயுறுவோர், அவற்றின் படைப்பாளராகச் சுப்பிரதீபக் கவிராயரைக் குறிக்கின்றனர். இல்லையேல் சுப்பிரதீபக் கவிராயர் வீரமாமுனிவருக்கு உதவியிருக்கலாம் எனக் கருதுகின்றனர். தேம்பாவணி கிறித்தவக் காப்பியமாதலின், சுப்பிரதீபக் கவிராயர் முன்னர்ச் சைவராயிருந்து பின்னர்க் கிறித்தவராகி விட்டார் எனவும் கூறத் தலைப்படுகின்றனர். இக்கருத்துக்கள் அடிப் படையற்றவை; ஆய்வின் அடிப்படையில் எழுந்தனவல்ல வென்பது முற்கட்டுரையால் விளங்கும். எனினும் வீரமா முனிவர் வாழ்க்கை பற்றி எழுதியோர் சிலர் சுப்பிரதீபக் கவிராயரே அவர்தம் ஆசிரியர் என்னும் கருத்தினைத் தொடர்ந்து எழுதிவருகின்றனர். அக்கருத்து, பொருத்தமுறத் தோன்றவில்லை. ஏனெனில் சுப்பிரதீபக் கவிராயருக்கும் வீரமாமுனிவருக்கும் யாதொரு தொடர்பும் இருந்திருக்க வழி யில்லை. இக்கருத்து ‘சதுரகராதி’ பற்றிய ஆய்வேட்டில் (பிளச். டி. ஆய்வேடு, 1966) நிறுவப்பட்டுள்ளது.[1] இவ்வாறு நிறுவப்பட்டிருப்பதற்கான காரணங்களை மூவகைப்படுத்த லாம். முதலாவது வீரமாமுனிவரது ஆசிரியர் இவர் என்பதற் கான அடிப்படை அறிகுறி எதுவும் இல்லை என்பதாம். அதற்கான காரணங்கள் பின்வருமாறு:

(1) இயேசு சபையினர் தம் மேலாண்மையருக்கு எழுதிய கடிதங்களில் குறிப்பும் எதுவும் இடம் பெறவில்லை.

(2) தமக்கு உதவியவரை நினைவுகூரும் வீரமா முனிவர் சுப்பிரதீபக் கவிராயரைப் பற்றி யாதொன்றும் குறிப்பிடவில்லை.

(3) செந்தமிழ் இலக்கண முன்னுரையில் சில புலவர்கள் பற்றிக் குறிப்பிடுகிறார். அப்புலவர்

களுள் ஒருவராகச் சுப்பிரதீபக் கவிராயர் இடம் பெற்றிலர்.

(4) காப்பிய மரபினைப் போற்றித் தேம்பாவணியில் வீரமாமுனிவர் தம் ஆசிரியரைக் குறித்திருக்கலாம். அவ்வாறு எவரையும் குறிப்பிடவில்லை.

(5) சதுரகராதியில் வியாசர், வான்மீகி, கம்பன், ஔவை பற்றிக் குறிப்பிட்டு விளக்குகிறார். சுப்பிர தீபரைப் பற்றி விளக்கவில்லை.

(6) சுப்பிரம் — மிகுமொளி, வெண்மை; சுப்பிரதீபம்– மிகுமொளி, வடகீழ்த்திசையானை என விளக்கு கிறார். ஆயின் 'ஓர் புலவர்' எனப் பிற புலவோர் சிலரைச் சொற்பொருளில் குறிப்பதைப்போல இவரைக் குறிப்பிடவில்லை.

இரண்டாவதாக சுப்பிரதீபர் வரலாறே தெளிவாகாத நிலையில் எவ்வாறு ஆசிரியர் என்பது மட்டும் தெளிவாகும் எனக் கேட்கப்பட்டிருக்கிறது. வரலாறு தெளிவாகவில்லை என்பதற்கான காரணங்கள் பின்வருமாறு:

(1) புலவர்கள் பற்றிய வரலாற்று நூல்களில் வரலாற்றுத் தெளிவில்லை. சுன்னாகம் குமாரசாமி என்பார் தம் நூலில் பெயர் மட்டும் சுட்டுகிறார். சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் தமிழ்ப்புலவர் வரலாற்று வரிசை நூல்களில் 6–ஆம் நூலிலேயே அடிகள் வரலாற்றைக் கூறுகிறது; 16–ஆம் நூலிற் றான் சுப்பிரதீபரைக் கூறுகிறது; அதற்கு வரலாறு அறியப்படாமையே காரணமெனலாம்.

(2) கூறும் வரலாறுகளும் ஒன்றனுக்கொன்று முரண் படுகின்றன.

(3) காலத் திட்பம் தெளிவுறவில்லை.

(4) ஒருவர் கூற்றிலேயே (இராய. சொ.) காலக் குழப்பம் உள்ளது.

(5) சுப்பிரதீபர் எழுதிய நூற்பொருளிலேயே குழப் பங்கள் தீரவில்லை.

மூன்றாவதாக அவரது சொற்பிரயோகமே அவர் வீரமா முனிவருக்கு ஆசிரியரல்லர் எனக் காட்டுகிறது. பலபட்டடைச் சொக்கநாதர் பாடிய வெண்பாவில் விறலிவிடுதூது வரிகளும் அவற்றைப் பாடிய சுப்பிரதீபரும் இடம் பெறுவதால் விறலிவிடுதூதினை அவர் பாடியது உறுதியாகிறது. அவர் பாடிய விறலிவிடுதூதில் உயர்வுப் பன்மை (Honorific Singular) பயன்படுத்தப்படுகிறது. முனிவர் சிந்தாமணியில் தவிர இவ்வகைச் சொல்லாட்சியை எங்கும் கண்டிலேன் எனக் கூறியுள்ளார். எனவே அவர் சுப்பிரதீபக் கவிராயர் மாணவராயிருந்திருந்தால் அவரது சொல்லாட்சியை அவசியம் அறிந்திருப்பார்.

ஜே. ஜி. சுந்தரம் என்பார் சுப்பிரதீபக் கவிராயரும் சுப்பிரமணிய தீட்சதரும் ஒருவரே எனக் கருதுகிறார்.[2] அக்கருத்துச் சிலருக்கு சுப்பிரமணிய தீட்சதர் வீரமாமுனிவரின் ஆசிரியராக இருந்திருத்தல் சாலுமோ என எண்ண வைத்தது.[3] அக்கருத்தும் ஏற்றுக்கொள்ளத் தக்கதன்று.

இலக்கணமும் எழுதி அதற்கான உரையும் எழுதியோருள் சுப்பிரமணிய தீட்சதரும் ஒருவர். வீரமாமுனிவர், வைத்தியநாத தேசிகர், சுப்பிரமணிய தீட்சதர் ஆகியோர் சற்று முன்பின்னாக வாழ்ந்தனர். எனவே அதற்கான வாய்ப்புண்டு என எண்ண இடமுண்டு. எனினும் ஆழ்ந்து நோக்கின் அத்தொடர்பிற்கு வழியில்லை என்பதற்கான காரணங்கள் சில காணக் கிடக்கின்றன. வீரமாமுனிவரின் தொன்னூல் விளக்கத்தில் அகத்தியம், அகப்பொருள் விளக்கம், தண்டியலங்காரம், தொல்காப்பியம், நன்னூல், நேமிநாதம், பாட்டியல், புறப்பொருள் வெண்பாமாலை, பேரகத்தியம், பொருத்தவியல், மயேச்சுரர் யாப்பு, யாப்பருங்கலக் காரிகை, யாப்பருங்கலம், விருத்தப்பாட்டியல், வீரசோழியம், வெண்பாப் பாட்டியல் முதலிய இலக்கண நூல்கள் எடுத்தாளப்படுகின்றன.[4] ஆனால் பிரயோக விவேகம் எடுத்தாளப் பெறவில்லை. காக்கைப் பாடினியார், கையனார், நத்தத்தனார், பல்காயனார் போன்ற இலக்கண ஆசிரியர்களின் நூற்பாக்கள் தரப்படுகின்றன.[5] திவாகரம், ஆசிரிய நிகண்டு போன்ற நிகண்டுகள் ஆளப்பெறுகின்றன.[6] இருமொழிமாலை, கம்பராமாயணம், காசி காண்டம், சிந்தாமணி, சிலப்பதிகாரம், திரிகடுகம், திருக்குறள், நாலடியார், நைடதம், பாரதம் போன்ற இலக்கியங்கள்

சுட்டப்படுகின்றன.[7] உபதேச காண்டம், நியாய சூடாமணி, புதிய நுட்பம் போன்ற நூல்களும், ஔவை, மெய்ம்மறையா சாரியனார் போன்றோர் கருத்துக்களும் இடம்பெறுகின்றன.[8] ஆயினும் சுப்பிரமணிய தீட்சதர் பற்றியோ, பிரயோக விவேகம் பற்றியோ யாதொரு குறிப்பும் இல்லை. பிரயோக விவேகத்தில் சொல்லுக்கு விளக்கம் போலப் பல தொடர்கள் அமைந்துள்ளன. எடுத்துக்காட்டாகப் 'பிரதிக்கினை மேற் கோளெனப் பெறும்' என்னும் தொடரைக் கூறலாம்.[9] பிரதிக்கினை என்றால் மேற்கோள் என்பது இதன் பொருள். இப்படிப் பொருள் விளக்கமாக்க வேண்டிய சொற்களை அகராதியில் எடுத்துக்காட்டிப் பொருள் விளக்குவது வீரமா முனிவரது மரபு. ஆனால் சதுரகராதியில் பிரதிக்கினைப் இடம் பெறவில்லை. இவ்வாறே 'இயற்கை சகசம் செயற்கை கந்துகம்' என்ற தொடரில் கந்துகத்தின் மறுபெயர் செயற்கை என்பது பெறப்படுகிறது. அகராதியில் கந்துகத்திற்குக் குதிரை, குறுநில மன்னர், பந்து எனப் பொருள் கூறுபவர் செயற்கை என்பதனைக் கூறவில்லை. வடசொல், பிற மொழிச்சொற்களின் தமிழ்த் திரிபுகளை அகராதியில் ஆள் வதும் முனிவரது மரபு. 'பிரதீகமென்பது பதிகமென நின்றது'[10] என்னும் தொடரில் பதிகம் பிரதீகத்தின் திரிபு எனப்பெறப்படுகிறது. அகராதியில்பிரதீகம் என்றசொல்லே இடம்பெறவில்லை. 'திரமிளமென்பது தமிழெனத்திரிதலு மது' என்னும் தொடரால் திரமிளந்தான் தமிழெனத் திரிந்தது எனப் பெறப்படுகிறது.[11] 'தமிழ் – திரமிடம், திரவிடம், திராமிடம்' எனப் பொருள் அகராதியில் சுட்டுகின்ற அடிகளார் திரமிளம் என்ற வடிவையே சுட்டவில்லை. திரமிளம் என்பதனை அறிந்திருந்தால் சொல்லாது விட்டிருப் பாரா?

சொற்களுக்குப் பொருள் கூறும்போது முன்னோர் சொன்ன அனைத்தையும் சேர்த்துக் கூறுவது முனிவர்தம் மரபு. சுப்பிரமணிய தீட்சதர், அம்பலத்தாடி, குடக்கூத்தாடி, நூலோதி, சடாதாரி, வேடதாரி, சோமயாசி ஆகிய சொற் களை உயர்திணைக்கண் இகரஞ் சேர்ந்திறுதலாகிய கிருதந் திற்கு எடுத்துக்காட்டுக்களாகத் தருகிறார்.[12] இவை சிவனின் வேறு பெயர்களாம். எழுபத்தைந்துக்கு மேற்பட்ட சொற்கள் சிவனின் பெயர்களாக இடம்பெறும் அகராதி யில், அம்பலத்தாடி, குடக்கூத்தாடி, நூலோதி, வேடதாரி, சோமயாசி போன்ற சொற்கள் இடம்பெறவில்லை. பிரயோக

விவேகம் அறிந்திருந்தால் இப்பெயர்களையும் சிவனின் பெயர்களாகக் குறிப்பிட்டிருப்பார்.[13] எனவே சுப்பிரமணிய தீட்சதர் அடிகளார் ஆசிரியர் என்பதும் ஒப்புதற்கு இல்லை.

சுப்பிரதீபக் கவிராயர், சுப்பிரமணிய தீட்சதர் இருவரின்றி வேறு யார்தாம் வீரமாமுனிவரது ஆசிரியர் என்னும் வினா எழுகிறது. வெளிநாட்டுத் துறவியர் இங்கு வந்து பணிபுரிய முற்பட்டதும் அவ்வவ்விடத்தில் வாழும் எழுதப் படிக்கத் தெரிந்தோரிடம் எழுத்து முறைகளைக் கற்றுக் கொண்ட பின்னர், தாமே பன்முறை முயன்று அவற்றில் பயிற்சி பெறுவதே இயல்பாக இருந்து வந்துள்ளது. அவ்வாறே வீரமாமுனிவரும் தாம் முதன்முதல் வந்தடைந்த தூத்துக்குடி காமநாயக்கன் பட்டிப் பகுதியில் வாழ்ந்த தமிழறிந்தோரிடம் எழுத்து முறைகளைக் கற்றுக்கொண்டு பின் தம் சொந்த உழைப்பாலும் முயற்சியாலும் பழந்தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றுத் தெளிந்திருக்கலாம். முதன்முதல் எழுத்துமுறைகளைக் கற்றுத் தந்தோர் பெரும் புலவோராக இருந்திருத்தல் வேண்டும் என்ற நியதி ஒன்றும் இல்லை. 'முயற்சி திருவினையாக்கும்', 'வல்லவனுக்குப் புல்லும் ஆய்தம்' போன்ற முதுமொழிகளை வீரமாமுனிவரின் வாழ்வியல் வெற்றிகட்கு விளக்கங்களாகக் கொள்ளலாம்.

## வாழ்த்துப்பா

குருமா முனியின் குருவாகக் கூறும்
திருவார்ந்த நல்லோர்த் தெளியோம் – அருளார்
இறைவனே ஆசான் இயல்பூக்கம் தோழன்
மறைமுனி கண்டடைந்த மாண்பு.

## குறிப்பெண்கள் விளக்கம்

1. சதுரகராதி ஆராய்ச்சி, பக். 15–19.
2. தமிழ்த் தொண்டர் வீரமாமுனிவர், பக். 54.
3. வீரமாமுனிவர் ஒரு விளக்கம், பக்.
4. தொன்னூல் விளக்கம், நூற்பாக்கள் 166, 175, 181, 195, 199, 203.
5. ,, ,, ,, 96, 204 போன்றன.
6. ,, ,, ,, 95, 248.

7. தொன்னூல் விளக்கம், நூற்பாக்கள் 149, 158, 161, 172 போன்றன.

8. ,, ,, ,, 213, 356 போன்றன.

9. பிரயோக விவேகம், காரகப் படலம், நூற்பா 2, உரை.

10. பிரயோக விவேகம், காரகப் படலம், நூற்பா 3, உரை.

11. ,, ,, ,, ,, 2, உரை.

11அ. ,, ,, திங்குப் படலம், நூற்பா 3, உரை.

12. சதுரகராதி, பக். 216.

# 4. காப்பியப் புலவர்

கவிதை படைப்போர் பல்லாயிரவர் எனில் காப்பியம் படைப்போர் ஒருசிலரே. அவ்வாற்றல் கைவரப்பெற்றோரும் தாம் இளமை முதல் கற்றறிந்த, பேசிப்பழகிய, தாய்மொழியிலேயே தம் படைப்பாற்றலைக் காட்டுவதியல்பு. இவ்வுலக இயல்புக்கு மாறாகத் தம் தாய்மொழிக்குச் சிறிதும் தொடர்பற்ற வேற்றின மொழி ஒன்றனை முப்பது வயதிற்கு மேல் கற்கத் தொடங்கி, அதிற் புலமை கண்டு காப்பியம் படைத்துப் புதுமை நிகழ்த்தியவர் உலக வரலாற்றிலேயே வீரமா முனிவரைத் தவிர வேறு எவருமிலர். அவரது படைப்பாற்றலுக்கு நிலைக்களன் தேம்பாவணிக் காப்பியமாகும்.

தேம்பாவணிக் காப்பியத்தின் தனித்த சிறப்புக்களை, (1) தமிழகப் புலவர்கள் தமிழுக்குரிய தம் பணியாகச் சமய அடிப்படையில் காப்பியம் படைத்தளித்தமை போலக் கத்தோலிக்கக் கிறித்தவரின் பங்காகக் கிடைத்திருக்கும் காப்பியம், (2) தமிழராய்ப் பிறவாத வேற்றுநாட்டார் ஒருவரால் எழுதப்பட்ட பெருமைக்குரிய காப்பியம், (3) புலமைப் பணியே வாழ்வியலாகக் கொண்டிராத ஒருவரால் அளிக்கப்பட்ட காப்பியம், (4) பன்மொழியும் கைவரப்பெற்ற புலவர் ஒருவரால் இயற்றப்பட்ட காப்பியம், (5) இலக்கியத்தின் பல்வகைகளையும் படைத்தளித்த திறனாளரால் வழங்கப்பட்ட காப்பியம், (6) நாற்பொருளில் இன்பமின்றி முப்பொருள் மட்டும் கொண்டும் நயங்குன்றாமல் நவிலப்பட்ட காப்பியம், (7) தமிழ் அகப்பொருள் மரபுக்கியையாத பருவம் பொருந்தாத் தலைமாந்தரைக் கொண்டு பாடியும், குறை தோன்றாமல் நிறைவித்தாக்கப்பட்ட காப்பியம், (8) செய்யுள் வகைகளில் சந்த வேறுபாடுகள் மிகுதியாகக் கொண்டு செய்யப்பட்ட காப்பியம், (9) காலப்போக்கில் இடைச் செருகல் ஏற்பட்டு விடாமல் எச்சரிக்கையாகக் காப்பியத்தில் அடங்கியுள்ள கவிதைகளின் எண்ணிக்கையினைப் பாடல்களிலே சுட்டிக் காட்டிப் பாடப்பட்டிருக்கும் காப்பியம்,

(10) காப்பியக் கூறுகளுள் ஒன்றான தூதினைக் காப்பியத் தலைவனையே நிகழ்த்துமாறு இயற்றப்பட்ட காப்பியம், (11) காப்பியத் தலைவனுக்கு மண்ணுலகில் மட்டுமன்றி விண்ணுலகிலும் முடிசூட்டுமாறு அமைக்கப்பட்ட காப்பியம், (12) பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே கீர்த்தனை, விருத்தியுரை, வசன காவியம் ஆகிய பல்வேறு வடிவங்களைக் கண்ட சால்புடைய காப்பியம், (13) முதன் முதல் பிற மொழிகளில் சில பகுதிகளேனும் மொழி பெயர்க்கப்பட்ட சீர்மைக்குரிய காப்பியம் ஆகியனவாக முன்னரே ஆய்ந்து குறிப்பிடப்பட்டுள்ளன.[1] தமிழில் முதன்முதல் அச்சாகி வெளி வந்த பெருமையும் தேம்பாவணிக்கே உரியது என்பர்.[2]

கத்தோலிக்கத் கிறித்தவச் சமயஞ் சார்ந்த காப்பியமாயினும் சமயப் பொதுமை காணக் கூடிய இறைவாழ்த்து, வேண்டற் பாடல்களைப் பலவிடங்களில் அமைத்துப் பாடியிருக்கும் பெற்றி போற்றற்குரியது. சான்றாக,

''அறக்கடல் நீயே! அருட்கடல் நீயே! அங்கரு ணாகரன் நீயே
திறக்கடல் நீயே! திருக்கடல் நீயே! திருந்துளம் ஒளிபட ஞான
நிறக்கடல் நீயே! நிகர்கடந் துலகின் நிலையுநீ! உயிருநீ! நிலை நான்
பெறக்கடல் நீயே! தாயுநீ! எனக்குப் பிதாவுநீ! அனைத்துநீ யன்றோ!''

என்னும் பாடலைக் கொள்ளலாம்.[3]

தம் காலத்தே வழங்கி வந்த இலக்கியங்களையும் குறிப்பாகக் காப்பியங்களையும் கற்றறிந்ததன் பயனாகவே தேம்பாவணியைப் படைக்கும் விருப்பு வீரமாமுனிவருக்கு எழுந்தது. அவ்விலக்கியங்களின் பயிற்சியும், முன்னோர் மொழிகளைப் பொன்னே போல் போற்றிய தன்மையும் தேம்பாவணியின் நயத்தினை மேலோங்கச் செய்கின்றன. சிலப்பதிகாரம், மணிமேகலை, கம்பராமாயணம், சீவகசிந்தமணி போன்ற காப்பியங்கள், கலித்தொகை, புறநானூறு போன்ற தொகை நூல்கள், வெற்றி வேற்கை, நளவெண்பா, தண்டியலங்காரம் போன்ற இடைக்கால நூல்கள், முக்கூடற் பள்ளு போன்ற பிற்கால நூல்கள் ஆகியவற்றின் செய்யுட்களும், தொடர்களும், தேம்பாவணியில் இடம்பெறு ம்வகையும், அவற்றுள் புதுமை காட்டிய திறமும் தேர்ந்து காட்டடப் பட்டுள்ளன.[4]

கவிதைத் திறத்தைப் புலப்படுத்தத் தம் படைப்புக்களில் பல்வேறு அணிகளை அமைத்துக் காட்டுவது எல்லோர்க்கும் இயல்பு. அணிகளுள்ளும் தலையாயது உவமையாகும். அதனைப் பயன்படுத்தும்பொழுது தம் கோட்பாடுகட்கேற்ற உவமைகளைத் தேர்ந்து பயன்படுத்தும் நுட்பம் பாராட்டற்பாலது. பகைவருக்கும் பரிந்துரை செய்தவர் இயேசுபிரான். இன்னா செய்தார்க்கும் இனியவே செய்ய வேண்டுமென்பதுவே கிறித்தவக் கோட்பாடு. இத்தகைய நெறியினை இல்லறத்தில் துறவறமேற்று வாழும் சூசையும் மரியும் போற்றி வாழ்ந்தனர் என விளக்கவரும் முனிவர், தன்னைக் குடையும் வண்டுகட்கும் விருந்தளிக்கும் தாமரை போலக் கொடுஞ் சொல் புகன்றவர்க்கும் நன்மை புரிந்து வாழ்ந்தனராக,

''துய்யந் தாயுரித் துடர்பினார் சுடப்புகன் றவர்க்கு
மய்யந் தாவிய மனத்தெழு மன்பினன் றியற்றல்
நொய்யந் தாதுகள் நோகவுட் குடைந்துமி ரளிக்குஞ்
செய்ய தாமரை திளைப்பநல் விருந்திடும் போன்றே''[5]

எனப் பாடுகிறார். இத்தகைய உவமைகள் நூற்றுக்கு மேற்பட்டவை ஆளப்பட்டுள்ளன. தம் துறவற நெறியினையும், வீட்டுலக வேட்கையினையும் புலப்படுத்தும் பலவிடங்களில் உருவகத்தைப் பயன்படுத்துகிறார். அவா என்பது மதவேழம். அதனை அறிவென்னும் பாகன் அடக்க, ஊக்கமாகிய தோட்டியைப் பயன்படுத்தித் தவமாகிய கயிற்றால் பிணித்து விரதமாகிய தூணில் கட்டிச் சிறந்தான் மவாவன முனிவன் என்பதனை,

''அவாவென மதத்தின் சீற்றத் தறிவெனப் பாகன் வீழ்த்த
உவாவென உடலைக் கைக்கொண் டூக்கநற் றோட்டி மாற்றி
விவாவென தவக்க வட்டை யிட்டுறா விரதத் தூணின்
மவாவன முனிவன் சேர்த்தி வானமும் வியப்பச் செய்வான்''[6]

எனப் பாடுகிறார். இவை போன்ற பல்வேறு அணிகளைப் பெற்றிலங்கும் காப்பியச் சிறப்பு, தக்க காட்டுகளுடன் பலரால் காட்டப்பட்டுள்ளன.[7]

'அறமுதல் விளங்கச் சொல்வாம்' எனக் காப்பியத் தொடக்கத்திலேயே கூறிய ஆசிரியர் தம் காப்பியத்தில் அறத்தின் மாட்சியினை ஆங்காங்கே ஒளிரச் செய்து, அவ்வறனைப் பற்றி வலியுறுத்தி, அவ்வறத்திற்குரிய

உறவோர் யாவர் என்பதனைப் புலப்படுத்தத் தவறிலர்.[8] துறவியாகிய ஆசிரியர், ஆண்கள் துறவியாவதினும், பெண்கள் துறவேற்பது சிறப்பு எனப் பேசப்புகுவது புதிய சிந்தனையாகத் தோன்றுகிறது.[9] உலகியல் வாழ்விற்கு அடிப்படையான அன்புடைமை, வினைத்தூய்மை, தாழ்ச்சி யுடைமை, புகழுடைமை, கல்வியுடைமை, ஈகையுடைமை என்பன பற்றிப் பேசுவதும், ஆடவராகிய சூசையின் கற்பு நலன் போற்றுதல், வறுமையினைச் சிறப்பாகக் கருதுதல் போன்ற புதிய சிந்தனைகளைத் தருவதும்[10] தமிழ்க் காப்பிய உலகில் தமக்கெனத் தணியதோர் இடம்பெற்றுச் சிறக்கத் துணையாய் அமைந்தனவெனலாம்.

## வாழ்த்துப்பா

முத்தமிழில் வல்லவர்கள் முன்னாளில் யாத்ததுபோல்
இத்தாலித் தோன்றலுன்றான் இன்றமிழில் – வித்தகத்தால்
தேம்பா வணிபடைத்துத் தேன்மொழிக்குச் சீர்சேர்த்தான்
நாம்பாவால் வாழ்த்திடுவோம் நன்று.

## குறிப்பெண் விளக்கங்கள்

1. தேம்பாவணித்திறன், பக். 3–6.
2. வித்தகர் வீரமாமுனிவர் சிறப்புமலர், பக். 44.
3. தேம்பாவணி, ஈரறம் பொருத்து படலம், பாடல் 34.
4. தேம்பாவணித்திறன், பக். 64–71.
5. தேம்பாவணி, ஈரறம் பொருத்து படலம், பாடல் 60.
6. தேம்பாவணி, மீட்சிப்படலம் பாடல் 71.
7. தேம்பாவணித்திறன், பக், 48–63.
8. ,, பக். 99–105.
9. தேம்பாவணி, மீட்சிப் படலம், பாடல் 76.
10. தேம்பாவணித்திறன், பக். 111–115.

# 5. பிரபந்தப் புனைவர்

பிரபந்த வகைகள் தொண்ணூற்றாறு என்பது தமிழ் வழக்கு. அவையாவை என்பதனை முதலில் விளக்கியவர் வீரமாமுனிவர்.[1] தம் சதுரகராதியின் தொடையகராதிப் பகுதியில் தொண்ணூற்றாறனையும் சுட்டி, அவற்றிற்கான இலக்கணங்களையும் வரையறுக்கிறார். திவாகர நிகண்டு சுட்டும் அடிப்படையில் எண்ணிக்கைக்கு ஏற்ப வழக்கிலிருந்த சிலவற்றை நீக்கியும், புதியனவாகச் சிலவற்றைச் சேர்த்தும் தொண்ணூற்றாறு எனக் கூறுகிறார். அவ்வெண்ணிக்கை வரையறை பொருத்தமாகத் தோன்றவில்லையெனினும் எண்ணிக்கையினை மட்டுமே கூறிவந்த நிலை மாறி, யாவையென விளக்க முயன்ற முதல்வர் வீரமாமுனிவர் என்ற சிறப்புப் பெறக் காரணமாகிறது.

அறிஞர் சிலர் பிரபந்த மரபியல்தான் முதன்முதல் இவ்வெண்ணிக்கையினை வரையறுத்து விளக்கிக் காட்டியது என்பர். இக்கருத்து ஐயத்திற்குரியதே. அதற்குரிய காரணங்களாவன:

(1) பிரபந்த மரபியலே முதலில் கூறியது எனச் சுட்டும் பதிப்பாசிரியரே பின்னர், "96 என்ற வரையறை இலக்கண பூர்வமாக எந்த நூலிலும் சொல்லப்படவில்லை என்பதை முன்பு குறிப்பிட்டோம். பின்னால் (கி. பி. 1732 இல்) சதுரகராதி சொல்கிறது" எனக் கூறிச் சதுரகராதிதான் இலக்கணங்களுடன் வரையறுத்தது என ஏற்றுக் கொள்கிறார்.

(2) பிரபந்த மரபியல் அறுபத்தாறு வகைகட்கே இலக்கணம் கூறுகிறது என்னும் வையாபுரிப் பிள்ளையின் கூற்றை மறுத்த பதிப்பாசிரியர், சில நூற்பாக்களை வேறு வகையாக விரித்து வகைகளை அதிகமாக்கிக் காட்டுகிறார். அதனை ஏற்றுக்கொள்வதற்குரிய தடையாக ஒரு வினா எழுகிறது. விரித்துரைத்த நூற்பாக்களுக்கு ஒரே போக்

கினையோ, விதிமுறையையோ மேற்கொள்ளாதது ஏன் என்பதே அவ்வினாவாகும். சான்றாக, ஒன்பதாம் நூற்பா வில் குடை, செங்கோல், நாடு, ஊர், சிலை, வாள், வேல், பரி, யானை பற்றிப் பத்து ஆசிரிய விருத்தம் பாடுவது அவ்விருத்தமாகும் எனக் கூறப்படுவதனை விருத்தம் என ஒன்றாகக் கருதாமல் ஒன்பது வகை விருத்தங்களாகக் கருத **'அவ் (வவ்) விருத்தமாகும்'** என்னும் தொடர் இடம் தருவ தாகக் கொண்டால், ஆற்றுப்படை பற்றிய நூற்பாவில் "ஒது நால்வருள் ஒருவரை அகவலால் அங்கொரு தன்மை ஆற்றுப் படுத்துப் பகர்வது ஆற்றுப் ப(டையென மொழிப)" என்னும் தொடரில் அவ்வவ் வாற்றுப்படையெனக் குறிப் பிடாதிருக்கையில், ஆற்றுப்படை என ஒன்றாகக் கருதாமல் அவ்வவ்வாற்றுப் படைகள் என்னும் கருத்தில் நான்காக ஏன் கொள்ள வேண்டும்? மாலைகளைப் பற்றிய பதினேழாம் நூற்பாவில் ஒன்பதாகக் கொள்வதற்கு 'அப் பெயர் வர்க்கத்து அவ்வம் மாலை' எனக் குறிப்பிடப்பட்டி ருப்பது போல் ஆற்றுப்படை பற்றிய நூற்பாவிலும் 'அவ்வவ் ஆற்றுப்படையென மொழிப' என்பதற்கான குறிப்பு ஏதேனும் இருப்பின், ஆற்றுப்படையைத் தனித்தனி யாக நான்காகக் கொள்ளத் தடையில்லை. அத்தகைய குறிப்பெதுவும் நூற்பாவில் இல்லை.

(3) பதினாறாம் நூற்பாவில் வையாபுரிப் பிள்ளை நான்கு பிரபந்தங்களாகக் கணக்கிட அக்கணக்கீடு பொருந்தாதெனக் கூறிப் பதிப்பாசிரியர் இருபத்து நான் காக்கிக் காட்டுவதிலும் ஐயம் ஏற்படுகிறது. அவ்வாசிரியர், "பொருள் இடம் காலம் தொழில் என்ற நான்கும் முப்பது முதல் நூறு வரை எண்ணால் பெயர் பெற்றாலும், பெயர் முடிவு மாலை, மஞ்சரி, காஞ்சிமாலை, முல்லை, கலி, சதகம் என்று அமையும்" எனக் கூறுவதிலிருந்து எண்ணால் பெயர் பெறுவதை அவர் மறுக்கவில்லையெனத் தெரிகிறது. மேலும் 'மன்னும் அவ்வெண்ணால்' என்னும் நூற்பாத் தொடர் அதுவே முறை எனக் காட்டும். அவ்வாறு கொண் டால் வையாபுரிப்பிள்ளை சுட்டும் பொருள் மாலை, இட மாலை, கால மாலை, தொழில் மாலை ஆகிறவற்றை நூற்பா சுட்டும் முப்பது, நாற்பது, எழுபது, தொண்ணூறு, நூறு ஆகிய ஐந்து எண்களுடன் உறழ $(4 \times 5)$ இருபது பிரபந்தங் களே அமையும். அதை விடுத்து இருபத்து நான்கு பிரபந்

தங்களை வருவித்துரைக்க முடிவு கொண்டு மாலை, மஞ்சரி, காஞ்சி மாலை, முல்லை, கலி, சதகம் என்னும் பெயர்களுடன் எண்களை விடுத்துப் பொருள்களை உறழ்ந்து காணுதல் பொருந்து மாறில்லை. அவர் கருத்துப்படியே கொண்டாலும் அவர் தரும் எடுத்துக்காட்டுக்கள் அவர் கொள்கைகட்கே முரணாகின்றன. "திருச்சதகம் நூறு, திருத்தொண்டர் சதகம் நூறு, ஈங்கோய் மலை (மாலை) எழுபது, கார்நாற்பது (மாலை) என்பன போல அமையும்" என அவர் தரும் எடுத்துக் காட்டுக்கள் எண்ணடிப்படையில் பெயர் பெறு வதை வலியுறுத்தும். அவ்வாறு கொண்டால் மாலை, மஞ்சரி, காஞ்சி மாலை, முல்லை, கலி, சதகம் என்னும் அறுவகைப் பெயர்களும் முப்பது, நாற்பது, எழுபது, தொண்ணூறு, நூறு என்னும் ஐவகை எண்களுடன் உறழ $(6 \times 5)$ முப்பதா கின்றனவே. இவற்றையெல்லாம் நோக்கப் பிரபந்த மரபியல் தொண்ணூற்றாறு வகைகளுக்கும் இலக்கணம் கூறியிருக் கின்றது என முடிவு காட்டுவதற்கு ஏற்ற வகையில் பதினாறாம் நூற்பா இருபத்து நான்கனுக்கு இலக்கணம் கூறுவதாகக் காட்டியிருக்கலாமோ என எண்ணத் தோன்று கிறது. எவ்வாறெனினும் பிரபந்த மரபியலே தொண்ணூற் றாறு வகை பிரபந்தங்கள் என்னும் குறிப்பினைத் தந்திருந் தாலும் அவற்றை விளக்கி இலக்கணம் தந்த முதல்வர் வீரமா முனிவரே எனத் துணியலாம். அவரைப் பின்பற்றித் தான் பின்னரெழுந்த குடுமியாமலை சுப்பிரமணிய பாரதி யாரின் பொருள் தொகை நிகண்டு பிரபந்தங்களின் வகை களைக் கூறியுள்ளது எனத் தெளிவாக்கப்பட்டுள்ளது.[3]

மேலும் காப்பியப் புலவோருள் பல்வகைப் பிரபந்தப் படைப்புக்களிலும் ஈடுபட்டு வெற்றி கண்டவராக இவர் ஒருவரே திகழ்கிறார். கலம்பகம் படைத்தார்; அந்தாதி வடித் தார்; அம்மானை பாடினார்; மாலை புனைந்தார்; கலிப்பா கட்டினார்; பதிகம் கூறினார்; வண்ணம் இசைத்தார். அவற் றில் இவர்தம் படைப்பாற்றலையும், கவித்திறத்தையும் அறிஞர்கள் தம் ஆய்வுகள் வழியாகவும், நூல்கள் வழியாக வும் புலப்படுத்தி வருகின்றனர்.

## வாழ்த்துப்பா

அன்னை அழுங்கலுக்கோர் அந்தாதி, மாலையாம்
கன்னிகாவ லூர்க்கோர் கலம்பகம் — இன்னுந்தான்
வெண்கலிப் பா, பதிகம், வேல்விழியார்க் கம்மானை,
வண்ணத்தை வாழ்த்திடும்நம் வாய்.

## குறிப்பெண் விளக்கங்கள்

1. சதுரகராதி ஆராய்ச்சி, பக். 159-162.
2. பிரபந்த மரபியல், பக். 8.
3. சதுரகராதி ஆராய்ச்சி, பக். 268.

# 6. இலக்கண அறிஞர்

வீரமாமுனிவர்க்கு முன்னர் இலக்கணங் கண்ட அயலார் சிலருளர். எனினும் விரிந்த அளவில் பல்வகையில் தந்த முன்னவர் இவரே. இவர் தமிழ் மொழியின் இயல்பு குறித்து எழுதிய இலக்கணங்கள் நான்கு. அவற்றுள் ஒன்று தமிழிலும், மற்றவை இலத்தீனிலும் எழுதப்பட்டன.

வழங்கிவரும் தமிழ் இலக்கணங்களுள் முன்னூல் தொல்காப்பியம். அதனையடுத்துப் பின்னூல் பலவினுள் நன்னூலே சிறந்தது. அதற்குப் பின்னரெழுந்த நூல்களுள் நன்னூல் எனத்தக்கது அடிகளாருடைய தொன்னூல் விளக்கம் எனலாம். ஐம்பிரிவுகளாகிய தமிழ் இலக்கணத்தை ஆயிரத்து அறுநூற்றுக்கும் மேற்பட்ட நூற்பாக்களில் தொல்காப்பியம் கூறுகிறது. எழுத்து, சொல் ஆகிய இரு பிரிவுகளை மட்டும் நன்னூல் நானூற்று அறுபத்திரண்டு நூற்பாக்களில் விளக்குகிறது. தொன்னூல் விளக்கமோ ஐந்திலக்கணங்களையும் திட்ப நுட்பஞ் செறிந்தனவாகிய முந்நூற்றெழுபது நுற்பாக்களில் காட்டுகிறது; முன்னோர் நூலின் முடிபொருங்கொத்துப் பின்னோர் வேண்டும் விகற்பம் கூறுகிறது.

அடிகளாரது இலக்கண நூல்களுள் முதன்முதல் எழுதப் பட்டது இலத்தீன் மொழியிலமைந்த கொடுந்தமிழ் இலக்கணமாகும். அடிகள் வாழ்நாளிலேயே, அவரோடு கருத்து முரண்பாடு கொண்ட தரங்கம்பாடிச் சமயப் பரப்பியக்கத்தினரால் ஆசிரியர் அனுமதி பெற்றுப் பதிப்பிக்கப்பட்டிருப்பதே அதன் சிறப்பினைக் காட்டும். பரம்பரை இலக்கண, இலக்கியப் பயிற்சியினைப் புலப்படுத்தும் குறிப்புக்கள் காணக்கிடக்கின்றன. சான்றாகக் கொள்ள ஒன்றே ஒன்று போதும். அல், இல் என்னும் இரண்டும் எதிர்மறை உணர்த்தும் இடைச் சொற்களே. எனினும் இரண்டனுக்கும் நுணுக்கமான வேறுபாடுண்டு. பழந்தமிழ் இலக்கணங்

களில் உடம்பொடு புணர்த்தலாகவன்றி வெளிப்படையாக அவ்வேறுபாடு காட்டப்பெறவில்லை. அவ்வேறுபாடுணர்ந்த அடிகளார் அவற்றை அடிப்படையாகக் கொண்ட இல்லை, அல்ல என்னும் வினைகளின் பொருட்டன்மை வேறுபாட்டினைப் புலப்படுத்துகிறார். இரண்டும் இன்மையை உணர்த்தினும் இல்லை என்பது உண்டென்னும் நிலைமையை மறுப்பதாகவும் (Denying the Existence) அல்ல என்பது உள்ள நிலைமையின் தன்மையை மறுப்பதாகவும் (Denying the Essence) கூறி, இல்லை என்பதற்கு எதிர்ச்சொல் உண்டு அல்லது இருக்கிறது என்றும், அல்ல என்பதற்கு எதிர்ச்சொல் ஆம் அல்லது ஆயிருக்கிறது என்றும் விளக்குகிறார்.[1]

தொன்னூல் விளக்கத்தைச் சுருக்கி இலத்தீன் மொழியில் திறவுகோல் (Clavis) என்னும் பெயரில் எழுதினார். இயேசு சபை சமயப் பரப்புநர்கட்காக எழுதப்பட்டமையான் பொருள் இலக்கணச் செய்திகளை மிகவும் சுருக்கி உரைத்துள்ளார். நூலின் இறுதியில், யாப்பறி புலவர்களைக் காண்டல் அரிதாகியும், யாப்பு நெறிகளை முறையாக உணராமல், 'வாய்க்கிசைந்தது பாட்டுக்கிசையும்' எனச் சொல்லிக் கொண்டு கவிதைகள் இயற்றுவோர் உள்ளதையும் கண்டு குறைப்படுவது, அவருக்கிருந்த இலக்கண நாட்டத்தைக் காட்டவல்லது.

இலக்கியமொழி, பேச்சுமொழி என்னும் இருவேறு வடிவங்களையும், செந்தமிழ், கொடுந்தமிழ் எனக்கொண்டு, அவற்றின் இலக்கணங்களைத் தனித்தனியே எழுதினார். தொன்னூல் விளக்கம் செந்தமிழ் மொழிக்காயினும் தமிழ் நாட்டாருக்காக எழுதப்பட்டது. திறவுகோல் சமயப்பரப்புநர்கட்காக வழங்கப்பட்டது. செந்தமிழ் இலக்கணம் என்னும் நூல், தமிழ் இலக்கியப்பரப்பை மேலும் அறிய விரும்பும் மேனாட்டாருக்காக இலத்தீனில் எழுதப்பட்டது. தொன்னூல் விளக்கத்திற்குப் பிற்பட்டதாதலின், அதனின்று வேறுபடும் சில விதிகளும் அதில் இடம்பெறுகின்றன.

முற்காலப் பாட்டியல் நூல்கள் இலக்கணம் கூறாத, வழக்கில் அதிகமாயிருந்த சில புதுவகை இலக்கியங்களுக்கு இலக்கணங் கூறுவது அவரது இலக்கண உணர்வினையறிவிக்கும். சிந்து இலக்கியம் பற்றியும், வண்ணம்

பற்றியும் முதன்முதல் இலக்கணம் தருவது செந்தமிழ் இலக்கணமேயாகும். "நான்கு பாக்களைக் கொண்டது. இவற்றுள் முதலாம் பாவுக்கு முன்னர் சிறிய ஓரடி இருக்கும். இது பல்லவம் என அழைக்கப்பெறும். ஒவ்வொரு பாவுக்கு முன்னரும் பல்லவம் திரும்பத் திரும்ப வரும். நான்கு பாக்களுள்ளும், முதலாம் பா, மற்ற மூன்றனை நோக்கச் சிறிதாக அமையும். அது அநுபல்லவம் எனப் படும். இறுதியில் உள்ள பாக்கள் மூன்றும் எல்லா வகைகளிலும் ஒன்றுபோல் அமைந்திருக்கும். அப்பாக்கள் மூன்றாகத்தாம் அமைய வேண்டும் என்னும் எண்ணிக்கை வரம்பில்லை. பாடுவோர் விருப்பிற்கேற்ப எவ்வளவு வேண்டுமானாலும் பாடலாம். இப்பாக்களில் இயைபெதுகை அமைந்திருக்கும்"[2] என்பன அவ்விலக்கணம் தரும் சிந்துப்பாடல் வரையறைகளாகும்.

வண்ணம் பற்றியும் முதலில் இலக்கணம் கூறியவராக இவரே தோன்றுகிறார். "எட்டு இணையான பாடல்களைக் கொண்டது வண்ணம். அவை முறையே முதற்கலை, இரண்டாம் கலை எனப் பெயர் பெறும். முதற்பாடல் தெய்வத்தைப் புகழ்வதாய் அமையும். இரண்டாம் பாடல் பாட்டுடைத் தலைவனின் அரசைப் பற்றி விளக்கும். மூன்றும் நான்கும் அவனுடைய பெயரையும் புகழையும் விளக்கும். மற்ற நான்கு பாடல்களும் அவன்றன் பெண்டிரைப் பற்றியனவாய் இருக்கும்" என்பன போன்ற வரையறைகள் வண்ணம் பற்றித் தரப்படுகின்றன. இவர் சிறந்த இலக்கண அறிஞர் என்பதனை இவைபோன்ற குறிப்புக்கள் விளக்குகின்றன.

### வாழ்த்துப்பா

தொன்னூல் விளக்கம், திறவுகோலி லத்தீனில்
நன்னூல் கொடுந்தமிழ்க்கும், நற்றமிழ்க்கும் — என்றே
இலக்கணம் நான்கனை ஈன்ற தவமார்
புலவரை எந்நாளும் போற்று.

### குறிப்பெண் விளக்கங்கள்

1. கொடுந்தமிழ் இலக்கணம், பக். 82.
2. செந்தமிழ் இலக்கணம், விதி 119.
3. ,, ,, ,, 118.

# 7. உரைநல வலவர்

இலக்கியங் கண்டதற்கு இலக்கணம் இயம்பினர் முன்னைப் புலவோர். அவற்றிற்குரிய உரைகளைப் பின்னோர் எழுதினர். அவரால் இலக்கணிகளின் புகழ் மலை விளக்காயிற்று. சில இலக்கணப் பொருள்களைக் கண்டு தெளியாமல் தடுமாறியோர்க்குக் கலங்கரை விளக்காய் கரை காட்டியோர் அவரே. அவ்வுரையாசிரியர்கட்குப் பின்னர் இலக்கணம் தந்த பெரியோர்கள் முன்னோர்தம் உரைக் கருத்துக்களையே இலக்கண நூற்பாக்களாக்கியதும் உண்டு. இதற்கு மாறாக இலக்கணம் படைத்தவர்களே அவற்றுக்கான உரை தரும் போக்குப் பிற்காலத்தில் காணப் படுகிறது. இப்போக்கினையொட்டி வீரமாமுனிவர் தாமியற்றிய தொன்னூல் விளக்கத்திற்குத் தாமே உரையெழுதியுள்ளார். அவ்வுரை அவரைச் சிறந்த உரையாசிரியராக நமக்குக் காட்டுகிறது.

இவ்வுரையில் பத்தொன்பதுக்கு மேற்பட்ட இலக்கண நூல்களை மேற்கோளாக எடுத்தாளுகிறார். பத்துக்கு மேற்பட்ட இலக்கியங்களிலிருந்து எடுத்துக்காட்டுகள் தரப்படுகின்றன. காக்கைப்பாடினியார், கையனார், நத்தத்தனார், பல்காயனார் போன்றோரின் நூற்பாக்கள் எடுத்துக்காட்டப் பெறுகின்றன. திவாகரம் முதலிய நிகண்டுகள், மெய்ம்மறையாசாரியனார் கருத்துக்கள் போன்றவை ஆளப்பெறுகின்றன. தம் தேம்பாவணிக் காப்பியத்திலிருந்தும் அணிகளுக்கு மேற்கோள் காட்டுகிறார்.

திருவள்ளுவர் மீது அவர் கொண்டுள்ள மதிப்பு இவ்வுரையால் நன்கு அறியக் கிடக்கின்றது. “வேதநூன் முதல் எவ்வகை நூலுங் கல்லாதுணரவுஞ் சொல்லாதுணர்த்தவும் வல்லவராகி, மெய்ஞ்ஞானத் திருக்கடலாகியவொரு மெய்க் கடவுள் தன் திருவடி மலரே தலைக்கணி யெனக் கொண்டேத்தி, இருளிராவிடத்து விளங்கிய வொருமீன் போலவும்

பாலைச் சுரத்தரிதலர்ந்த பதுமம் போலவும் மெய்யாஞ் சுருதி விளக்காதிருளே மொய்த்த நாட்டின் கண்ணுங் கடவு ளேற்றிய ஞானத் திருவிளக்கெறிப்பத் தெளிந்துணர்ந்து ஓங்குமொரு விளக்கென நின்றுயர்ந்த திருவள்ளுவருரைத்த பலவற்றொன்றை நான் தெரிந்துரைப்பத் துணிந்தேன்" என்னும் பகுதி அதற்கொரு சான்றாகும். இவ்வாறே பழ மொழிகள், உவமைத் தொடர்கள் போன்றவற்றை இட மறிந்து இவர் கையாண்டதற்கும் பிற உரைத்திறத்திற்கும் தக்க சான்றுகள் காட்டிக் கட்டுரை வெளிவந்துள்ளது.[1]

தொன்னூல் விளக்க உரை வீரமாமுனிவரால் எழுதப் பட்டதுதானா என ஐயுறுவோரும் உண்டு. இதனை மறுப்பது போல் இல்லையெனினும், வீரமாமுனிவரால் எழுதப்பட்டதே என்பதனை அறிஞர் சிலர் உறுதி செய் துள்ளனர்.[2] அவ்வையம் எழக் காரணங்களை எவரும் வெளிப்படக் கூறவில்லை. எனினும் 1838 ஆம் ஆண்டில் வெளிவந்த தொன்னூல் விளக்க வேதகிரி முதலியார் பதிப்பு அவ்வையத்தைத் தூண்டியிருக்கலாம்.

அப்பதிப்புக்கு மரிய சவேரியாப் பிள்ளை என்பவர் பொருளுதவி செய்ய அதிசெயநாதப் பிள்ளை வெளியிட்டு நிறைவேற்றினார். அதனையச்சிற் கொண்டு வந்தவர் வேதகிரி முதலியார். அப்பதிப்பில் அமைந்திருக்கும் சிறப்புப் பாயிரங்கள், பழுதற ஆராய்ந்து, தொகைப்படக் காட்டியும் மேற்கோள் சேர்த்தும் அச்சிற் கொண்டு வந்ததாகக் குறிப் பிடுகின்றன. அக்குறிப்பு வேதகிரி முதலியார் உரை எழுதி னார் என்னும் கருத்துச் சிலருக்கு எழக் காரணமாகியிருக்க லாம். அப்பாயிரங்கள் முழுவதையும் ஆராய்வோருக்கு இலக்கண இலக்கிய மேற்கோள்களில் சிலவற்றை மட்டும் வேதகிரி முதலியார் சேர்த்துள்ளார் என்பதும் பெறப்படும். சுப்புராயவையர் என்பாரால் பாடப்பட்ட எழுபத்திரண்டு அடிகளையுடைய சிறப்புப் பாயிரம்,

"அகத்திய முனிவற் கனையமெய்ப் போதன்
சகத்திற் பிரகாச சத்திய வேதன்
இலக்கணக் கடற்கரை யேறிய தீரன்
பலக்கணக் கலைஞர் பணிசெய் கம்பீரன்
சராசர மெல்லாந் தந்துகாத் தழிக்கும்
பராவரு நலந்திகழ் பராபர னருள்பெறீஇச்
சுத்தமெய்ஞ் ஞானச் சுகோதையந் தழுவு

மெய்த்தவ விரத வீரமா முனிவன்
எழுத்துச் சொற்பொருள் யாப்பணி யென்னும்
விழுத்தகை இலக்கணம் மேலோ ருரைத்தல்
கற்றோர்க் கெளிமையும் கல்லார்க் கருமையும்
பெற்றோங் குயர்சீர் பெற்றித் தாகலின்
எந்நாட் டவர்க்கும் இனிது புலப்பட
நன்னாட் டங்கண் நாடுகஞ் சமைபோல்
தன்னால் இயற்றிய தக்கதொன் னூற்குரை
முன்னாள் இயைய மொழிந்தனர் ...''

எனக் கூறிப் பின்னர் அவ்வுரையைப் பலர் ஏடு பெயர்த்தெழுதியதால் பிழைகள் மலிய அவற்றைத் திருத்தி அச்சிற் பதிப்பிக்கும் பணியில் வேதகிரி முதலியார் ஈடுபட்டார் என்னும். அப்பொழுது அவர், வீரமாமுனிவரின் உரையில் இருந்தவற்றோடு மேலும் சில இலக்கண இலக்கிய மேற்கோள்களைச் சேர்த்துக் காட்டினார். எனவே உரை வீரமா முனிவராலும், அதற்கான சில மேற்கோள்கள் மட்டும் வேதகிரி முதலியாரால் எழுதப்பட்டதெனத் தெளியலாம்.

வேதகிரி முதலியார் அச்சிற் பதிப்பித்தகாலை சுப்புராயவையர் மட்டுமன்றிச் சின்னத்தம்பி முதலியார், வீராசாமி முதலியார் போன்றோரும் சிறப்புப் பாயிரம் பாடியுள்ளனர். மேற்கோள்கள் கூட்டியது பிறிதொருவர் எனினும் மூலமும் உரையும் தந்த மூலவராகிய வீரமாமுனிவர் ஓர் உரைநல வலவரே என உறுதி கொள்ளலாம்.

### வாழ்த்துப்பா

இலக்கணவு ரைதந்தே இத்தாலித் தோன்றல்
கலங்கரை நல்விளக்காய்க் காட்டித் — துலக்கினான்
வள்ளுவ னின்புகழை வானுயர; மாமுனியை
உள்ளுவோம் நாளும் உவந்து.

### குறிப்பெண் விளக்கங்கள்

1. 'ஓர் உரையாசிரியர்', இலக்கணச் சிந்தனைகள், 1984.
2. டாக்டர் ச. வே. சுப்பிரமணியன், தொன்னூல் விளக்கம், பதிப்பு முன்னுரை.

# 8. உரைநடை வளவர்

பழந்தமிழ் இலக்கண இலக்கியங்களுக்கான உரைகள் தமிழ் உரைநடையின் முன்னைய நிலையினை விளக்கு வனவாய் உள்ளன. அவ்வுரைகள் அக்காலச் செய்யுள் வழக்கிலிருந்து ஓரளவு மாறுபட்டனவாய் இருப்பினும் பேச்சுவழக்கினின்றும் மாறுபட்டனவாகவே கொள்ள வேண்டும். தற்காலத்தில் வழக்கில் உள்ள பேச்சுமொழிக் கும் எழுதுகின்ற உரை நடைக்கும் இருக்கும் இடைவெளி குறைவு. பழங்காலத்தில் அவ்விடைவெளி மிகுதியாக இருந்தது. சிற்சில செய்யுட்கள் உரை நடையெனக் கருதத் தக்கனவாகவும் அவ்வாறே சிற்சில உரைகள் செய்யு ளாகவே கொள்ளத்தக்கனவாகவும் அமைந்திருக்கின்றன. அவற்றுக்கான எடுத்துக்காட்டுகள் சிலரின் கட்டுரைகளில் காணக்கிடக்கின்றன.[1]

உரைநடை மிகப்பழமையதாகத் தமிழ் வரலாற்றில் காணப்படினும் பேச்சுமொழிக்கு நெருங்கிய தொடர்புடைய தாக உருவாகியது அண்மைக் காலத்தேதான். அதே போன்று சித்தாந்தங்கள், கலைகள், மருத்துவம் போன்ற எத்துறையாயினும் செய்யுளிலேயே கூறுகின்ற நிலை மாறி உரைநடையிலேயே கூறுகின்ற போக்கும் பிற்காலத்திலே தான் தமிழில் வளர்ந்தது. அவ்வளர்ச்சிக்கு அடிப்படை யிட்டவர்கள் மேனாட்டுக் கிறித்தவத் தமிழறிஞரேயாவர். அவர்களுள் உரைநடையின் முன்னோடி எனக் கொள்ளத் தக்கவர் ஆன்றிக் அடிகளார். உரைநடைத் தந்தையெனப் போற்றத்தக்கவர் தத்துவ போதகர் என்னும் இராபர்ட் டி நோபிலியாவர். எனினும் இவர்களின் படைப்புக்கள் சமயம் சார்ந்தனவாகவும், அக்காலச் சூழலுக்கேற்ப வடமொழிக் கலப்பும், பேச்சு மொழி வழக்கும் மிகுந்து உள்ளனவாகவும் அமைந்தன. அவ்வாறன்றித் தற்காலத் தமிழ் உரையில் காணப்படுகின்ற அனைத்துச் சிறப்புக் கூறுகளையும் உள்

ளடக்கி தமிழின் மறுமலர்ச்சி உரைநடைக்கு வழிகோலிய வளவர் வீரமாமுனிவரேயாகும்.

கூறுகின்ற பொருளுக்கேற்பவும், அதனைக் கொள் வோரின் அறிவுத் திறத்திற்கேற்பவும், உரைநடையைக் கையாண்டு வெற்றி பெறும் திறன் ஒருசிலருக்கே கிட்டும், அத்தகைய அருந்திறலுடைய வித்தகராக வீரமாமுனிவர் விளங்குகிறார். தொன்னூல் விளக்கம் என்னும் தம் இலக் கணத்திற்கு அவர் எழுதிய உரை, நிருபங்கள் எனப்படும் அறிவிப்பு வடிவக் கடித உரை தவிரத் தனி உரைநடை நூல்களாக அவர் ஆறு நூல்கள் எழுதியுள்ளார். இவற்றுள், 'வேத விளக்கம்' தம் சமயக் கருத்துக்களை விளக்குகிறது. இதனை எதிர்த்து லூத்தரைப் பின்பற்றிய தரங்கம் பாடிச் சபையினர் 'திருச்சபை பேதகம்' என்றொரு நூலினை எழுதினர். அதற்கு மறுப்புரையாக 'பேதகம் மறுத்தல்' என்ற நூலினை அடிகளார் எழுதினார். லூத்தரைப் பின் பற்றுவோர் கோட்பாடுகளை எதிர்த்து 'லூத்தர் இனத் தியல்பு' என்னும் நூல் எழுதப்பட்டது. இம்மூன்றும் தாம் சார்ந்த சமய விளக்கங்களாயினும் பழங்கால நிலையினின்று மாறுபட்ட நடையினவாய் உள்ளன. புணர்ச்சி இலக்கணப் படி நின்ற புணர்மொழிகளைப் பிரித்துப் படிப்பின் மிக எளிதாக விளங்குவனவாய் அமைகின்றன. சான்றாக, வேத விளக்கப் பாயிரத்தின் ஒரு சிறு பகுதியைப் பிரித்துப் படிப்பின், "தொடர்பு விடாத மாலையாக, அந்நாள் முதற் கொண்டு இந்நாள் மட்டும் எண்ணப்படாத காரணக் குருக்கள் தம்முள் பின்தொடர்ந்து ஓயாமல் வந்து, பிறந்த நாடும் காட்டின உருவும் கொண்ட குணமும் தம்முள் வேறு வேறாகியும், தாம் எல்லாரும் போதித்த வேதநெறி ஒன்றாகித் திவ்விய திருவிளக்காகச் சத்திய வேதத்தைக் கையில் ஏந்தித் திரிந்தார்கள் என்றதனால், எண்ணப்படாத சனங்களும் தெளிந்து ஒரு திருச்சபையாக நன்னெறி வழு வாமல் நடந்து வருவதே கண்டோம்" என்னுமாறு அமையும்.

வேதியர் ஒழுக்கம் என்னும் நூல் குருக்களுக்குத் துணை புரியும் வேதியர்களின் கடமைகளைச் சுட்டும் நூலாகும். இந்நூல் போப்பையர் போன்ற அறிஞர்களால் பாராட்டப் பெற்ற நூல்; தமிழ் உரைநடைக்காகப் பரிந்துரைக்கப்பட்ட நூல்.[2]

செந்தமிழ், கொடுந்தமிழ் என இருவேறு வகைகளாக மொழியைப் பகுத்துணர்ந்து இலக்கண நூல்கள் எழுதினார். அவ்வாறே உரை நடையில் செந்தமிழ் நடைக்கு வாமன் சரித்திரத்தையும் கொடுந்தமிழ் நடைக்குப் பரமார்த்த குரு கதையையும் படைத்ததாக அவ்வவற்றிற்குரிய முன்னுரைக் குறிப்புக்களிலிருந்து அறிய முடிகிறது.

இவ்வாறு அறுவகை நூல்களிலும் நுவலும் பொருளுக் கும் போக்கிற்கும் ஏற்ப வெவ்வேறு நடைகளைக் கையாளு கிறார். இவையேயன்றி தொன்னூல் விளக்க இலக்கண உரை, நிருபங்கள் முதலியவற்றில் வழங்கும் மொழி இவற்றையெல்லாம் இணைத்து நோக்கின் மூவகை நடை முனிவரிடத்தே நடமாடினவாகக் கொள்வர்.

## வாழ்த்துப்பா

வேத விளக்கமாம் வேதியர்ஒ ழுக்கமாம்
பேதம் அறுத்தல் பரமார்த்தன் — காதையும்
லூத்தர் இயல்பாமு லுக்கும்வா மன்கதை
யாத்தவனை ஏத்துவோம் யாம்.

## குறிப்பெண் விளக்கங்கள்

1. பத்துக் கட்டுரை, பக். 87–90.
2. வித்தகர் வீரமாமுனிவர் சிறப்பு மலர், பக். 37.
3. Pope, G. U., The Sacred Kural of Tiruvalluva Nayanar, p., v.

# 9. அகராதி முதல்வர்

அகராதித் துறைக்கு வீரமாமுனிவர் ஆற்றியுள்ள பணி அளப்பரியது. ஏனெனில், தமிழில் முறையான அகர நிரலுடன் அமைந்த அகராதியை ஆக்கித் தந்த முதல்வர் அவரே. அவர் படைத்தனவாகப் பல்வேறு அகராதிகளை அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். எனினும் அவருடையன வென துணியத்தக்கன மூன்றே எனலாம்.[1]

தமிழின் முதல் அகராதியான சதுரகராதி வீரமாமுனிவ ரால் கி. பி. 1732-இல் படைக்கப்பட்டது; பெயர், பொருள், தொகை, தொடை என்னும் நால்வகைப் பிரிவுகளாக அமைந்துள்ளமையால் சதுரகராதி என்னும் பெயர் பெற்றது. தொல்காப்பிய உரியியலில் முளைவிட்டு நிகண்டுகளாய் அரும்பியவை அதற்கு அடிப்படையாயின. மேனாட்டு மொழியறிவும், தமிழ்நாட்டு இலக்கியப் புலமையும் பின் புலங்களாய் அமைந்தன. முதற்பகுதியாகிய பெயரகராதி செந்தமிழ் எழுதுவோர் பயன்படுத்தும் சொற்களின் பல் பொருள்களைக் கூறுகிறது. அப்பகுதியில் மட்டும் அமைந்த சொற்கள் 12, 187. அடுத்து ஒரே பொருளுடைய சொற்கள் தொகுக்கப்பட்டுப் பொருளகராதி அமைந்துள்ளது. அப் பகுதிச் சொற்கள் 2168. பின்னர், இருநலம், மூவுலகம், நாலரண், ஐம்புலன்கள் போன்ற தொகைகளாக நூல்களில் காணக்கிடக்கின்றவற்றின் விளக்கங்கள் தொகையகராதி யாக அமைந்துள்ளன. இறுதியாகக் கவிதைக்குப் பயன்பட முதல் எழுத்தால் மட்டும் வேறுபட்டு, அசையால், ஒலியால் ஒத்திருக்கும் சொற்கள் ஒன்றாக்கப்பட்டுத் தொடையகராதி யாக அமைந்துள்ளன.

1824-இல் முதற்பதிப்பாக வெளிவந்த இவ்வகராதி சென்ற நூற்றாண்டில் மட்டும் ஒன்பது பதிப்புக்களைக் கண்டிருப்பது இவ்வகராதிக்கு மக்களிடையே இருந்த செல்வாக்கைக் காட்டும். இந்நூற்றாண்டில் மதுரையில்

1928–இல் ஒரு பதிப்பு வெளிவந்துள்ளது. இவற்றைப் பதிப்பித்தோர் கூட்டியும், நீக்கியும், தவறுபடவும் ஆக்கிய குறைகளைக் களைந்து வீரமாமுனிவரது உண்மை அகராதி இதுவெனக் காட்டி ஆய்வுப்பதிப்பு ஒன்றனை 1979–இல் வீரமாமுனிவர் ஆய்வுக் கழகம் வெளியிட்டுள்ளது. இந்நூற்றாண்டில் தோன்றிய செம்மையான விரிவான அகராதிகள் பலவுள. இவையனைத்தும் சதுரகராதி அடிப்படையில் எழுந்தவையே. சதுரகராதி வெளிவந்த பின்னர் எழுந்த நிகண்டுகள் சிலவுள. அவையுள்ளும் அதன் தாக்கம் நிறைந்திருப்பது ஆய்வாளர்க்குப் புலப்படும்.

வீரமாமுனிவரால் பேச்சுமொழிக்கெனப் படைக்கப்பட்ட தமிழ்–இலத்தீன் பேச்சுமொழி அகராதியும் அதனுடன் இணைந்து காணப்படுகின்ற போர்த்துகீஸ்–இலத்தீன்–தமிழ் அகராதியும் அவரது இறுதிக் காலத்தில் படைக்கப்பட்டன. இருபதாம் நூற்றாண்டில் அகராதியியல் பெற்றுள்ள பெரு வளர்ச்சிக்கு அடிகோலியது சதுரகராதியெனில், அகராதிகளில் பல்வேறு வகைகளுக்குக் கால்கோலிட்டது தமிழ்–இலத்தீன் பேச்சுமொழி அகராதியெனலாம். ஏனெனில் சொற்பிறப்பகராதி, ஒலிக்குறிப்பகராதி, பழமொழியகராதி என இன்னோரன்ன வகைகளில் தோன்றியுள்ளவற்றிற்குத் தோற்றுவாயாக இவ்வகராதி அமைந்திருத்தல் சாலும் என்பதற்கான குறிப்புக்கள் பரவலாக விரவிக் கிடக்கின்றன. அதில் 9000 சொற்கள் இடம்பெறுகின்றன.

சொற்கள் மொழியில் பயன்படும் முறையைத் தெளியவைக்க அவற்றைச் சொற்றொடரிலும் சிலவிடங்களில் இவ்வகராதியில் அமைத்துக் காட்டுகிறார். அத்தகைய சொற்றொடர்களாகப் பழமொழிகளும் பெருமளவில் காணப்படுகின்றன. அப்பழமொழிகள்தாமும் பொருளிலும், சுவையிலும், முறையிலும் வகையிலும் பன்னெறிப்பட்டவை; பல்வகை யாப்பமைதி கொண்டவை; எதுகை நயம், மோனை நயம் கொண்டவை; முரண்தொடை, திறன்நடை அமைந்தவை; முனிவருக்கு இருந்த பரந்துபட்ட மருத்துவ அறிவு இவ்வகராதியால் ஓரளவு விளக்கம் பெறுகிறதெனலாம். மருத்துவத் தொடர்பான சொற்கள், நோய்கள், மருந்துகள், முறைகள் முதலியவை சுட்டப்படுகின்றன.

போர்த்துகீஸ்–இலத்தீன்–தமிழ் அகராதி ஒரு பன்மொழி அகராதியாகும். போர்த்துகீஸியருடைய செல்வாக்குச்

சமயத்துறையிலும், ஆட்சித் துறையிலும் தமிழகத்தில் ஓங்கி யிருந்த காலம் அதுவாதலின் போர்த்துகீஸியருக்குப் பயன் பட அவ்வகராதி படைக்கப்பட்டது. அவ்வகராதியில் முதலில் போர்த்துகீஸிய மொழிச் சொற்களும் அடுத்து அவற்றுக்கிணையான இலத்தீன் மொழிச் சொற்களும், பின்னர், தமிழ்ச் சொற்பொருள்களும் தரப்பட்டிருக்கின்றன. ஏறத்தாழ 4000 சொற்கள் இடம்பெறுகின்றன.

## வாழ்த்துப்பா

சதுரக ராதியைச் செந்தமிழ்க் காக;
அதுபோல் கொடுந்தமிழ்க் காக்கி — அதுபோதா
தென்றுபோர்த்து கீசுமொழிக் கின்னொன்று தந்தவனை
மன்னுற வாழ்த்தும் மனம்.

## குறிப்பெண் விளக்கம்

1. சதுரகராதி ஆராய்ச்சி, பக். 237–239.

# 10. மொழியியல் முனைவர்

மொழியின் இயல்பினை வரையறுத்துரைப்பதே மொழியியல். அவ்வியல்பு சொற்றொடர் அமைப்பையும், அவை தரும் பொருளையும் உள்ளடக்கியது. அவற்றை அவ்வம் மொழியின் இலக்கணங்களாலும் அகராதிகளாலும் உணரலாம். அவற்றின் அண்மைக்கால அணுகுமுறை மொழியியல் என்னும் துறையாக வளர்ந்து விரிந்திருக்கிறது. இருபதாம் நூற்றாண்டில் சிறப்புற வளர்ந்த தமிழ் மொழியியல் துறைக்கு இருநூற்றைம்பது ஆண்டுகட்கு முன்னரே கோடிட்டவர் வீரமாமுனிவர் என்பதனை ஆழ்ந்து நோக்குவோர் உணர்வர்.[1] அவர் படைத்த இலக்கண நூல்களும், அகராதி நூல்களும் தற்கால மொழியியற் பிரிவுகளை முன்னுணர்ந்து, அவர் கூறியிருக்குந் தன்மையைத் தெளிவுபடுத்தும்.

தற்கால விளக்க மொழியிலார் ஆய்கின்ற ஒலியனியல், உருபனியல், தொடரியல் ஆகியவற்றை மட்டுமின்றி, வரலாற்று மொழியியல், ஒப்பியல் மொழியியல் ஆகிய மொழியியல் துறைகளின் அனைத்துக் கூறுகளையும் கொடுந்தமிழ் இலக்கணத்தில் அடிகளார் தொட்டுக் காட்டுகிறார். ஒலிக்கத் தொழிற்படுகின்ற உறுப்புக்களும், ஒலி நுட்ப வேறுபாடுகளும், வகையொலிக் குறிப்புக்களும் கொடுந்தமிழ் இலக்கணத்தில் இடம் பெறுகின்றன. இவை மொழியியலாரின் ஒலியனியற் பகுதியைத் தொட்டுக் காட்டுவன. உருபனியற் சிந்தனைகட்கும் தொடரியல் விளக்கங்கட்கும் ஒருசில பக்கங்கள் ஒதுக்கப்பட்டுள்ள. குறைவினைகள் சிலவற்றைக் குறிப்பிடும் பொழுது வேண்டாம், மாட்டேன் போன்றவற்றையும் கூறுகிறார். இவைகட்கிடையே உள்ள பொருள் வேறுபாட்டை விளக்குவது மொழியியலாரின் சொற்பொருளியல் பகுதியைச் சாரும். "விருப்பமற்ற ஒன்று மரியாதைக்குரியதாயின் அதனை மறுக்க 'வேண்டாம்' என்றும், மரியாதையற்றதாயின்

'மாட்டேன்' என்றும் கூற வேண்டும்'' எனக் குறிப்பிடுவது வரலாற்று மொழியியலில் பொருளியற் கூறாகும். ''இந்நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு வகையான பேச்சு முறை அமைந்துள்ளது'' எனக் குறித்து எடுத்துக் காட்டுவது ஒப்பியல் மொழியியற் பகுதியின் வட்டார மொழியியற் குறிப்பாகும். இந்தோ ஐரோப்பிய மொழிக் குடும்பத்தைச் சார்ந்த இலத்தீன் மொழியைத் திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்த தமிழோடு ஒப்புமைப்படுத்திக் காட்டுவது ஒப்புமை மொழியியற் கூறாகும். இவைபோன்ற குறிப்புக்கள் தற்கால மொழியியற் கொள்கைகட்கு முற்றிலும் நிகரனவாகக் கொள்வதற்கு இடமில்லையெனினும், மொழியியற் சிந்தனை அவர் உள்ளத்தில் கருக்கொண்டிருந்தது என்பதைக் காட்டும்.

## வாழ்த்துப்பா

அறிவியல் சார்மொழி யாய்வைத் தமிழில்
அறிமுகம் செய்த அறிஞன் — சிறிதும்
தெரியா தவர்க்கும் தெளியச் சிறப்பை
உரித்தாக் குவோம்நாம் உவந்து.

## குறிப்பெண் விளக்கம்

1. சதுரகராதி ஆராய்ச்சி, பக். 216–230.

# 11. மொழிபெயர்ப்பு மூலவர்

தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவுதற்கு முதன் முயற்சியை மேற் கொண்ட பெருமை வீரமாமுனிவரைச் சாரும். தமிழின் பெருமைக்கும் புகழுக்கும் முதற் காரண மான திருக்குறளை முதன் முதல் ஐரோப்பிய மொழி ஒன்றில் மொழி பெயர்த்து உலகறியச் செய்தவர் அவர். இலத்தீன் மொழியில் அறத்துப்பாலையும், பொருட்பாலையும் மொழி பெயர்த்து அயல் நாட்டாருக்கு அறிமுகப்படுத்தி மற்றைப் பலர் வெவ்வேறு உலக மொழிகளில் மொழி பெயர்க்க வழி காட்டியவர் அவரே. தம் மொழிபெயர்ப்பின் சில இடங்களில், அவர் தரும் விளக்கம் சிந்தனைக்குரியது.

'மலர்மிசை ஏகினான், என்னும் தொடர் கொண்டு திருவள்ளுவரை ஒரு சமயவாதியாகக் காட்ட முனைபவர் உண்டு. கிறித்தவச் சமயஞ் சார்ந்த வீரமாமுனிவர் அதற்கு இடந்தராமல் அத்தொடருக்கு 'மலர்களுக்கு அழகினை அளிப்பவர்' என்னும் பொருள்தருமாறு மொழிபெயர்த்துள் ளார்.[1]

சில சொற்களுக்கு அவர்தரும் குறிப்புக்கள் ஆராயத் தக்கன. அந்தணர் என்பதற்கு அவர், 'அழகாக அணி செய்யப்பட்டோர்' என்னும் குறிப்புக் காட்டுகிறார்.[2] அணி யெனில், இனியவராய்க் காட்சிக்கும், பேச்சுக்கும் எளிமை பூண்டு நடக்கும் தன்மை என்பதனை அவரது விளக்கத் தால் அறியலாம்.

சிலவற்றுக்கு இவர்தரும் விளக்கம் புதுமையானது. "அறத்தாறிதுவென வேண்டா" எனத் தொடங்கும் குறட்பா விற்குப் பழைய விளக்கம் நல்லதாகப்பட்டாலும் பொரு ளோடு தொடர்புபடுத்திக் காண்பதற்குக் கடினமாக உள்ள தெனக் கூறி, "ஒருவன் பல்லக்குத் தூக்குவோரால் பல்லக் கில் தூக்கிச் செல்லப்படுவதை வைத்து, அறம் இவ்வாறு இயங்கும் என்று எண்ணவேண்டாம். அதாவது, பல்லக்குத்

தூக்குவோர் ஒருவனைப் பல்லக்கில் தூக்கிச் செல்கின்ற அதே முறையில் அறமும் இயங்குகின்றது என்று நினைக்க வேண்டாம். ஏனென்றால் அவர்கள் கல்லறைவரை கூட அவனுக்குத் துணையாகச் செல்ல இயலாது; அறமோ இறப் பிற்குப் பின்னும் ஒரு மனிதனைக் கைவிடுவதில்லை" என விளக்குகிறார்.

திருக்குறள் மட்டுமன்றி, வேறுபல இலக்கியச் செய்யுட் களையும் தாம் இலத்தீனில் எழுதிய இலக்கண நூல்களில் மேற்கோள் காட்டுகிறார். அவ்விடங்கில் தமிழில் அச் செய்யுட்களை எழுதி, அவற்றுக்கான பொருள்களை இலத்தீன் மொழியில் கூறுவதும் மொழிபெயர்ப்பை ஒத்ததே. செந்தமிழ் இலக்கணத்தில் நாலடியார், சீவகசிந்தா மணி, நைடதம், கம்பராமாயணம், பாரதம், தேம்பாவணி, நான்மணிக்கடிகை, சிலப்பதிகாரம் போன்ற இலக்கியங் களின் செய்யுட்கள், தமிழில் அவற்றுக்கான இலத்தீன் மொழிபெயர்ப்புரையுடன் இடம்பெறுகின்றன.

வீரமாமுனிவரின் பரமார்த்த குருகதை உரைநடை நூலாகும். அதனை அவரே இலத்தீனிலும் மொழிபெயர்த்து எழுதியிருப்பது உரைநடை மொழிபெயர்ப்புக்கு மட்டு மன்றிச் சிறுகதை மொழிபெயர்ப்புக்கும் சான்றாகும்.

தம் வாழ்நாளில் இறுதியாகப் படைத்த தமிழ் இலத்தீன் அகராதியில் சில சொற்களின் பொருள்களை விளக்கத் தொடர்களில் அமைத்துக் காட்டுகிறார். அத்தொடர்கள் பழ மொழிகளாக, உவமைத் தொடர்களாக, புலவோர் மொழி களாக அமைந்துள்ளன. அவற்றையும் இலத்தீனில் அகராதியில் மொழிபெயர்த்துக் காட்டியிருப்பது அவரது மொழிபெயர்ப்பாற்றலைக் காட்டும்.

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தலும் மொழிபெயர்ப்பின்பாற்பட்டதே. தமிழில் உள்ளவற்றை இலத்தீனில் மொழிபெயர்த்திருப்பதைப் போன்றே பிறமொழியினின்று தமிழிலும் மொழிபெயர்த்துக் காட்டியிருக்கிறார். தாவீதனின் முதல் சங்கீதத்தைச் செய்யுள் வடிவில் மொழிபெயர்த்துக் காட்டித் தம் திறத்தைப் புலப்படுத்தியிருக்கிறார்.[5] இவ்வாறு, தமிழ்மொழி வரலாற்றில் நன்கு வளராத ஒரு புதிய துறையின்

வளர்ச்சிக்குக் கால்கோள் இட்ட ஒருவரை, அத்துறைக்கு மூலவர் என்பது மிகைப்பட்ட கூற்று அன்று.

## வாழ்த்துப்பா

குறள்மொழி தன்னைக் குவலயம் காணத்
திறனாய் இலத்தீனில் தந்த — மறையான்
பரமார்த் தனின்கதை பாங்காய்ப் பெயர்த்த
மரபினை வாழ்த்துவது மாண்பு.

## குறிப்பெண் விளக்கங்கள்

1. வீரமாமுனிவர் அருளிய திருக்குறள் இலத்தீன் மொழி பெயர்ப்பு, பக். 8.
2. ,, ,, ,, ,, ,, , பக். 19.
3. வீரமாமுனிவர் அருளிய திருக்குறள் இலத்தீன் மொழி பெயர்ப்பு, பக். 23.
4. செந்தமிழ் இலக்கணம், பக். 20, 32, 58, 74, 75, 105, 110, 117.
5. செந்தமிழ் இலக்கணம், விதி, 114.

# 12. சிறுகதை முன்னோடி

இருபதாம் நூற்றாண்டின் சிறுகதை வளர்ச்சி தமிழ் மறு மலர்ச்சிக்குக் கிடைத்ததோர் அருங்கொடை. அக்கொடையின் பயனைத் துய்க்காத இதழ்கள், மலர்கள், வெளியீடுகள் எவையும் தற்காலத்தில் இல்லை. அத்தகைய சிறப்பிற்குரிய சிறுகதை தமிழில் கால்கொள்ள வழிவகுத்தவர் வீரமா முனிவர்.

மொழிகள் எழுத்துருப் பெறா முன்னரே, சிறுசிறு கதைகள், பாடல்கள் மக்கள் வாய்மொழியில் வழங்கி வந்தன. எழுத்து வடிவங் கண்டதும், இலக்கியம் படைத்தோர், அவ்வம்மொழி பேசும் மாந்தர் நாவில் நடமாடிய அக்கதைகள், பாடல்கள் போன்றவற்றைத் தத்தம் படைப்புக்களில் இடம்பெறச் செய்தனர். அவ்வகைக் கதைகளே நாளடைவில் கருவிலும், உருவிலும் மாறுதல் பெற்றுச் சிறுகதைக் கழனியைச் செழிக்க வைத்த பயிர்களாயின.

சிறுகதை வளர்ச்சி உரைநடை வளர்ச்சியோடு இரண்டறக் கலந்தது. ஏனெனில் சிறுகதையின் வடிவம் உரைநடை வடிவமே. உரைநடைக்கு உரமிட்ட வீரமாமுனிவர், அவர் காலத்தில் வழங்கிய சில நாட்டுப்புறக் கதைகளுக்கு உயிர் கொடுத்து உரைநடை வடிவம் தந்தார். அதுவே தமிழ்ச் சிறுகதை உலகிற்கு வித்தாய் அமைந்தது.

தமிழ்நாட்டில் வழங்கிவந்த கதைகளோடு, ஈசாப் கதைகள், இலத்தீன் எழுத்தாளர் யூவனல் என்பாரின் நூலில் உள்ள ஒரு நிகழ்ச்சி ஆகியவற்றை உள்ளடக்கி எட்டுக் கதைகளாகப் பரமார்த்த குரு கதையை எழுதினார் வீரமாமுனிவர். பரமார்த்த குரு, அவருடைய சீடர்கள் ஆகியோரின் மடமைச் செயல்களை எட்டுக்கதைகளும் விளக்குகின்றன. இந்நூலைத் தமிழிலும் இலத்தீனிலும் எழுதியுள்ளார். இலத்தீன் முன்னுரையில், வேறுநாட்டுக் கதைகளை

யும் இணைத்துள்ளதை, "வெட்டிய மரத்தில் சிறுசிறு புறக் கிளைகளை இங்குமங்கும் ஒட்டிக் காட்டுவதுபோல இக் கதையில் வேறு சில கதைகளைச் சேர்த்துள்ளேன்" எனக் குறிப்பிட்டுக் காட்டுகிறார்.

நடப்பியல் நிகழ்ச்சிகட்குப் படைப்பாளன் கற்பனை யுருவம் தருவதே தற்காலச் சிறுகதை. கால நிகழ்ச்சிகட்கும் கருத்துப் பரவலுக்கும் காலத்திற்கு காலம் வேறுபாடுண்டு. எனவே தற்காலச் சிறுகதை உருவத்தை நினைத்து இரு நூற்றைம்பது ஆண்டுகட்கு முன்னைய பரமார்த்த குரு கதையினைச் சிறுகதைத் திறனாய்வுத் துலாக்கோலில் அள விடல் தகாது. ஆயினும் அதுவரை தமிழில் தலையெடுக்காத துறையில், கதைமாந்தர்களே உரையாடுகின்ற முறையில் பரமார்த்த குரு கதையைப் படைத்துத் தந்த திறமையை எவரும் போற்றாமல் இருக்கவியலாது. ஆதலின் "வீரமா முனிவர் ஊன்றிய 'பரமார்த்த குரு கதை' என்னும் ஆல விதை வ. வே. சு. ஐயரின் 'மங்கையர்க்கரசியின் காதல்' என்னும் குறுஞ்செடியாக வளர்ந்து இன்று மிகப்பெரிய ஆல மரமாகப் புதுமைப்பித்தன், ரகுநாதன், அழகிரிசாமி, ஜெய காந்தன் போன்ற முன்னணி எழுத்தாளர்களின் படைப்புக் களென்னும் விழுதுகளைப் பரப்பிப் பரந்து வளர்ந் துள்ளது"[1] என ஒரு திறனாய்வாளர் கூறுவது முழுதும் பொருந்தும்.

## வாழ்த்துப்பா

சீரிய தென்னும் சிறுகதைக் கென்றொரு
வீரிய நல்விதை வித்தினான் — வேரியம்
பூங்கொடி யான்புகழ் பாடிய மாமுனி
தாங்குவோம் நாமவன் தாள்.

## குறிப்பெண் விளக்கம்

1. சிவசுப்பிரமணியன், ஆ., சிறுகதைக்கு வித்திட்டவர். பக். 12.

# 13. எள்ளல் நூல் வல்லுநர்

இலக்கிய வகையுள் எள்ளல் இலக்கியம் (Satire) ஒரு வகை. சமுதாயத்தில் சிலரிடம் காணப்பெறும் குறைபாடு களை நகைச்சுவையோடு வெளிப்படுத்துவது அதன் இயல்பு. அதைக் கண்ணுறுவோர் தம்மிடம் அக்குறைபாடில் லாமல் நடந்து கொள்ளத் தூண்டுவது அதன் பயன். அவ் வகை நாடகங்கள், கதைகள் சில அண்மைக் காலத்தே தமிழில் தோன்றியுள்ளன. அவை சமுதாயத்தில் தற்காலத் தில் காணப்படும் குறைபாடுகளைச் சுட்டிக் காட்டக்கூடும். ஆனால் அவ்வக்காலச் சூழ்நிலைகட்கு ஏற்ப மக்களி டையே வாய்மொழியாக அத்தகைய கதைகள் வழங்கி வந் துள்ளன. அவற்றிற்கு வரிவடிவம் கொடுத்துத் தமிழ் உரை நடையில் புதியதோர் இலக்கிய வகை உருவாகுமாறு பரமார்த்த கதையை வீரமாமுனிவர் படைத்துள்ளார். அதன் சிறப்பினை அறிஞர் பலர் பாராட்டியுள்ளனர். டாக்டர் கைலாசபதி, "கல்வியறிவில்லாதாரும் கேட்டின்புறும் வண்ணம் வீரமாமுனிவர் எழுதிய பரமார்த்த குருகதை நகைச்சுவை நிறைந்து காணப்படுகிறது. அந்த வகையில், அறிவியல் சார்ந்த நூல்களும் பயபக்தியுடன் கூடிய நூல் களுமே எழுதப்பட்ட கால கட்டத்தில் வயிறு குலுங்கச் சிரிக்க வைக்கும் வேடிக்கைக் கதையொன்றை எழுதித் தமிழ் வசனத்தின் எல்லையை விரிவு படுத்திய இத்தாலிய முனிவர், நவீன நகைச்சுவை எழுத்தாளரின் முன்னோடி என்று கூற லாம்"[1] என்பர். அவர் கூறுவது போன்று தமிழ் நகைச்சுவை நூலின் முன்னோடியாக அஃது அமைந்ததாற்றான் உலகின் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. வீரமாமுனிவரே அதனை இலத்தீனிலும் எழுதினார். பாபிங்டன் என்பார் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். கமீல் சுவலபில் செக் மொழியில் தந்துள்ளார். அபீதுபாஸ் என்னும் துறவி பிரெஞ்சு மொழியில் ஆக்கியுள்ளார். ஐம்பத்து நான்கு மொழிபெயர்ப்புக்கள் வெளிவந்துள்ளன

வாகக் குறிப்பிடுவர்.[2] விநோதரச மஞ்சரியில் அவிவேக பூரண குரு கதையாக இடம் பெற்றுள்ளது. இவ்வாறு பரமார்த்த கதை செல்வாக்குப் பெற அதிலமைந்துள்ள நகைச்சுவையே காரணமாகும். இத்தகைய நகையுணர்வுப் படைப்புக்கள் வரிவடிவம் பெறக் கால்கோளிட்டவர் என்னும் பெருமை வீரமாமுனிவருக்கே உரியது.

## வாழ்த்துப்பா

ஏளனவி லக்கிய மென்று படைத்திட
ஆளிலை யாக அதற்குமந் — நாளிலே
வித்தாகத் தந்த விதத்தினை யெண்ணியவ்
வித்தகனைப் போற்று வியந்து.

## குறிப்பெண் விளக்கங்கள்

1. சிவசுப்பிரமணியன், ஆ., 'சிறுகதைக்கு வித்திட்டவர்', பக். 8.
2. வளனரசு, பா., வீரமாமுனிவர் ஒரு விளக்கம், பக். 12.

# 14. வரலாற்று நூலினர்

தமிழ் உரைநடை கண்ட வளர்ச்சியின் பயனாகக் கிடைத்த இலக்கிய வடிவங்கள் பல. அவற்றுள் புதினமும் ஒன்று. புதின வகைகளுள் வரலாற்றுப் புதினம் ஒருவகை. தொடக்க கால வரலாற்றுப் புதினங்களை நோக்கின், அவற்றில் அரச மாந்தர் இடம் பெறுவர்; அவர்தம் பேராற்றல் விரித்துரைக்கப்படும்; ஒரு குருவும் இடம் பெறுவார்; அவர் தம் அருளுரை இடம்பெறும்; தலைமாந்தர் வெற்றிக்குக் குருவின் அருளுரை துணையாகும். பல மாந்தரைக் கொண்டு பல்லிடங்களில் நடைபெறும் கதைக் கூறுகள் இடம்பெறும். இத்தகைய கதைகள் முன்னர்க் காப்பியங்களிலும் இடம் பெற்றனவே. எனினும் அவை செய்யுளில் அமைந்தவை; வரலாற்றுப் புதினங்களோ உரைநடையில் அமைந்தவை.

வீரமாமுனிவர் இத்தகைய வரலாற்றுப் புதினங்கட்குத் தோற்றுவாய் தந்தவர் என்பது ஆழ்ந்து நோக்குவார்க்குப் புலனாகும். அவர் மொழியினைச் செந்தமிழ், கொடுந்தமிழ் என இருவகையாக்கி இலக்கணங்களை எழுதினார். செந்தமிழ்க்குச் சதுரகராதியும், கொடுந்தமிழான பேச்சு மொழிக்குத் தமிழ்–இலத்தீன் அகராதியும் படைத்தார். அவ்வாறு உரைநடை வகைகளுள் பேச்சுத்தமிழான பொதுத் தமிழின் இயல்பு காட்டப் பரமார்த்த குரு கதையையும், செந்தமிழின் இயல்பு சுட்ட வாமன் சரித்திரத்தையும் எழுதினார். இவை இரண்டும் கதைக் கூறுடையன என்பதனைக் காட்டத் தலைப்பிலேயே கதை, சரித்திரம் என்னும் சொற்களை இணைத்தார்.

இவற்றுள் சரித்திரம் என்னும் சொல் வரலாற்றுக் குறிப்புடையது. வாமன் சரித்திரம் வாமன் என்பான் வரலாறு கூறுவது. தம் தேம்பாவணிக் காப்பியத்தின் இருபத்தெட்டாம் படலமாகிய வாமன் ஆட்சிப் படலச் செய்தியே வாமன் சரித்திரமாக எழுதப்பட்டது. பிற்கால வரலாற்றுத்

தலைமாந்தர்களைப் போல வாமனும் வில்லாற்றலில் வல்லவன்; கல்வியில் தேர்ந்தவன். நீதிமொழிகளை ஆர்வத் தோடு கேட்பான்; ஆயினும் சிற்றின்ப நாட்டத்தால் அவற் றைப் பின்பற்ற இயலாதென எண்ணினான். காப்பியத் தலைவர் குருவாக வந்து அவனுக்கு அறவுரை தந்து அவனது உள்ளத்தைச் செம்மைப்படுத்துகிறார். வாமன் கண்ணீர் விட்டு அவர் பாதத்தில் விழுகிறான். இதுவே அச் சரித்திரத்தின் கதைக்கூறாகும்.

வரலாற்றுப் புதினத்தில் வரும் மாந்தர் போலவே சூசை யும் வாமனும் அமைகின்றனர். வரலாற்றுப் புதினம் போன்றே உரைநடையில் அமைந்துள்ளது. தொடக்க கால வரலாற்றுப் புதினங்கள் போன்றே செந்தமிழ் நடை கொண்டது. வரலாற்றுப் புதினங்கள் போன்றே கற்பனை யாக மாந்தர் படைக்கப்பட்டுப் படைப்பாளன் விரும்பும் கொள்கைகளை வலியுறுத்தும் கருவியாகவும் உள்ளது. ஆனால் இரு வேறுபாடுகள் உள்ளன. இரண்டே மாந்தர் இதில் இடம் பெறுகின்றனர். பிற்காலப் புதினங்களில் பல் லோர் இடம் பெறுவர். வரலாற்று மெய்மைச் சான்று எதுவும் இதில் இல்லை. பிற்காலப் புதினங்களில் அதன் அடிப்படை யும் உண்டு. எனினும் வரலாற்றுப் புதினம் என்னும் உரை நடை வடிவம் கால்கொள்ளா நாளில், அத்தகைய சிந்தனை யோட்டம் இன்றேனும், அவ்வடிவ அடிப்படை கொண்ட வாமன் சரித்திரத்தைத் தீட்டிய வீரமாமுனிவரை வரலாற்று நூலின் வழிகாட்டி எனக் கூறினும் அது மிகைப்பட்டதன்று.

## வாழ்த்துப்பா

வரலாற்று நூற்கு வழிவகுத்த பெம்மான்
தரமுடைய நூல்களைத் தந்தே — தரணிமேல்
எல்லாப் புகழும் எமதுதமிழ் பெற்றிட
வல்லான் வகுத்ததை வாழ்த்து.

# 15. நாட்டுப்புறவியலாளர்

தமிழகத்தில் பணியாற்றிய மேனாட்டுச் சமயப் பணியாளரிடையே தமிழகத்தின் பெரும்பான்மைப் பகுதிகட்குச் சென்று பணியாற்றிய பெருமைக்குரியவர் மிகச் சிலரே. அவருள் வீரமாமுனிவரும் ஒருவர். மேலைக் கடற்கரைத் துறைமுகமான கொச்சி முதல் கீழைக் கடற்கரைப் பகுதியான பாண்டிச்சேரி வரை சென்றுள்ளார். தென்கோடியில் உள்ள குமரிப் பகுதியிலிருந்து வடக்கே சென்னையைச் சார்ந்த மைலாப்பூர் வரை சென்ற அனுபவம் அவருக்குண்டு. எனவே தமிழகக் கிராமங்களில் அவருக்கு நேரடித் தொடர்பு இருந்துள்ளது. அவர்தம் மொழிகள், வழக்காறுகள், செயற்பாடுகள், பழக்க வழக்கங்களை நேரடியாகத் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு அவருக்கிருந்தது. அவற்றைத் தம் படைப்புக்களிலும் அவர் வெளிக்கொணர்ந்த திறம் அவரை ஒரு நாட்டுப்புறவியல் அறிஞராகப் படம்பிடித்துக் காட்டுகிறது.

நாட்டுப்புறவியலின் அனைத்துக் கூறுகளின் சாயல்களும் வீரமாமுனிவரின் படைப்புக்களில் காணக்கிடக்கின்றன. தேம்பாவணிக் காப்பியத்தில் அமைந்து கிடக்கும் கிளைக்கதைகளை எல்லாம் நாட்டுப்புறவியலின் புராணவியற் கதைக் (Myths) கூறுகளாகக் கொள்ளலாம். தேம்பாவணியில் வரும் தாவீது கோலியாற்றைக் கவணெறிந்து வீழ்த்தும் நிகழ்ச்சி வீரவியற் கதைக் (Legends) கூறாகும்.[1] வேடனும் புறாவும் பற்றிய கதை,[2] குருடர் கண்ட யானையின் கதை,[3] கிணற்றுள் விழுந்த சுறாமீன் கதை[4] ஆகியன தேம்பாவணியில் கூறப்படுகின்றன. இவை விலங்கியற் கதைக் (Fables) கூறுகளாம். வானவர்களின் வரவு, செயல்கள் முதலியவற்றை தேவதைக் கதைக் கூறுகளாகக் (Fairy Tales) கொள்ளலாம். இவ்வாறே பழமொழிகள், உவமைத் தொடர்கள், ஒலிநயப் பாடல்கள் போன்றவற்றைத் தம் காப்பியத்தில் படைத்துக் காட்டியிருப்பது[5]

அவரது நாட்டுப்புறவியலுணர்வைத் தெளிவிக்கும். நாட்டுப்புற மக்கள் வாழ்வியலோடு இரண்டறக் கலந்து பழகித் தம் பணியை ஆற்றியதால் அவர்களிடையே வழங்கிய பழமொழிகள், வழக்குச் சொற்கள் முதலியவற்றைத் தம் படைப்பில் காட்டியுள்ளார். அதன் பயனாகத் தம் அகராதிகளிற் கூடப் பொருள் விளக்கங்கட்காக அவற்றைப் பயன்படுத்தியுள்ளார். தமிழ்-இலத்தீன் பேச்சு மொழி அகராதியில் மட்டும் நூற்றுக்கு மேற்பட்ட பழமொழிகள் காணக்கிடக்கின்றன.[6] பரமார்த்த குரு கதையில் அடங்கியுள்ள கதைகள் அனைத்தும் நாட்டில் வழங்கிய நாடோடிக் கதைகளே. அவற்றோடு தாமறிந்த மேனாட்டு நாடோடிக் கதைகள், ஈசாப் கதைகள் போன்றவற்றிலிருந்து சிலவற்றைத் தேர்ந்து தொகுத்துப் படைத்துள்ளார். எனவே பல்துறைப் புலமை சான்ற வீரமா முனிவர் நாட்டுப்புறவியல் உணர்ந்த நல்லறிஞராகவும் திகழ்கிறார்.

## வாழ்த்துப்பா

நாட்டார் வழக்கியலை நன்குணர்ந் தேநமக்குக்
காட்டிய வல்லான் கவித்திறத்தைக் — கேட்டோர்தாம்
சிந்தை மிகமகிழ்ந்தே சீர்சால் குருமகனை
வந்தனையாய் வாழ்த்திடு வார்.

## குறிப்பெண் விளக்கங்கள்

1. வளன் சனித்த படலம், பாடல்கள் 9-31.
2. மகனேர்ந்த படலம், பாடல்கள் 23-25.
3. வாமன் ஆட்சிப் படலம் பாடல் 70.
4. குணுங்கு மந்திரப் படலம், பாடல் 110.
5. தேம்பாவணித் திறன், பக். 74-76.
6. சதுரகராதி ஆராய்ச்சி, பக். 243, 244.

# 16. பாடநூல் வழிகாட்டி

பொதுக்கல்வி கற்பதற்குரிய தனிக்கல்விக் கூடங்களும், அக்கல்விக்கான வரையறுக்கப்பட்ட பாடநூல்களும் தற் காலத்தில் எங்கும் உள்ளன. பழங்காலத்தில் பொதுக்கல்வி குருகுல முறையிலேயே — அஃதாவது குரு உறைகின்ற இடமே சென்று கற்பதும், அவர் மாணவர் திறமறிந்து தாம் கருதும் நூல்களைக் கற்பிப்பதுமான நிலையே — இருந்து வந்தது. சமயத் தத்துவங்களைக் கற்றுக் கொடுப்பதற்கான கல்வி நிறுவனங்கள் காஞ்சி போன்ற இடங்களில் இருந்திருக் கின்றன எனக் கருதப் படுகின்றது. அவையும் அக்காலத் தில் மொழிப்பயிற்சியை அளிப்பதற்கான பாடநூல்களைப் பெற்றிருந்தனவா என்பது தெரியவில்லை. மேனாட்டார் வரவால் நாம் பெற்ற பயன்களில் ஒன்று தனிக்கல்வி நிலை யங்கள், வரையறுக்கப்பட்ட பாட நூல்களைப் போன்ற வற்றைப் பெற்றமை எனலாம். தமிழகத்தைப் பொறுத்த வரை இத்தகைய பொதுக்கல்விக்கெனத் தனிப்பாடநூல் முதன் முதல் எழுதியவராக வீரமாமுனிவர் தோன்றுகிறார் என்பது சிந்தனைக்குரியது.

குருகுல முறையில் கல்வி கற்றவர்கள் நம் நாட்டவர். அவருக்குத் தாய்மொழி தமிழாதலின் மொழியின் அமைப்பு, இலக்கண மரபு போன்ற அறிவு ஆகியவற்றைக் கற்கு முன்னரே தெரிந்திருப்பர். அதுகொண்டு, அடுத்த நிலையில் செந்தமிழ் இலக்கியங்கள், இலக்கணங்களை அவர்கட்குக் கற்றுக் கொடுக்கலாம். தாய்மொழி தமிழல்லாதாருக்கு அடிப் படைத் தமிழறிவு தேவை. அக்காலச் சூழ்நிலையில் இதழ்கள், நூல்கள் வெளிவராத காலத்தில், பேச்சு மொழியே பெரும்பாலும் வழங்கிய நிலையில், பேச்சுமொழி இயல்பும் இலக்கணமும் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டிராத பிறர் தமிழ் கற்க முற்படும் பொழுது இன்றியமையாதன. அதனை மனத்திருத்தியே தமிழ் கற்க விரும்பும் மேனாட்டாருக்குரிய பாடநூலாகப் பரமார்த்த குருகதையை

ஆக்கினார் வீரமாமுனிவர். நாட்டுப்புறவிலக்கியக் கூறுகள் உடையதாயினும், எள்ளல் இலக்கிய முதனூலாய் அஃது அமைந்திருப்பினும் அந்நூற்படைப்பின் அடிப்படை நோக்கம் பாடநூல் நோக்கே. வீரமாமுனிவர் படைப்புக் களை ஆய்ந்தவரும், பரமார்த்த குரு கதையினை இலத்தீன் மொழிபெயர்ப்புடன் பதிப்பித்தவருமான மறைத்திரு ஞானப் பிரகாச அடிகளார் இந்துமத மடாதிபதியையும், திருத்த முறைக் கிறித்தவரையும் ஏளனம் செய்யும் நோக்கத்தில் பரமார்த்த குரு கதை எழுதப்பட்டதாகச் சிலர் குறிப்பிட்டி ருப்பதை மறுத்து, வீரமாமுனிவர் கூறியுள்ள காரணங்களை எடுத்துக் காட்டுகிறார். "பேச்சுத் தமிழின் இலக்கணம் படிக்கும் வெளிநாட்டு மதத் தொண்டருக்கும் பாடப்புத்தக மாக இந்நூல் அமைந்து, கசப்பான இலக்கணத்தை இனிப் பாக நகைச்சுவைக் கதையின் வழியே காட்ட வேண்டும் என்பது ஒரு நோக்கம். பொதுத்தமிழ் நூல்கள் அன்று அச் சேறாமல் கைப்பிரதி நூல்களாகவே இருந்தன. படியெடுப் போரின் அறியாமையால், சோம்பலால் பக்கந்தோறும் எழுத்துப் பிழைகள் பெருகிக் கிடந்தன. இந்தக் கதை நூலை அச்சிட்டால் எழுத்துப் பிழைகள் எழுவதைத் தவிர்க்கலாம் என்றும் முனிவர் எண்ணினார்" எனத் தம் பதிப்புரையில் கூறுகிறார்.

பரமார்த்த குரு கதையின் இலத்தீன் முன்னுரையில் வீரமாமுனிவர், "படியெடுப்போரின் அறியாமை ஓரளவும் சோம்பல் ஓரளவும் காரணமாகப் பற்பலப் பொதுத்தமிழ் நூல்களில் ஒரு பக்கங்கூட எழுத்துப் பிழையின்றி இருப் பதை நாம் காண முடியாது".

"இது மொழி பயிலத் தொடங்குவோருக்குத் தொல்லை யாகவும் தீமையாகவும் முடிகிற காரணத்தால் இச்சில எடுத்துக்காட்டுகளை அச்சிலேற்ற நினைத்தேன். அச்சுப் பிரதி கொண்டிருக்கும் தமிழ் மாணவர்கள் தமிழில் உள்ள எழுத்து ஒழுங்குகள் எல்லாம் காப்பாற்றப்பட்டிருப்பதற்கு எடுத்துக்காட்டுக்களைக் கொண்டிருப்பார்".

"இவற்றில் தொடக்கத்தில் பிழையான எழுத்துக் களுக்குப் பழக்கப்படாமல் இருப்பர். இந்த நோக்கத்தோடு முதலில், போதிய அளவு நகைச்சுவை கொண்டதும் இப் பகுதியில் பேர் பெற்றதுமான கதையைத் தேர்ந்து

கொண்டேன். இவ்வாறு பயனுள்ளதோடு நயனுள்ளதைக் கலந்து எரிச்சலும் களைப்பும் நிறைந்த இந்த மொழிக் கல்வியை எளிதாக்கி இனிய குழலோசையில் குழைத்த தாகக் கொடுக்க என்னால் கூடும். இதனால் உள்ளங் கவரப் படும். இன்பமடையும்'' எனக் கூறுகிறார்.

இக்குறிப்புக்கள் அனைத்தும், பிழையற்ற தமிழ் மொழிக் கல்விக்குத் துணையாகும் பாடநூலைத் திட்டமிட்டு முதலில் எழுதியவர் வீரமாமுனிவர் என உணர்த்துகின்றன.

## வாழ்த்துப்பா

கற்கத் தொடங்கியோர்க்குக் காட்டுதற் கேயுரிய
நற்றுணையாய் நல்கிய நூல்களைப் — பற்றியே
பின்னோர் படைத்திட்டுப் பீடுபல பெற்றதாலப்
பொன்னோன் திருவடியைப் போற்று.

# 17. ஆய்வு முறை நெறிஞர்

ஆய்வேடுகளையோ ஆய்வு நூல்களையோ படைக்கும் முறையில், ஒருசில நெறிகளை அறிஞர்கள் பின்பற்றி வருகின்றனர். அவ்வொழுங்குகள் ஆய்வின் தரத்தினை மதிப்பிடவும், ஆய்வுப் பரப்பினை வெளிக்கொணரவும், ஆய்வுக்கு மேற்கொண்ட முயற்சிகளைத் தெளிவுபடுத்தவும் துணைபுரிகின்றன. இம்முறைகளில், தாம் படைப்பில் காட்டியிருக்கின்றவற்றின் பொருளைப் பட்டியலிட்டுக் காட்டுவதும் ஒரு நெறி. நூல் முழுவதையும் படிக்க முடியாதோர் அந்நூலில் எவ்வெப் பொருள்கள் பற்றிப் பேசப்படுகின்றன என்பதனைப் பட்டியலைப் பார்த்தாலே புரிந்து கொள்ளலாம். அப்பட்டியலை நூலுக்கு முன்னோ பின்னோ அமைத்துக் காட்டுவர். நூலுக்கு முன் அமைவதைப் பொருளடக்கம் என்பர். அதில் முதற் பக்கம் தொடங்கித் தொடர்ந்து வரும் செய்திகளின் தலைப்புக்கள் எண் நிரன் முறையில் அமையும். ஒரு குறித்த பொருளை மட்டும் பார்க்க விரும்பின் அட்டவணை முழுதும் சென்று தேட வேண்டும். அவ்வாறன்றிப் பேசப்படும் பொருள்களையும் அகரநிரன் முறையில் அமைப்பின் எளிதில் காணலாம். மேலும் அப்பொருள்கள் நூலின் எப்பக்கங்களிலிருக்கின்றன என்னும் குறிப்பும் பொருளினையொட்டிக் குறிக்கப்பட்டிருப்பின் உடனே அவற்றைப் புரட்டித் தேவையான பொருள்களை எளிதில் காண முடியும். இவ்வகைப் பட்டியலைப் பொருள் அட்டவணை (Index) என்பர். இத்தகு முறையினைத் தமிழ் நூல்களுக்கு முதன் முதல் கொண்டு வந்தவர் வீரமாமுனிவரே. தாம் 1728–இல் எழுதிய வேதவிளக்கம் என்னும் நூலின் இறுதியில் முதன்முதல் இவ்வகைப் பட்டியலைத் தருகிறார். அவ்வாறு தரப்போவதை நூலின் முன்னுரையாகிய பாயிரத்திலேயே "மீளவும் வேண்டும்பொழுது இதிலே வைத்த பொருளைத் தடவாமல் எடுத்துக் கொள்ளும்படிக்குப் பதினெண்ணதிகாரமாக

முடித்த நூலை நூற்று நாற்பது பிரிவாக வகுத்து இலக்கமும் இட்டு அவ் இலக்கப் பிரிவுகளைப் பற்றிப் பொருள் அட்டவணை முடிவில் எழுதித் தருவோம்'' எனக் குறித்து விடுகிறார். நூலின் இறுதியில் பொருளட்டவணை விவேகம் எனத் தலைப்பிட்டு, அவ்வட்டவணையை எவ்வாறு காண வேண்டும் என்னும் குறிப்பும் தருகிறார். அக்குறிப்பில். ''பாயிரத்திற் சொன்னபடி இந்நூலிலுள்ள பிரதான பொருட் களை வேண்டும் தன்மைத்துத் தடவாமல் எவரும் எடுத்துக் கொள்ளும்படிக்குக் கண்காட்டியாக அகர முதலெழுத்து ஒழுங்கோடு பொருளட்டவணை தந்தோம். இதிலே குறித்த முதல் இலக்கம் நூற்று நாற்பது பிரிவுகளாக்கி ஒவ்வொரு பிரிவின் முதலிலே வைத்த இலக்கம் என்றும், இரண்டாம் இலக்கமோவெனில் எப்போதும் அந்தந்தப் பிரிவின் துவக் கத்தைக் காட்டாமல் பொருளுள்ள பக்கமே காட்டும் என்றும் அறிந்து வேண்டிய பொருளைத் தேடக் கடவீர்கள்'' எனக் கூறப்படுகிறது. பின்னர்ப் பொருளட்ட வணை என்ற தலைப்பிட்டு பொருள், பிரிவு, பக்கம் என்னும் பிரிவுகளில் அவ்வட்டவணையைத் தந்துள்ளார். அந்நூலுக்கும் பின்வந்த பேதகமறுத்தல் என்னும் நூலிலும் இத்தகைய அட்டவணை உள்ளது.

ஆய்வு நூலில் காட்டப்படும் மேற்கோள்கள் எந்நூலில், எப்பக்கத்தில் உள்ளது எனத் தெளிவாகக் குறிப்பிடுவது ஆய்வுக்கு மிக இன்றியமையாதது. இம்முறை வீரமாமுனிவ ருடைய உரைநடை நூல்களில் நன்கு பின்பற்றப்பட்டிருக் கிறது. சான்றாகப் பேதகமறுத்தலின் பாயிரத்தில் விவிலியத் திலிருந்து ஒரு நிகழ்ச்சிக் குறிப்பைச் சுட்டும்பொழுது, ''அருளப்பர் சுவிசேஷத்தின் 18-ஆம் அதிகாரம், 29-ஆம் வசனத்தில் யூதர்கள் கூடித் தாங்கள் பிடித்த சேசுநாதரைப் பிலாத்து முன்பாகக் கொண்டுவிட்ட விடத்திலே'' எனக் காட்டுவதினின்று விவிலியத்தின் அப்பகுதி எவர் எழுதிய தில் உள்ளது? எந்த எண்ணிட்ட வசனத்தில் உள்ளது? என்பன போன்ற செய்திகளை அறிய முடிகிறது.

மற்றவர் நூல்களிலிருந்து மேற்கோள் காட்டுவ தோடன்றித் தம் நூலிலிருந்தே மேற்கோள் காட்டும் பொழுதும் இத்தகைய நெறிமுறைகளைக் கைக்கொள் கிறார். அதற்கு ஓர் எடுத்துக்காட்டாக, ''ஆகிலும் இந்த

விஷயத்திலே நாம் சொல்லும் தன்மை வேத விளக்கத்தின் 16-ஆம் அதிகாரம் 14-ஆம் பிரிவின் மூன்றாம் நியாத்திற் காணப்படுமே" என்னும் பேதகமறுத்தலின் பாயிரப் பகுதியைக் கொள்ளலாம்.

இவ்வாறாக ஆய்வு நெறிமுறை தமிழில் வளர அடிக்கல் நாட்டிய திருவடியாராக வீரமாமுனிவர் திகழ்கிறார்.

## வாழ்த்துப்பா

ஆய்வுநெறி தந்திட்ட ஆன்றோன் தமிழினில்
தோய்ந்து தனைமறந்த தொண்டனாம் — வாய்மை
வழுவாத இத்தாலி வன்றொண்டர் என்றே
தொழுவோம் அவன்றமிழ்த் தொண்டு.

# 18. தமிழோசை பரப்புநர்

தேமதுரத் தமிழோசையினை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும் என இருபதாம் நூற்றாண்டில் வேண்டுகோள் விடுத்தார் அமரகவி பாரதி. ஆனால் அதற்கு இருநூறு ஆண்டுகட்கு முன்னரே அம்முயற்சியில் ஈடுபட்ட பெருமகனார் வீரமாமுனிவர். பொதுவாக, இலக்கண நூல் களில் மேற்கோள்கட்காக முன்னோரின் செய்யுட்களை எடுத்தாளுங்கால் அச்செய்யுளை மட்டும் சுட்டுவது இயல்பு. ஆனால் வீரமாமுனிவரோ அச்செய்யுளின் ஆசிரியர் பெயரைச் சுட்டுவதோடன்றியும் அவரைப் பற்றிய விளக் கங்களையும் கூறுகிறார்; சில இடங்களில் அவர்தம் நூல் களைப் பற்றிய குறிப்புக்களையும் தருகிறார். மேனாட்டா ருக்காக இலத்தீனில் எழுதிய இலக்கண நூல்களில் மட்டு மன்றித் தமிழ்-இலத்தீன் அகராதியிலுங்கூட தமிழ்ப் புலவர்கள், தமிழ் நூல்கள் ஆகியவற்றைச் சுட்டி அவற் றிற்கு விளக்கமாகப் புலவர்களின் சிறப்புக்கள், இலக்கியங் களின் பெருமைகள் ஆகியவற்றை விரித்துரைப்பது[1] மேனாட்டாருக்குத் தமிழ்ப் புலவர்களையும், அவர்களது படைப்புக்களையும் அறிமுகப்படுத்துவதன் வழியாகத் தமிழ் மொழியின் சிறப்பினை உலகெங்கணும் அறியச் செய்ய வேண்டும் என்னும் நோக்கமன்றி வேறன்று. எனவே தரணியின் பிற பகுதியினருக்கு முதன் முதல் தமிழோசையை ஒலிக்கச் செய்த பாவலர் வீரமாமுனிவர் என்பது நினைவிருத்தற்குரியது.

### வாழ்த்துப்பா

இன்றமிழில் உள்ள இலக்கியச் செய்தியை
அன்றே யுலகிற் கறிவித்து — நின்றவன்
தேமதுர வோசையைத் திக்கெல்லாம் சொன்னவன்
நாமமதைப் போற்றுவோம் நாம்.

### குறிப்பெண் விளக்கம்

1. கிறித்தவ இலக்கியச் சிந்தனைகள், பக்., 57.

வீ. 8

# 19. தனித்தமிழ் ஆர்வலர்

தன்னேரிலாத் தமிழ் தனித்தியங்கும் ஆற்றல் உடையது. எனினும் வடமொழித் தாக்குறவால் அதன் தனித்தன்மை இடைக்காலத்தே குன்றத்தொடங்கியது. இருபதாம் நூற்றாண்டில் மீண்டும் மறுமலர்ச்சி காணத் தொடங்கியது. அம்மறுலர்ச்சிக்குத் தனித்தமிழ்ப் பற்றாளர் காரணராயினர். தனித்தமிழ் இயக்கங்கள் தூண்டுதல் தந்தன.

இத்தகைய தனித்தமிழ்த் தொண்டர்களில் குறிப்பிடத் தக்கவர் மறைமலையடிகள். அவர், தம் இயற்பெயராகிய வேதாசலம் என்பதனை வடசொல் என நீக்கிவிட்டு அதன் தூய தமிழ் வடிவமாகிய மறைமலை என்பதனைக் கொண்டார். அவருக்கு முன் இத்தகைய பெயர்மாற்றத்திற்கு வழிகாட்டியவர் சூரிய நாராயண சாஸ்திரியார் என்பது நினைக்கத்தக்கது. அவர் வடசொற்களில் அமைந்த தம் பெயரைப் பரிதிமால் கலைஞர் என மாற்றிக் கொண்டார். இவர் இருவரும் தமிழ்நாட்டிற் பிறந்தோர். தமிழைத் தாய் மொழியாகக் கொண்டோர். ஆனால் இத்தாலியத் தமிழராகிய வீரமாமுனிவர் இத்தகைய மாற்றத்திற்கு இவர்க்கு முன் எடுத்துக்காட்டாக உள்ளார் என்பது ஆய்வாளர் சிந்தனைக்குரியது.

இயற்பெயரான கான்ஸ்டண்டைன் ஜோசப் பெஸ்கி என்பதனை முதலில் தைரியநாத சாமி என மாற்றிக் கொண்டார். பின்னர் வீரமாமுனிவர் என்னும் பட்டம் மதுரைத் தமிழ்ச் சங்கத்தால் வழங்கப்பட்டது எனப் பலர் கருதுகின்றனர். அக்கருத்துக்கு வலிவூட்டும் அடிப்படைச் சான்று எதுவும் இல்லை எனக் கூறி, வீரமாமுனிவர் என்னும் பெயர் தைரியநாதசாமி என்பதன் மாற்று வடிவமே என்பது சதுரகராதி ஆராய்ச்சியில் விளக்கப்பட்டுள்ளது. வீரமாமுனிவரின் படைப்புக்களைப் பாராட்டிப் பாயிரம் பாட முனைந்த மாணவர்கள் அவர் அனுமதி பெற்றுத் தைரியம்

என்பதனை வீரம் என்று மாற்றிப் பாடினார்கள். மா என்பதனை பெருமைக்குரிய அடைமொழியாகக் கொண்டனர். காமாதிகளை முனிந்து வென்றவராதலின் முனிவர் என்பதனைச் சேர்த்தனர். தைரியநாதசாமி என்னும் பெயர் வீரமாமுனிவர் ஆயிற்று.[1] இதில் சிந்ததனைக்குரியது தைரியம் என்னும் சொல்லேயாம். தம் இயற்பெயரில் உள்ள கான்ஸ்டன்டைன் என்னும் சொல்லுக்கு நிகராகத் தைரியம் என, முதலில் மாற்றிக் கொண்டர். பின்னர் அதனை வடசொல் என எண்ணித் தூயதமிழில் வீரம் என ஆக்க அனுமதித்தார். எனவே வடசொற் பெயர் மாற்றத்திற்குத் தூண்டுதலாகவும் துலங்கிய இத்தாலிய முனிவர் தனித்தமிழ் உணர்வுடைய சான்றோர் எனப்போற்றிப் புகழ்தற்குரியர்.

## வாழ்த்துப்பா

தனித்தமிழ் மன்றங்கள் தோன்றாத நாளில்
முனிவனே மாற்றினான் முற்பேர் — தனிவழி
காட்டினான் நம்மொழி காக்கவோர் நல்வழி
நாட்டுவோம் நற்புகழ் நாம்.

## குறிப்பெண் விளக்கம்

1. சதுரகராதி ஆராய்ச்சி, பக். 10–14.

# 20. ஒப்பியல் விருப்பினர்

ஒப்பியல் என்பது இருவேறு படைப்புக்களை ஒப்பிட்டுக் காணுதல் ஆகும். கருப்பொருள், வடிவம், காலம், மொழி இவற்றின் அடிப்படையிற் ஒன்றுபட்டோ வேறு பட்டோ அவ்வொப்பீடு அமையலாம். மேனாட்டுத் தாக் குறவால் அண்மையில் தமிழில் ஒப்பியல் ஆய்வு அரும்பி யுள்ளது. ஆயினும் ஒப்பிட்டு நோக்கும் எண்ணம் தமிழரி டையே இருந்துள்ளது. முன்னோர் மொழியைப் பொன்னே போல் போற்றி மேற்கொள்வது கருத்து ஒப்புமையை நோக்கியதன் பயனே. உரையாசிரியர்கள், ஒருவர் கருத்துக் களை மற்றவர் தள்ளுவதும், கொள்ளுவதும் ஒப்பியலின் விளைவுகளே. இத்தகைய ஒப்புநோக்கு தமிழ் நூல்களுக் குள்ளேயே அமைந்து கிடந்தது. ஒருசிலர் வடமொழியோடு ஒப்பிட்டுக் கூற முனைந்தனர். மேனாட்டு மொழியியல்பு களோடு ஒப்பிடத் தொடங்கியவர் வீரமாமுனிவர்.

தம் கொடுந்தமிழ் இலக்கணத்தில், 'க' என்னும் எழுத்து இலத்தீன் மொழியில் வழங்கும் 'K' என்பதற்கும், 'ம' என்பது 'M' என்பதற்கும் 'ர' என்பது 'R' என்பதற்கும் 'ல' என்பது 'L' என்பதற்கும் ஒப்பாகும் என்கிறார். இது போன்று தமிழை இலத்தீன் மொழியோடு இலக்கண அடிப் படையில் ஒப்பிட்டுக் காண்கிறார்.[1] இலத்தீன் மொழியோடு மட்டுமின்றி, பிரெஞ்சு, போர்த்துகீசு, எபிரேயம் போன்ற மொழிகளோடும் ஒப்பிட்டுக் காட்டுகிறார்.[2]

செந்தமிழ் இலக்கண முன்னுரையில் திருவள்ளுவர் பற்றிக் குறிப்பிட்டு, 'திரு' என்னும் அடைமொழி பிளேட் டோவை 'Divine Plato' என அழைப்பதை ஒக்கும் என் கிறார். தமிழ் அசை, சீர்கள் பற்றிக் கூறும் பொழுது இலத்தீன் செய்யுளமைப்போடு ஒப்பிட்டுக் காட்டுகிறார்.[3] உவமைகளைப் பற்றிக் கூறுங்கால் ஐரோப்பியர் ஏற்றுக் கொள்ளாத அளவிற்கு மிக அதிகமாக மற்றக் கீழ் நாடு

களைப் போன்றே பயன்படுத்தினும், அறிவுரை கூறுவதற்கு அதனை ஒரு கருவியாகப் பயன்படுத்துவது பாராட்டத்தக்க தனிச்சிறப்பு என்கிறார்.[3] இவை ஒப்பிட்டாய்ந்த முயற்சி யின் முடிபுகளே. ஓரிடத்தில் தமிழ் இலக்கிய மரபுகளைக் குறிப்பிடும்பொழுது ஹோமரைச் சுட்டுகிறார். ஹோமர் ஒரே ஒருமுறை குதிரை பேசியிருப்பதாகக் கூறியிருப்பதைக் கூட மிக வேதனையோடு தாங்கிக் கொள்ளும் தம்மால், இயற்கைக்கு மாறாக விலங்குகள் பேசும் ஆற்றல் பெற்றி ருப்பது போலப் பல இடங்களில் தமிழ்ப் புலவர் பாடியிருப் பதைத் தம்மால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை எனக் குறிப்பிடுகிறார்.[4]

தமிழ்க் காப்பியங்களிலே கூட செய்யுள் அமைப்பிலே இரண்டனை ஒப்பிட்டுக் காணும் தன்மை அவரிடம் உள்ளது. சந்தநயம் மிக்க குழிப்பு என்னும் சந்தம் அமைந்த விருத்தச் செய்யுள் பற்றி விளக்கும் பொழுது கம்பன் இதனை அனேக இடங்களில் பயன்படுத்தியிருக்கச் சிந்தாமணியில் இரண்டோர் இடங்களில் மட்டுமே காணப் படுகிறது எனச் சுட்டுகிறார்.[5] இவையனைத்தும் வீரமா முனிவரின் ஒப்பியல் விருப்பைப் புலப்படுத்துவனவாம்.

## வாழ்த்துப்பா

ஒப்பாய் இலக்கியம் ஓர்ந்ததால் அத்துறையில்
ஒப்பில் தமிழை உயர்த்தினான் — இப்படி
நன்றாய்த் துலக்கிய நாவலர் முன்பில்லை
என்றும் அவன்புகழ் ஏத்து.

## குறிப்பெண் விளக்கங்கள்

1. சதுரகராதி ஆராய்ச்சி, பக். 219, 229.
2. செந்தமிழ் இலக்கணம், விதி, 55.
3. ,, ,, 103.
4. ,, ,, 105.
5. ,, ,, 92.

# 21. ஓவிய விற்பனர்

பல்வகைப் புலமைசான்ற அடிகளார் பல்கலை வல்லுநராகவும் திகழ்ந்துள்ளார். மேலைநாட்டு அடிகளார் கீழைநாட்டுத் தமிழகம் போந்தும் தமிழராகவே மாறி விட்டார். தாம் மாறியது மட்டுமன்றித் தாம் வழிபடும் தெய்வங்களையும் தமிழர் கோலத்தில் காணவே விழைந் தார். தாம் கோனான்குப்பத்தில் பணியாற்றியபொழுது அன்னைமரிக்கு ஆலயம் எழுப்பினார். அவ்வாலயத்தில் எழுந்தருளச் செய்யும் அன்னையின் திருவடிவைத் தமிழ்ப் பெண்ணாக வடிக்க முனைந்தார். திருவுருவினை மணிலா விலிருந்துதான் வரவழைத்தல் வேண்டும். அங்குள் ளோர்க்குத் தமிழ்ப் பெண்ணாக அமைக்க வேண்டும் என்னும் எண்ணத்தை எவ்வாறு புலப்படுத்துவது? அவர்கள் தமிழ்ப் பெண்ணின் வடிவம், ஆடை அணிகலன்களை அறியாதோராய் இருக்கலாம். எனவே, தாமே அன்னையின் திருவுருவினைத் தமிழ்ப் பெண்ணாய் உருவகப்படுத்தி, அழகிய ஓவியமாக வரைந்து மணிலாவுக்கு அனுப்பி வைத்தார். அவ்வோவியத்தை ஒத்த திருவுருவை வடித் தமைத்து மணிலாவிலிருந்து அனுப்பி வைத்தனர். அதனையே கோனான்குப்பத்தில் தாம் கட்டுவித்த கோவிலில் எழுப்புவித்துப் பெரியநாயகி எனப் பெயரிட்டார்.[1] தமிழுணர்வோடு உருவகித்த ஒன்றை, உருவகித்தவாறே மற்றோர் புரிந்து கொள்ளுமாறு வரையும் ஆற்றல் பெற்ற முனிவரைச் சிறந்த ஓவியராகவும் கருத இடமுண்டு.

### வாழ்த்துப்பா

பாவியம் கண்டநற் பாவலன்; பல்வகைக்
காவியம் தந்த கவிவளன் — ஓவியம்
பேணும் அவன்றன் பெருமை உலகினில்
காணும் அவன்புகழ்க் காப்பு.

### குறிப்பெண் விளக்கம்

1. Fr. Besse, 'Fr. Beschi, His Times and His writings', P. 37

# 22. எழுத்தறி நுணுக்கர்

தமிழ் எழுத்துக்களின் வரிவடிவங்கள் காலந்தோறும் மாறி வந்துள்ளன. தொன்மை நூலான தொல்காப்பியம் மயக்கம் ஏற்படக்கூடிய சிலவற்றிற்கு மட்டும் தெளிவு பெறும்வண்ணம் புள்ளி பற்றிய குறிப்புக்களைத்தருகிறது. பின்னர் வந்த நன்னூலும் முன்னோர் வழியே குறிப்புக் காட்டுகிறதே தவிரப் புதிதாக ஒன்றும் கூறவில்லை. உரை யாசிரியர்கள் சிற்சில குறிப்புக்களைத் தருகின்றனர். எனினும் எகர, ஒகரங்கள் (மேல் இட வேண்டிய புள்ளியைப் பின்னர் விட்டுவிட்டதால்) மெய்களோடு சேர்ந்து உயிர் மெய்யாகுங்கால் ஏகார ஓகாரங்களோடு வேறுபாடு தெரியாமல் போயிற்று என்பதனையும் பின்வந்தோர் குறிப்பால் அறியலாம். ஆயினும் அத்தகைய குழப்பம் ஏதுமின்றித் தற்காலத்தில் உயிர்மெய்யுடன் கூடிய எகர வொகரக் குறில், நெடில் வேறுபாடு பெற்று வழங்குவதற்கு வழிகண்டவர் வீரமாமுனிவர்.

தம் தொன்னூல் விளக்கத்தில் முன்னைய இலக்கண நெறிகட்கு ஏற்ப "நீட்டல் சுழித்தல் குறில்மெய்க் கிருபுள்ளி" என இலக்கணம் வகுத்து, அதற்கேற்ப உரையும் எழுதினார். ஆனால் தம் கொடுந்தமிழ் இலக்கணத்தில் தாம் புதுவதாகக் கண்டு தந்த எழுத்துச் சீர்திருத்தம் பற்றி, "எகரவொகரக் குறில்நெடில்களை வேறுபடுத்திக் காட்டப் புதிய முறையைக் கண்டுபிடித்திருக்கிறேன் என்பதைத் தாழ்மையுடன் கூறிக் கொள்கிறேன்" எனக் கூறித் தற் காலத்தில் வழங்கும் குறில் வடிவ, நெடில்வடிவக் கொம்புக் குறியீடுகளைச் சுட்டுகிறார். மேலும் "பலர் அதனை ஏற்றுக் கொண்டு பின்பற்றுகிறார்கள்"[1] எனவும் கூறுகிறார். அவர் செய்த இக்குறில் நெடில் சீர்திருத்த வடிவங்களையே தம் சதுரகராதியில் பயன்படுத்தியுள்ளதாக அதன் முன்னுரையிலும் குறிப்பிடுகிறார். ஆயினும் வீரமாமுனிவர் காலத்தையொட்டியகல்வெட்டிலும்மதுரைமீனாட்சியம்மன்

கோயில் ஊஞ்சல் மண்டபத்தில் அக்காலத்தில் எழுதப் பட்டுள்ள எழுத்து வடிவத்திலும், குறில் நெடில் வேறுபாடு டைய வடிவங்கள் காணப்படுவதால் வீரமாமுனிவருக்கு முன்னரே புது வரிவடிவம் தோன்றியதாகக் கருதுபவர் உண்டு.

ஒரு செய்தி நடந்து முடிந்த பின்னர் சில ஆண்டுகள் கழித்து கல்லிலோ சுவரிலோ தீட்டப்படலாம். அப்பொழுது முன்னிகழ்ந்த நிகழ்ச்சி ஆண்டையோ, நிகழ்ச்சிக்கு அடிப் படையான தொடக்க ஆண்டையோ குறிப்பிடுதல் கூடும். அவ்வாறே அவ்வடிவங்கள் காணப்படுவதாகக் கொள்ள வேண்டும். வீரமாமுனிவரின் சீர்திருத்தத்தைப் பலர் ஏற்றுப் பின்பற்றுவதாக அவரே குறிப்பிடுவது எண்ணத் தக்கது. இல்லையேல் 'Great men think alike' என்னும் மொழிக்கேற்ப இருவேறு மொழிப் புலவர்கள் ஒருவரறி யாமல் ஒருவர் தரும் இலக்கிய உவமைகள், சிந்தனைகள் போல, ஒருவருக்கொருவர் அறியாமற் செய்த சீர்திருத்த மாகக் கொள்ளலே முறை. ஏனெனில் வீரமாமுனிவர் வீண் புகழ் கோடலை வாணிகர் புல் தொழில்[2] எனக் கருதியவர். போலிப் புகழால் பெருமை பெற வேண்டாதவர். அவரது புனிதப்பணியைப் போற்றுவது தமிழரது கடன்.

## வாழ்த்துப்பா

வடிவக் குழப்பம் வளரா திருக்க
அடிகள் திருத்தம் அறிந்தோர் – படிக்க
எளிதாக உள்ளதனை எண்ணியே உள்ளம்
களித்திடக் கைகூப்பு வார்.

## குறிப்பெண் விளக்கங்கள்

1. கொடுந்தமிழ் இலக்கணம், விதி, 3.
2. தேம்பாவணி, ஞாபகப்படலம். பாடல், 32.

# 23. மருத்துவச் சித்தர்

வீரமாமுனிவர் படைத்த மருத்துவ நூல்களாகச் சில வெளிவந்துள்ளன; சிலவற்றின் பெயர்களும் சுட்டப்படுகின்றன. அவை அவர் படைத்தவைதாமா என்பது ஐயப்பாட்டிற்குரியது. எனினும் அவருக்கு மருத்துவ அறிவு மிகுதியாக இருந்துள்ளது என்பதில் ஐயமில்லை. அவரது தமிழ் – இலத்தீன் பேச்சு மொழி அகராதியில் பல்வேறு நோய்கள் குறிக்கப்படுவதன்றி அவற்றின் வகைகளும் சுட்டப்படுகின்றன. நோய்கள் போக்கும் மருந்து வகைகள், சிலவற்றைத் தயாரிக்கும் முறை, சிலவற்றைக் கையாளும் முறை போன்றனவும் விளக்கப்படுகின்றன. மேலும் மருத்துவக் குறிப்புக்கள் அடங்கிய பழமொழிகளும் கையாளப்படுகின்றன.[1] மேலும் இவரது மருத்துவ அறிவால் குணமடைந்தோர் பலர் எனவும் தெரிய வருகிறது. அவற்றுள் ஒருவர் அரியலூர் சமீன்தார் நங்கப்ப மழவராயர். வயிற்று வலியால் மிகவும் துன்புற்ற அவர் 1734ஆம் ஆண்டு, ஆகஸ்டு, 5ஆம் நாள் ஏலாக்குறிச்சிக்குச்சென்றார்; முனிவரைச் சந்தித்து அவரிடம் பெற்ற மருந்தால் குணமடைந்தார். அதன் காரணமாக வீரமாமுனிவர் எழுப்பிய கோவிலுக்கு நிலமளித்ததாகவும், அச்செய்தி கருங்கல்லில் செதுக்கப்பட்டதாகவும் தெரிய வருகிறது. கோவிலுக்கு நிலம் அளித்த செய்தி இன்றும் கல்லில் காணப்படுகிறது. அச்செய்தி பின்வருமாறு:

''ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1957 இராக்ஷத ஆடி மீ 26 ஸ்ரீமது ராஜமானிய ராஜ–ஸ்ரீ அரியலூர் சினிலையிட்ட நங்கப்ப மழவராயர் ஏலாக்குறிச்சித் திருக்காவலூர் வீராண தேவன் வழிக்குக் கிழக்கு கோவிலூர் வழிக்கு மேற்கு குட்டைக்குத் தெற்கு பெரிய ஏரிக்கு வடக்குட்பட்ட யாவுஞ் சறுவேசரன் கோவிலுக்கு சிலாசாதனமாகத் தந்தோம். சந்திராதித்தருங்கல்லுங் காவெரியும் முள்ளவுஞ் சுகமே யிருக்கவும். இந்தத் தருமத்து விகாதஞ் செய்பவன்

கங்கைக்கரையிற் காராம் பசுவைக் கொன்ற தோஷத்திற் குள்ளாகிப் பஞ்சமாப் பாதகனாகக் கடவான்''.

இவையனைத்தும், தமிழுக்கும், சமயத்திற்கும், மருத்துவத்திற்கும் தொண்டாற்றிய தமிழ்ச் சித்தர்களைப் போல செந்தமிழ், சித்தமருத்துவம், தம் சமயம் ஆகிய வற்றிற்குப் பணியாற்றிய மேனாட்டுச் சித்தராக வீரமா முனிவரைக் கொள்ள இடமளிக்கின்றன.

## வாழ்த்துப்பா

குருத்துவம் கண்ட குணவான் தமிழன்.
மருத்துவம் கண்ட மறையான் - திருவினான்
பல்வகை யாற்றலைப் பாங்காய்ப் பரவியே
நல்லுணர்வால் போற்றிடும் நாடு.

## குறிப்பெண் விளக்கம்

1. சதுரகராதி ஆராய்ச்சி, பக். 246 — 249.

# 24. தமிழக மரபினர்

மேலைநாட்டுச் சமயப் பணியாளருள் தமிழகத்திற்கு வந்ததும் தம்மைத் தமிழராக மாற்றிக்கொண்ட முதல்வர் தத்துவ போதகர் எனில், தமிழராகவே ஆகிவிட்டவர் வீரமாமுனிவர் எனலாம். நடையுடை, பழக்க வழக்கங்கள் மட்டுமன்றி, தம் படைப்புக்களைக் கூடத் தமிழகச் சாயல்கள், மரபுகளைப் பின்பற்றி உருவாக்கினார். தம் தேம்பாவணிக் காப்பிய நிகழ்ச்சிகள் நடந்த இடத்தைத் தமிழக மண்ணாகவே கருதி நாட்டுப்படலத்தை அமைத்துள்ளார். தமிழக இயற்கைப் புனைவுகளைப் பல விடங்களில் காட்டியுள்ளார். தமிழக மரபினையொட்டித் தாவீதனைச் சிங்கக்கொடியோன்[1] எனவும், திருக்குமரனை மேக வாகனத்தான்[2] எனவும் குறிக்கிறார். வழிபடு முறையில் உடல் முழுதும் தரையில்படத் தலையால் திருவடியைத் தொழல், மலர் தூவி வாழ்த்தல், மாலையிடல் போன்றவற்றைக் காட்டுகிறார். இவ்வாறே ஆலய அமைப்பு, விளக்கு வரிசை, தேர்த்திருவிழா முதலியவற்றை விளக்கும் வகையிலும், தமிழ்ப் புராணக் குறிப்புக்களைப் பயன்படுத்துவதிலும் தாம் ஒரு தமிழரே என்பதனை நிலை நிறுத்துகிறார்.[3] அன்னைமரியைத் தமிழ்ப்பெண்ணாக உருவாக்கித் தாம் எழுப்பிய கோவிலில் நிலைநாட்டினார். மேனாட்டு மரபுகளைப் போற்றும் நிலையினர் பெருகிவரும் இந்நாளில், இற்றைக்கு இருநூற்றைம்பது ஆண்டுகட்கு முன்னரே இத்தாலியர் ஒருவர் தமிழ் வாழ்வு நடத்தி, தமிழ் மரபு போற்றி மகிழ்ந்துள்ளார் என எண்ணிப் பார்க்கும் எவரும் அவருக்குத் தலைதாழ்த்தி வணக்கம் செய்யத் தவிரார்.

## வாழ்த்துப்பா

மேனாட்டு மோகத்தில் மூழ்கித் திளைப்பது
ஏனோ தெரியவிலை எம்முனிவன் – ஊனாலோ
மேனாட்டான்; உள்ளத் துணர்வால் தமிழனெனத்
தானாய் வணங்கும் தலை.

## குறிப்பெண் விளக்கங்கள்

1. தேம்பாவணி, புரோகிதப்படலம், பாடல், 105.
2. ,, வளன் சனித்த படலம், பாடல், 4.
3. தேம்பாவணி ஆராய்ச்சி, பக். 91–98.

# 25. சமுதாய நினைவினர்

சமயப் பணிக்கெனத் தம்மை ஆளாக்கிக் கொண்ட திருமறைத் தொண்டர்கள் சமுதாயப் பணியினையும் மறந்தாரல்லர். ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணுதலே திருமறையின் உட்கிடக்கை. "சின்னஞ் சிறிய என் சகோதரருள் ஒருவனுக்கு நீங்கள் இவற்றைச் செய்த போதெல்லாம் எனக்கே செய்தீர்கள்"[1] என்பது விவிலிய வாக்கு. அவ்வாக்கினைக் கைக்கொண்டு உழைப்பது உண்மைத் தொண்டர்களின் இயல்பு. அவ்வியல்பிற்கேற்ப வாழ்ந்த வீரமாமுனிவர் எங்கெல்லாம் மக்கள் துயருற்ற னரோ அங்கெல்லாம் அத்துயர் துடைக்க முற்பட்டார். எப்பொழுதெல்லாம் மக்கள் கலக்கமடைந்தார்களோ அப்பொழுதெல்லாம் அவற்றை நீக்கத் துடித்து எழுந்தார். அதற்கு ஒரு சான்று ஆவூர் மக்கட்காகப் பரிந்து பேசிய நிகழ்ச்சியாகும். ஆவூரையடுத்த கள்ளர் சிலர், முகமதியப் படைவீரர் தங்கியிருந்த பாளையத்துட் சென்று மாடுகளைக் கவர்ந்தனர். உண்மையறியாத வீரர்கள் ஆவூர் மக்களே அச்செயலைச் செய்ததாக முடிவிற்கு வந்து துன்புறுத்தத் தொடங்கினர். அடிகளார் தவறிழைத்தோர் அவரல்லர் என அவர்கட்காகப் பரிந்து பேச முன்வந்தார். அதனால் சினங் கொண்ட படைவீரர்கள் அவரை ஒரு கைதியை போலப் படைத்தலைவனிடம் இழுத்துச் சென்றனர். பின்னர் படைத்தலைவன் உண்மையுணர்ந்து அடிகளாரை விடுவித்துப் பரிசிலும் நல்கினான்.[2] இவ்வாறு சமுதாயப் பணியினையும் சமயப் பணியின் ஒரு பகுதியாகவே கருதித் தொண்டாற்றிய வீரமாமுனிவர் ஒரு சமுதாயச் சிந்தனை யாளராகவும் செயல்பட்டிருக்கிறார் என உணரலாம்.

## வாழ்த்துப்பா

மக்களின் தொண்டே மகேசனின் தொண்டென
அக்கரை கொண்டே அவர்கட்காய்த் - தக்க
உதவிகள் செய்தநல் உத்தமர் தாளை
நிதமும் பணிவோம் நினைந்து.

## குறிப்பெண் விளக்கங்கள்

1. மத்தேயு நற்செய்தி, 26; 40 - 41.
2. சதுரகராதி ஆராய்ச்சி, பக். 28.

# 26. திருமறை பரப்புநர்

ஆற்றிய பணிகள் அளவிறந்தனவெனினும் அடிப் படைப் பணியாகிய தம் சமயப் பணிக்கும் உரிய பங்கினை வீரமாமுனிவர் செலுத்தியுள்ளார். ஆழ்ந்து நோக்கின் மற்ற மறைப்பணியாளரை விஞ்சும் அளவுக்கு அவரது சமயப் பணியின் அளவு தெரிகிறது. அவரின் போதனையால் கத்தோலிக்கச் சமயம் சார்ந்தோரைக் கணக்கிடும்பொழுது ஆண்டொன்றுக்குச் சராசரி 214 பேர் வருகின்றனர்; திருநீராட்டுப் (Baptism) பெற்ற குழந்தைகள் மட்டும் ஆண்டொன்றுக்கு 721 எனக் கணக்கிடுகின்றனர்.[1]

திருமறைத் தொண்டில் அவருக்கிருந்த ஆர்வத்திற்கு அவரது கடிதக் குறிப்பு தக்க விளக்கமாக அமைகிறது. குருக்கள்பட்டியில் அவர் பணியாற்றும்பொழுது அப் பகுதிக்கு நாயக்கர் படை வந்தது. அப்படையிடம் வஞ்சகன் ஒருவன் அடிகளார் நிறையப் பணத்தைப் புதைத்து வைத்துள்ளார் எனக் கூறியதன் விளைவாக அவர் கைது செய்யப்படுகிறார். படைத்தலைவன் கேட்ட வினாக்கட்கு அடிகளார் கொடுத்த விடை அவனுக்குச் சினமூட்டியது. ஆதலின் விலங்குகளால் பிணித்தான்; மறுநாட் கொல்லவும் முடிவிட்டு விட்டான். செய்தி யறிந்த கிறித்தவர்கள் ஓடிவந்து விடுதலை வேண்டினர். வஞ்சகன் கூற்றுப் பொய்யென வெளிப்பட்டது. அடிகளார் விடுதலையானார். இந்நிகழ்ச்சியைக் குறிப்பிட்டு, உரோமையிலிருக்கும் தம் தலைவருக்கு வேதத்திற்காய் உயிர்விட இருந்த நல்வாய்ப்புத் தம் பவ வினையால் பாழாகி விட்டதே என்னும் ஏக்கம் தொனிக்க எழுதியுள்ளார்.[2] இதிலிருந்து புகழ்பெறத்தக்க பல்வகைப் பணிகளில் தாம் ஈடுபட்டாலும் தாம் மேற்கொண்ட தலைமைப் பணியை மறவாமல், அதற்காக உயிரையும் கொடுக்கும் உள்ளங் கொண்டவராய் வாழ்ந்த சிறப்புப் புலப்படுகிறது.

## வாழ்த்துப்பா

ஆயிர மாக அரும்பணி செய்யினும்
பாயிரம் தம்மறைப் போதனை - யாயிவர்
ஆற்றிய தொண்டும் அளவில வென்றேதான்
போற்றல் மறையோர் பொறுப்பு.

## குறிப்பெண் விளக்கங்கள்

1. சதுரகராதி ஆராய்ச்சி, பக். 27.
2. Besse, Fr. L. Fr. Beschi, His Times and His Writings, P. 43-44.

## செய்யுள் முதற் குறிப்பகராதி


| | | | |
|---|---|---|---|
| 1. | அருள்மழை | ... | 2 |
| 2. | அறிவியல் | ... | 39 |
| 3. | அன்னை | ... | 25 |
| 4. | ஆயிரமாக | ... | 72 |
| 5. | ஆய்வுநெறி | ... | 56 |
| 6. | இலக்கணவுரை | ... | 31 |
| 7. | இறைபுகழ்ப் | ... | 2 |
| 8. | இன்றமிழில் | ... | 57 |
| 9. | ஏளனவிலக்கியம் | ... | 46 |
| 10. | ஒப்பாய் | ... | 61 |
| 11. | கற்கத் | ... | 53 |
| 12. | குருத்துவம் | ... | 66 |
| 13. | குருமாமுனியின் | | 16 |
| 14. | குறள்மொழி | ... | 42 |
| 15. | சதுரகராதியைச் | ... | 37 |
| 16. | சீரியதென்னும் | ... | 44 |
| 17. | தலைமகள் | ... | 2 |
| 18. | தனித்தமிழ் | ... | 59 |
| 19. | தொன்னூல் விளக்கம் | ... | 28 |
| 20. | நாட்டார் | ... | 50 |
| 21. | படைப்புப் | ... | 11 |
| 22. | பாவியம் | ... | 62 |
| 23. | மக்களின் தொண்டே | ... | 70 |
| 24. | முத்தமிழில் | ... | 21 |
| 25. | முந்நூறு | ... | 5 |
| 26. | மேனாட்டு | ... | 68 |
| 27. | வடிவக் குழப்பம் | ... | 64 |
| 28. | வரலாற்று | ... | 48 |
| 29. | வேத விளக்கமாம் | ... | 34 |

# தொன்னூல் விளக்கப் புகழ்ச்சி மாலை

# நூன்முகம்

புகழ்ச்சி மாலை முப்பத்தெட்டு வெண்பாக்களை யுடையது. முதல் வெண்பா இப்பாமாலையைப் பாடியோர் சீரியர் பலர் எனச் செப்புகிறது. இறைவன் திருவடிகளைத் தலைமேற்சூடி அவற்றை ஓர் மாலையாய்த் தொகுக்கப் பட்டதாகக் குறிப்பிடுகிறது. மேல் தலைப்பாக, 'வீரமா முனிவர் மீதிலும் முன்னூற்றுளக்கிய தொன்னூல் விளக்க மீதிலும் புகழ்ச்சி மாலை' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கேற்ப அடுத்துவரும் முப்பத்தேழு பாக்களும் அவரையும் அவர்தம் படைப்புக்களையும் புகழ்ந்தேத்து கின்றன.

தலைப்பில் குறிப்பிட்டிருப்பதுபோன்று வீரமாமுனிவர் சிறப்புக்களை அவரது தொன்னூல் விளக்கத்தின்வழியாக மட்டும் விளக்குவதாகத் தோன்றவில்லை. சதுரகராதி தேம்பாவணி வழியாகவும்போற்றுவதாகக்காணப்படுகிறது. தொன்னூல் விளக்கம், சதுரகராதி, தேம்பாவணி ஆகிய மூன்றனையும் குறித்து முந்நூல் எனச் சில பாக்களில் சுட்டுவதும், (3, 4, 6), மூன்று என்னும் சிறப்புக்குரிய பொருட்கள் பலவும் அவற்றுள் பொதிந்திருப்பதாகக் காட்டு வதும் (7), அவர்தம் படைப்புக்களுள் இவை மூன்றனை யும் மிகவும் சிறந்தனவாகப் போற்றிக் கருதினர் என உணர்த்தும். எனினும் மாலையுள் அமைந்துள்ள பாக்களுள் பெரும்பாலன தொன்னூல் விளக்கப் புகழ் சாற்றுவனவே.

தமிழ்ப் புலவோருட் சிறந்தோர் திருவள்ளுவர், வீரமா முனிவர் தவிர வேறு யாருளர்? என வினவுவதும் (10), முப்பாலுக்கு இணையாக இவர்தம் முந்நூல்களையும் ஒப்பிடுவதும் (6) புலவோர் வீரமாமுனிவர் மீது கொண்டிருந்த மதிப்பினைப் புலப்படுத்தும்.

தொன்னூல் விளக்கத்திற்குத் 'தெருட்குரு' என்னும் சிறப்புப் பெயரொன்று உண்டு எனத் தொன்னூல் விளக்கச்

வீ. — 10

சிறப்புப் பாயிரப் பாடல் ஒன்று சுட்டும். அப்பெயருக்கான காரணம் ஒரு பாவில் சுட்டப்படுகிறது (15). 'தொன்னூல் விளக்கச் சுடர்' எனவும் சில பாடல்களில் பாராட்டப்படு கிறது (14, 16). தவமகனாக ஒரு பா உருவகிக்கத் தாரமாக இன்னொரு பா உருவகிக்கிறது (20). 'அறிவூற்று' என ஒரு செய்யுள் காட்டத் 'திறவுகோல்' என ஒரு செய்யுள் உருக் கொடுக்கிறது (21). இவ்வாறே இலக்கணக் கப்பலாகவும் இலக்கணச்சருக்கரை ஆலையாகவும் உருவகிக்கும் பாக்கள் உள (26, 27). இறுதியில் உள்ள மூன்று பாக்கள் நெய்யாக உருவகித்து அதன் பயனை விளக்குவதும், கனியாக உருவகித்து அதன் சுவையைக் காட்டுவதும், ஆரமாக உரு வகித்து அதன் அழகைக் சுட்டுவதுமாக உள்ளன. (35, 36, 37).

இரு பாடல்கள் (28, 29) தொன்னூல் விளக்கத்தில் அமைந்துள்ள நூற்பாக்களின் எண்ணிக்கை வரையறை யைத் தெரிவிக்கின்றன. பல் சமயம் சார்ந்த புலவோர் பாடி யிருப்பதாகத் தெரிகிறது. அவருள் கிறித்தவப் புலவோரும் உண்டு என்பதனை 'ஆதிநூல்', 'சத்திய வேதப் பொருள்' போன்ற தொடர்களாலும் அவை தரும் கருத்துக்களாலும் உணர முடிகிறது. (1, 19).

சுருங்கக் கூறின் பல்புலவோர், பல்வகை நோக்கில், பயன் கண்டு, பிறநாட்டுத் தமிழ்ப்புலவர் என்னும் பெரு மதிப்புக் கொண்டு நயம்பட உருவகித்து, பலபடப் புகழ்ந்து பாடிய பாக்களின் தொகுப்பே புகழ்ச்சிமாலை என்பது தெளிவு.

## 1. பாமாலை

ஆதியீ றில்லா தகண்டசுப ரூபகுண
வேதன்றாட் போற்றிசென்னி மேல்வைத்த-வாதரவால்
சீர்வீர மாமுனிமேற் சீரியர்கள் செப்பியபா
வோர்மாலை யாய்த்தொகுக்கு தும்.

ஆதிஈறு இல்லாத அகண்டசுப ரூபகுண
வேதன்தாள் போற்றிசென்னி மேல்வைத்த- ஆதரவால்
சீர்வீர மாமுனிமேல் சீரியர்கள் செப்பியபா
ஓர்மாலை யாய்த்தொகுக்கு தும்.

முதலும் முடிவும் அற்றவனும் விரிந்த நலனும் அழகும் குணமும் நிறைந்தவனும் வேதவடிவினனுமாகிய இறைவன் திருவடிகளைத் தலையால் தொழுது, அவனது துணையினைக் கொண்டு சிறப்புடைய வீரமாமுனிவர் மீது சிறந்தோர் பலர் பாடியுள்ள பாக்கள் அனைத்தையும் ஒரே மாலையாகத் தொகுக்கிறேன்.

## 2. அறநூல்

ஆதி நூலிற்கு மருள்வீர மாமுனிவ
ரோதுநூ லிற்கு[1] மொருபொருளே – யாதென்னில்
வேதநூ றன்னிலே மெய்யறத்தைச் சொல்லவிவ
ரோதுநூலு மஃதென் றுணர்.

ஆதிநூ லிற்கும் அருள்வீர மாமுனிவர்
ஓதுநூ லிற்கும் ஒருபொருளே – யாதுஎன்னில்
வேதநூல் தன்னிலே மெய்அறத்தைச் சொல்லஇவர்
ஓதுநூலும் அஃதுஎன்று உணர்.

ஆதிநூலாம் வேதநூலினுக்கும் அருள்நிறை வீரமா முனிவர் அருளிய நூலினுக்கும் அடிப்படைப் பொருள் ஒன்றே. அஃதாவது வேதநூலும் உண்மையறத்தையே கூறுகிறது. வீரமாமுனிவரது நூலும் அதனையே சுட்டுகிறது என உணர்க.

---

1. இங்குச் சுட்டப்படும் நூல் தேம்பாவணி எனக் கொள்க.

## 3. முந்நூல்

நன்மையின் வன்மையுந் தின்மையின் புன்மையுட்
டன்மையைப் பன்மையாய்ச் சாற்றினர் – மன்பதை
யுன்னி யுணர்ந்திட வீரமுனி முன்னூலும்[1]
பன்னிப் பகுக்கப் பயன்.

நன்மையின் வன்மையும் தின்மையின் புன்மையுள்
தன்மையைப் பன்மையாய்ச் சாற்றினர் – மன்பதை
உன்னி உணர்ந்திட வீரமுனி முந்நூலும்
பன்னிப் பகுக்கப் பயன்.

நல்லனவற்றில் தீமையையும், தீயனவற்றில் நல்ல தன்மையையும் கலந்து பலவாறாக முன்னோர் சொல்லி வைத்தனர். உலகோர் அவற்றை வேறுபடுத்தி உணர்ந்து பயன்கொள்ளுமாறு பாகுபாடு செய்து மூன்று நூல்களையும் வீரமாமுனிவர் படைத்தார்.

---

1. முந்நூல் என இருப்பதே பொருந்தும். மாலையின் பிற பாக்களும் மூன்று நூல்களையே சுட்டுகின்றன. அவை தேம்பாவணி, தொன்னூல் விளக்கம், சதுரகராதி ஆகியன.

## 4. அறிவு, ஒளி, வாக்கு

தொன்னூ லகராதி தேம்பா வணியென்று
முன்னூ லுங் கேளாச் செவிகட்கும் – பன்னாளும்
பாராத கண்கட்கும் பன்னாத நாவுக்கும்
வாரா தறிவொளிவு வாக்கு.

தொல்நூல்[1] அகராதி[2] தேம்பா வணிஎன்னும்
முந்நூலும்[3] கேளாச் செவிகட்கும் – பல்நாளும்
பாராத கண்கட்கும் பன்னாத நாவுக்கும்
வாராது அறிவுஒளி[4] வாக்கு.

தொன்னூல் விளக்கம், சதுரகராதி, தேம்பாவணி ஆகிய மூன்று நூற்கருத்துக்களையும் கேட்டறியாச்செவிகளுக்கும், பயனைப் பார்த்துணராத கண்களுக்கும், மனனம் செய்யாத நாவுக்கும், அறிவு, ஒளி, வாக்கு ஆகியன வாரா எனத் தெளிக.

(செவிகளுக்கு அறிவும், கண்களுக்கு ஒளியும், நாவுக்கு வாக்கும் கிட்டா என்பது பொருள்.)

---

1. தொன்னூல் விளக்கம்.
2. சதுரகராதி.
3. முந்நூல் என்பது எதுகை நோக்கி முன்னூல் என ஆளப் பட்டுள்ளது.
4. ஒளிவு என்பது ஏடெழுதியோர் பிழையாகலாம். ஒளி எனலே பொருந்தும். இலக்கண யாப்பு அமைதிக்கும் அஃது ஏற்புடையதே.

## 5. சிந்திப்பாய் நெஞ்சே

சீர்வீர மாமுனிவன் செப்பியமுன் னூற்களையு
மோர்மோ வுரைமொ வரைமோவிப் – பார்மீதில்
வந்திப்பாய் கைத்தலமே வாழ்த்துவாய் நாவகமே
சிந்திப்பாய் நெஞ்சே தினம்.

சீர்வீர மாமுனிவன் செப்பியமுன் நூல்களையும்[1]
ஓர்மோ உரைமோ[2] வரைமோஇப் – பார்மீதில்
வந்திப்பாய் கைத்தலமே வாழ்த்துவாய் நாவகமே
சிந்திப்பாய் நெஞ்சே தினம்.

"சீருடைய வீரமாமுனிவன் சொல்லியருளிய தொன்னூல் விளக்கம், சதுரகராதி, தேம்பாவணி ஆகிய மூன்று நூல்களையும் ஓர்ந்துணர்க; உரைத்துச் சிறந்திடுக. வரைந்தெழுதிப் பெருமை கொள்க. உலகினில், அவற்றை, கையே! நீ வணங்கிடுவாய்; நாவே! நீ வாழ்த்திடுவாய்; நெஞ்சே! நாள்தோறும் நீ சிந்தித்துத் தெளிந்திடுவாய்".

(கை, நா, வாய் ஆகிய மூன்றின் தொழில்களும் வீரமா முனிவரின் மூன்று நூல்களைப் போற்றுவதால் சிறக்கும் என்பது பெறப்படுகிறது.)

---

1. முந்நூல்களையும் என்பதே பொருந்தும். ஏடெழுதியோர் 'முன்னூல்'என எல்லாப் பாடல்களிலும்தவறாகப் பெயர்த்து எழுதியிருத்தல் கூடும்.
2. உரைமோ என இருத்தலே பொருந்தும்.

## 6. புண்ணிய நூல்

சிந்தை மகிழுஞ் செவிகுளிரும் வாய்வாழ்த்துந்
தொந்தக் கரங்க டொழுகுங்கம் – வந்தணையும்
பண்ணுமுடல் புளகமாம் வீரமா முனிநற்
புண்ணியநூல் வாசிக்கும் போது.

சிந்தை மகிழும் செவிகுளிரும் வாய்வாழ்த்தும்
தொந்தம்[1] கரங்கள் தொழுகும்கம்[2] – வந்தனையும்[3]
பண்ணும்உடல் புளகமாம் வீரமா முனிநல்
புண்ணியநூல்[4] வாசிக்கும் போதும்.

வீரமாமுனிவர் புண்ணியத்தால் நாம் பெற்றுள்ள புண்ணியநூலினைப்படிக்கும்பொழுதில் சிந்தைமகிழ்வுறும்; செவி குளிர்ச்சியுறும்; வாய் வாழ்த்திடும்; இரு கரங்களும் தொழுதிடும்; தலை வணங்கிடும்; உடல் சிலிர்த்திடும் என அறிக.

---

1. இரண்டு என்னும் பொருளில் ஆளப்பட்டுள்ளது.
2. தலை என்னும் பொருளில் ஆளப்பட்டுள்ளது.
3. வந்தனை எனலே தகும். ஏடு பெயர்த்தெழுதியோரால் தவறாக 'வந்தணை' என ஆளப்பட்டுள்ளது.
4. தொன்னூல் விளக்கத்தை குறிக்கும்.

## 7. முப்பால்

தருமப்பா றேம்பா வணியாகச் சாற்றிப்
பொருளக ராதியாய்ப் பூட்டி – அருளின்பந்
தொன்னூல் விளக்கமாய்ச் சொற்றனர் முப்பாலு
முன்னூ லாய் வீர முனி.

தருமம்[1]பால் தேம்பா வணிஆகச் சாற்றிப்
பொருள்[2] அக ராதிஆய்ப் பூட்டி – அருள்இன்பம்
தொன்னூல் விளக்கம்ஆய்ச் சொற்றனர் முப்பாலும்[3]
முன்னூல்ஆய்[4] வீர முனி.

வீரமாமுனிவர் திருக்குறளின் முப்பால் இன்பத்திற்கு இணையாவனபோன்று தேம்பாவணியை அறத்துப்பாலாக வும், சதுரகராதியைப் பொருட்பாலாகவும், தொன்னூல் விளக்கத்தைக் காமத்துப் பாலாகவும் விளக்கமாகக் கூறியருளியுள்ளார் எனக் கொள்க.

---

1. அறத்துப்பால்
2. பொருட்பால்
3. காமத்துப்பால்
4. முந்நூல் என்பது எதுகை நோக்கி முன்நூல் என ஆளப் பட்டுள்ளது.

## 8. முற்றும் உள

முத்தலமு முப்பதமு முச்சுடரு முக்கனலு
முத்தொழிலு முத்திறமு முப்பரங்கோ — டத்துவமு
முன்னூலு மும்மொழியு முத்தமிழும் வீரமுனி
முன்னூலின் முற்று முள.

முத்தலமும்[1] முப்பதமும்[2] முச்சுடரும்[3] முக்கனலும்[4]
முத்தொழிலும்[5] முத்திறமும்[6] முப்பரம்[7] கோள்–தத்துவமும்
முன்னூலும்[8] மும்மொழியும்[9] முத்தமிழும் வீரமுனி
முன்னூலில் முற்றும் உள.

மூன்று தலங்களின் பெருமை, மூன்று பதங்களின் உயர்வு, மூன்று சுடர்களின் ஒளி, மூன்று கனல்களின் ஆற்றல், மூன்று தொழில்களின் அருள், மூன்று திறங்களின் இயல்பு, மூன்று கடவுளரையும் அடையக்கூடிய தத்துவம், மூன்று நூல்களால் பெறக்கூடிய பயன், மூன்று மொழி களால் கிட்டக்கூடிய சிறப்பு, முத்தமிழ் இன்பம் ஆகிய அனைத்தும் வீரமாமுனிவரின் தொன்னூல் விளக்கம், சதுரகராதி, தேம்பாவணி ஆகிய மூன்று நூல்களில் அமைந் துள்ளன என உணர்க.

---

1. முத்தலம் — பூமி, அந்தரம், சுவர்க்கம்.
2. முப்பதம் — இம்மை, மறுமை, உம்மை.
3. முச்சுடர் — சந்திரன், சூரியன், அக்கினி.
4. முக்கனல் — உயிருள்ள தீ, உதரத்துள்ள தீ, சினத்திலெழுந்த தீ.
5. முத்தொழில் — ஆக்கல், காத்தல், அழித்தல்.
6. முத்திறம் — சாத்துவிகம், இராசதம், தாமதம்.
7. முப்பரம் — பிரமன், திருமால், சிவன்.
8. முன்னூல் — முதல் நூல், வழிநூல், சார்பு நூல்.
9. மும்மொழி — மெய்கூறல், புகழ் கூறல், பழிகூறல்.

## 9. எங்கும் இலர்

ஆரியத்திற் சொன்ன வருண்மறையி னுட்பயனைப்
பாரிற் றமிழ்ப்பாவாய்ப் பாடிவைத்த — வீரமுனி
யைப்போல் உள்ளியதெல் லாம்பாட வல்லவர்க
ளிப்பாரி லெங்கு மில.

ஆரியத்தில்[1] சொன்ன அருள்மறையின் உள்பயனைப்
பாரில் தமிழ்ப்பாவாய்ப் பாடிவைத்த — வீரமுனி
யைப்போல உள்ளியதுஎல் லாம்பாட வல்லவர்கள்
இப்பாரில் எங்கும் இலர்.[2]

ஐரோப்பிய மொழியில் சொல்லியுள்ள திருமறைப் பயன்களையெல்லாம் தமிழ்ப் பாக்களினால் பாடி வைத்த வீரமாமுனிவரைப் போன்று, தாம் எண்ணியதையெல்லாம் எண்ணியவாறே பாடி முடிக்கும் ஆற்றல் பெற்றவர் உலகெங்கணும் எவருமிலர் எனத் தெளிக.

---

1. ஐரோப்பிய மொழி எனக் கொள்ளல் வேண்டும். வட நூலோர் என ஐரோப்பிய மொழிநூலாரை (பாயிரம், பாடல் 3) வீரமாமுனிவர் சுட்டுவர்.
2. 'இல' என்பது ஏடுபெயர்த்தெழுதியோர் பிழையாகலாம். இலர் என்பதே பொருந்தும்.

## 10. நல்தாட்டியனார்

கையறலை நீக்கிப் பொய்யறமு நூக்கி
மெய்யறமு முண்டாக்கி வீட்டின்ப — மையமறக்
காட்டிமரு ளோட்டிநிறை நாட்டிமறை தீட்டியநற்
றாட்டியனார் வீரமுனி தான்.

கையறலை நீக்கி பொய்அறமும் நூக்கி
மெய்அறமும் உண்டாக்கி வீடுஇன்பம் — ஐயம்அறக்
காட்டிமருள் ஓட்டிநிறை நாட்டிமறை தீட்டியநல்
தாட்டியனார் வீரமுனி தான்.

தீயொழுக்கத்தை நீக்கவும், பொய்யறம் அழிய மெய்யறம் உண்டாக்கவும், பேரின்பத்தை ஐயம் நீங்கக் காட்டவும், மாயையை ஓட்டி நிறைபொருளை நிலைநாட்டவும், தம் மறையைப் படைப்புக்களில் ஆக்கிக் காட்டிய வித்தகர் வீரமாமுனிவரே என உணர்க.

## 11. ஈரையர்

உன்னுத லுன்னினவை யோதுத லோதினவை
யன்னபடி யேவரைய வாரறிஞ — ரின்னபடி
செய்யத் திருவள்ளு வர்வீர மாமுனியீ
ரையரல் லால்வே றிலை.

உன்னுதல் உன்னினவை ஓதுதல் ஓதினவை
அன்னபடி யேவரைய ஆர்அறிஞர்? — இன்னபடி
செய்யத் திருவள்ளு வர்வீர மாமுனிஈர்
ஐயர்அல் லால்வேறு இலை.

எண்ணியதை எண்ணியவாறும் கூற வேண்டியன வற்றைக் கூறும் முறையிலும் சிறப்பாக எழுதியிருக்கும் அறிஞர் பெருமக்கள், திருவள்ளுவர், வீரமாமுனிவர் ஆகிய இருவரைத் தவிர வேறு எவரும் இலர் என அறிக.

## 12. ஒப்பார் யார்?

கற்றோர் குருவீர மாமுனிவ ரொப்பல்லான்
மற்றோரைக் கற்றோராய் வாழ்த்துத — லெற்றோடு?
நேரென்றாற் சூரியனை மாவென்று மஞ்சனத்தின்
பேருமா வென்றழைத்தல் போல்.

கற்றோர் குருவீர மாமுனிவர் ஒப்புஅல்லார்[1]
மற்றோரைக் கற்றோர்ஆய் வாழ்த்துதல் — எற்றோடு?
நேர்என்றால் சூரியனை மாவென்றும் அஞ்சனத்தின்
பேரும்மா என்றுஅழைத்தல் போல்.

கற்றறிந்தோர் எவரும் குருவாகிய வீரமாமுனிவருக்கு நிகராகார். மற்றெவரையேனும் கற்றோராய்க் கருதி வாழ்த்தின், அவ்வாழ்த்து, 'மா' என்னும் சொல் கதிரவனையும் அஞ்சனத்தையும் குறிப்பதால் இரண்டும் நிகரெனக் கருது வதை ஒக்கும் என அறிக.

(மா என்னும் சொல் கதிரவன், அஞ்சனம் இரண்டனை யும் குறிப்பதால் இரண்டும் இணையாகிவிடா. அதே போன்று கற்றோர் என வீரமாமுனிவரையும் பிறரை யும் கூறிவிடுவதால் அவரோடு பிறர் இணையாகார் என்பது கருத்து.)

---

1 ஒப்பல்லார் என்பதே வினை முடிபுக்கு ஒக்கும் ஒப்பல்லான் என்பது ஏடுபெயர்த்தெழுதியோர் பிழையாகலாம்.

## 13. வல்லார் யார்?

பேரகத்தி யஞ்சிற்ற கத்தியந்தொல் காப்பியம்பின்
னோரடுக்காய்த் தான்சுருக்கி யோதவே — வீரமுனி
யல்லான்முன் னூற்றுக்கு[1] ளாய்ந்துசூத்தி ரஞ்சொல்ல
வல்லார்யார் மாகுருவல் லால்.

பேரகத்தி யம்சிற்ற கத்தியம்தொல் காப்பியம்பின்
னோர்அடுக்காய்த் தான்சுருக்கி ஓதவே — வீரமுனி
யல்லால்முந் நூற்றுக்குள்[1] ஆய்ந்துசூத்தி ரம்சொல்ல
வல்லார்யார் மாகுருஅல் லால்

பேரகத்தியம், சிற்றகத்தியம், தொல்காப்பியம் ஆகிய வற்றின் கருத்துக்கள் அனைத்தையும் சுருக்கி முந்நூறு நூற்பாக்களுக்குள் சொல்ல வல்லவர், மாகுருவாகிய வீரமா முனிவரைத் தவிர வேறு எவரால் முடியும்?

(சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் ஆற்றல் பெற்ற வர் என்பது கருத்து).

---

1. வீரமாமுனிவரின் தொன்னூல் விளக்கம் 370 நூற்பாக் களைக் கொண்டதெனினும் நூற்றுக்கணக்கில் கொள்ளும் பொழுது, நானூற்றினும் குறைவு என்னும் கருத்தில் முந்நூற்றுக்குள் என ஆளப்பட்டுள்ளது போதும்.

## 14. குறைவிலா நூல்

நிறைகலைச வேதமாய்[1] நோக்கக் களங்கின்
மறைவி றுலவின் மகிழ்ச்சிக் — குறைவிலவா
யெண்ணார் குருவீ ரமுனிநூற் பான்மைத்தே
தண்ணார் மதியத்து டான்.

நிறைகலைசு வேதம்ஆய் நோக்கக் களங்கின்
மறைவி றுஉலவின் மகிழ்ச்சிக் — குறைவுஇலவாய்
எண்ணார் குருவீ ரமுனிநூல் பான்மைத்தே
தண்ஆர் மதியத்துள் தான்.

தூய வெண்மையைக் காண எண்ணி முழுமதியை நோக்கினால் அதன் மறுவாகிய களங்கம் நம் மகிழ்ச்சியைக் குறைக்கும் வாய்ப்புண்டு. ஒப்புநோக்கின் எத்தகைய சிறு குறையும் இன்றி குருவாகிய வீரமாமுனி தந்தருளிய நூல் அமைந்துள்ளது.

(மதியினும் உயர்ந்தது என்பது கருத்து.)

---

1. சுவேதம் – வெண்மை; 'சவேதமாய்' என இருப்பது ஏடெழுதியோர் பிழையாகலாம்.

## 15. தொன்னூல் விளக்கச் சுடர்

வெள்ளி[1]பொன்னுஞ்[2] சந்திரனும் வெஞ்சுடர்தீ
பஞ்சிதமும்[3]
பொள்ளெனவே நீக்கும் புறவிருளை — யுள்ளிருளும்
பன்னூ லிருளும் பழுதற வேநீக்கும்
தொன்னூல் விளக்கச் சுடர்.

வெள்ளிபொன்னும் சந்திரன் வெம்சுடர்தீ பஞ்சிதமும்
பொள்ளெனவே நீக்கும் புறஇருளை — உள்இருளும்
பல்நூல் இருளும் பழுதுஅற வேநீக்கும்
தொன்னூல் விளக்கச் சுடர்

சுக்கிரன், வியாழன், நிலவு, கதிரவன், விண்மீன் ஆகிய சுடர்கள் உலகத்தில் பரவியுள்ள புறவிருளை விரைவாக நீக்கும். அவற்றைப் போல உள்ளத்தில் உள்ள அகவிருளையும், பற்பல நூல்களில் காணக்கிடக்கின்ற அறியாமையாகிய பொருட்புலப்படா இருளையும் தொன்னூல் விளக்கமாகிய சுடர் குற்றமறப் போக்கும் தன்மையது.

---

1. சுக்கிரன்
2. வியாழன்
3. விண்மீன்

## 16. தெருட்குரு

இருட்கலை யுள்ள மருட்களை நீக்கிப்
பொருட்களை விண்டு புகலுந் — தெருட்குரு[1]
வென்னும் பெயர்பெற் றிலங்குதொன் னூல்விளக்கம்
பன்னும் பலகாலும் பார்.

இருள்கலை உள்ள மருள்களை நீக்கிப்
பொருள்களை விண்டு புகலும் — தெருள்குரு
என்னும் பெயர்பெற் றுஇலங்குதொன் னூல் விளக்கம்
பன்னும் பலகாலும் பார்.

'தெருட்குரு' என்னும் சிறப்புப் பெயர் பெற்று விளங்கும் தொன்னூல் விளக்கம், பொருள் புலப்படாமல் இருள் மூடியுள்ள நூற்பொருள்களை, அவற்றின் குறைபாடுகளை அறவே அகற்றித் தெளிவுபடப் பொருள்களை உணரச் செய்யும் தன்மையினைப் பல்வகைகளிலும் ஆய்ந்துணர்க.

---

1. அறிவுத் தெளிவு தரும் குரு.

## 17. பொருள் தீபம்

அகலெழுத்துச் சொற்றிரி யாயணிவெண் ணெய்யாய்ச்
சிகி'பொருட்டீ பம்யாப் பிரோமை' — நகர்முனிவர்
பன்னூ லிருளகற்றப் பார்மீதி லேற்றியதே
தொன்னூல் விளக்கச் சுடர்.

அகல்எழுத்துச் சொல்திரி யாய்அணிவெண்
ணெய்யாய்ச்
சிகிபொருள்தீ பம்யாப் புஇரோமை — நகர்முனிவர்
பல்நூல் இருள்அகற்றப் பார்மீதில் ஏற்றியதே
தொன்னூல் விளக்கச் சுடர்.

உரோமை நகர் முனிவராகிய வீரமாமுனிவர் பற்பல நூற்பொருள்களின் பொருள் அறிய இயலாதவாறு மூடிக் கிடந்த இருளைப் போக்குவதற்காக இவ்வுலகில் ஏற்றி வைத்ததே தொன்னூல் விளக்கச் சுடர் விளக்காம். அச்சுடர் தரும் அகல் விளக்கு எழுத்திலக்கணம்; அவ் விளக்கில் உள்ள திரி சொல்லிலக்கணம்; எரிகின்ற தீ பொருளிலக்கணம்; தீ தரும் ஒளி யாப்பிலக்கணம்; அதன் கண் ஊற்றப்படுகின்ற நெய் அணியிலக்கணம் என அறிக.

---

1. வீரமாமுனிவர் இத்தாலியராயினும் உரோமன் கத்தோலிக்கச் சமயஞ் சார்ந்தவர். வெளிநாட்டிலிருந்து வந்து பணியாற்றிய குருக்களைப் பொதுப்பட உரோமையிலிருந்து வந்தவராகக் குறிக்கும் வழக்கினையொட்டி உரோமை நகர் முனிவர் எனச் சுட்டப்படுகிறார்.

## 18. கதிரவனே நேர்

மக்க ளிதைய கமல மலரவித்துப்
புக்கு மகத்திருளைப் போக்குதலான் — மிக்கொளிசெய்
சூரியனுந் தொன்னூல் விளக்கமுநே ரொக்குமெனக்
காரியத்தி னாலறிந்து காண்.

மக்கள் இதைய கமல மலர்அவித்துப்
புக்கும் அகத்துஇருளைப் போக்குதலால் —
மிக்குஒளிசெய்
சூரியனும் தொன்னூல் விளக்கமும்நேர் ஒக்கும்எனக்
காரியத்தி னால்அறிந்து காண்.

மிகுந்த ஒளிபெற்று விளங்கும் கதிரவன் குவிந்திருக்கும் தாமரை மொட்டை மலரச் செய்வது போல மக்களின் உள்ளத் தாமரையை மூடியுள்ள அறியாமை என்னும் இருளைப் போக்கி அறிவினை மலர்ந்து ஒளிரச் செய்வதால் கதிரவனும் தொன்னூல் விளக்கமும் நிகரெனக் கொள்க.

---

1. அகரத்திற்கு ஐகாரம் போலியாக அமைந்து இதயம் என்பது இதையம் என ஆளப்பட்டுள்ளது.

## 19. ஐந்திலக்கணப் பயன்

ஒருகடவுண் மெய்யென் றுணர்ந்தே முலகி
லிருவினை யின்பயனுங் கண்டேந் — திரிதமிழுந்
தேர்ந்தேம் பொருணாற் றிறமுணர்ந்தேம் வீரமுனி
கூர்ந்தவைந்தி லக்கணத்தைக் கொண்டு.

ஒருகடவுள் மெய்என்று உணர்ந்தேம் உலகில்
இருவிளை யின்பயனும் கண்டேம் — திரிதமிழும்
தேர்ந்தேம் பொருள்நால் திறமும்உணர்ந்தேம் வீரமுனி
கூர்ந்தஐந்து இலக்கணத்தைக் கொண்டு.

வீரமாமுனிவர் அருளிய கூர்மையான ஐந்திலக்கண நூலாகிய தொன்னூல் விளக்கத்தின் உதவியால் ஒருவனே இறைவன் என்னும் உண்மையையும், நல்வினை, தீவினை என்னும் இருவினையின் பயன்களையும், இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழின் இயல்புகளையும், அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பொருள்களின் தன்மைகளையும் உணர்ந்தோம் என அறிக.

## 20. சத்திய வேதப் பொருள்

முன்னூலின் முத்திநெறி யின்மையென வீரமுனி
பன்னூலு மாய்ந்தே பழுதில்லால் — தொன்னூல்
விளக்கமதிற் சத்திய வேதத்தின் பொருளைத்
துளக்கமாய்ச் சொற்றவவை சூழ்.

முன்நூலில் முத்திநெறி இன்மைஎன வீரமுனி
பல்நூலும் ஆய்ந்தே பழுதுஇல்லாத் — தொன்னூல்
விளக்கம் அதில் சத்திய வேதத்தின் பொருளைத்
துளக்கம்ஆய்ச் சொற்றஅவை சூழ்.

முன்னோரின் நூல்களில் வீடுபேறு காண முடியாது என எண்ணிய வீரமாமுனிவர் பல்வகை நூல்களையும் ஆராய்ந்து, எக்குறையும் இல்லாத மெய்த்திருமறைப் பொருளைத் தொன்னூல் விளக்கம் என்னும் தம் நூலில் தெளிவாகச் சொல்லியுள்ளார். அவற்றை மேற்கொண்டு ஒழுகுக.

## 21. தவமகன்

நாற்குண நாலுரையாய்ப் பெற்ற விலக்கியப்பெண்
ணாற்குணனாற் பாவானி[1] லக்கணனு — மேற்கலந்து
பன்னாட் டவம்புரிந்து பார்மீதிற் பெற்றெடுத்தார்
தொன்னூல் விளக்கச் சுதன்.

நால்குணம் நால்உரைஆய்ப் பெற்ற இலக்கியப்பெண்
நால்குணன்நால் பாவான்இ லக்கணனும் —
மேல்கலந்து
பல்நாள் தவம்புரிந்து பார்மீதில் பெற்றுஎடுத்தார்
தொன்னூல் விளக்கச் சுதன்.

அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் பெண்மைக்குரிய நால்வகைக் குணங்களையும் கருத்துரை, பதவுரை, பொழிப்புரை, அகலவுரை என்னும் நால்வகை உரைகளாகக் கொண்டுள்ள இலக்கியம் என்னும் பெண், அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடி என்னும் ஆண்மைக்குரிய நால்வகைக் குணங்களையும் ஆசிரியப்பா, வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்னும் நால்வகைப் பாக்களாகக் கொண்டுள்ள இலக்கணம் என்னும் ஆணுடன் கூடிப் பல நாள் தவம் செய்து உலகில் பெற்றெடுத்த மகனாகத் தொன்னூல் விளக்கத்தைக் கொள்க.

---

1. பாவானனணி என மூலத்தில் உள்ளது. அது ஏடு பெயர்த்தெழுதியோர் பிழையாகலாம். பாவானி என அமைந்திருத்தலே பாவான்+இலக்கணன் எனப் பிரித்துப் பொருள் கொள்ள இயலும்; யாப்புக்கும் பொருந்தும்.

## 22. அறிவூற்று

இறைக்கச் சுரக்குநீ ரேரிகுளம் பாலைக்
கறக்கச் சுரக்குங் கபிலை — சிறுசேய்
குடிக்கச் சுரக்குந்தாய்க் கொங்கையிற் 'பீர்'[1]தொன்னூற்
படிக்க வறிவூறும் பார்.

இறைக்கச் சுரக்கும்நீ ர்ஏரிகுளம் பாலைக்
கறக்கச் சுரக்கும் கபிலை — சிறுசேய்
குடிக்கச் சுரக்கும்தாய்க் கொங்கையில் சீர்தொன்னூல்
படிக்க அறிவூறும் பார்.

நீர், ஏரி, குளம் ஆகியன இறைக்க இறைக்க நீரைச் சுரக்கும்; பசு, கறக்கக் கறக்கப் பாலைச் சுரக்கும். தாயின் கொங்கை, சிறு குழந்தை குடிக்கக் குடிக்கச் சுரக்கும்; தொன்னூல் விளக்கம் படிக்கப் படிக்க அறிவு ஊறுவதைக் காண்பாயாக.

---

1. சீர் என்பதே பொருந்தும். பீர் என்பது ஏடு பெயர்த்தெழுதி யோர் பிழையாகலாம்.

## 23. கற்றோர் மனைவி

முகமெழுத்துக் கண்சொன் முலையணி யாப்புப்
புகல்[1]சே தன[2]னே பொருணூற் — றகைபெற்ற
காரிகைதொன் னூல்விளக்கங் கற்றோர்க்குத் தாரமாய்
வீரமுனி தந்தார் விதித்து.

முகம்எழுத்துக் கண்சொல் முலைஅணி யாப்புப்
புகல்சே தனனே பொருள்நூல் — தகைபெற்ற
காரிகைதொன் னூல்விளக்கம் கற்றோர்க்குத் தாரமாய்
வீரமுனி தந்தார் விதித்து.

கற்றறிந்த ஆடவர்க்குரிய மனைவியாக வீரமாமுனிவர் தந்துள்ள தகைமைசான்ற தொன்னூல் விளக்கம் என்னும் பெண்ணின் முகமே எழுத்திலக்கணம்; கண்ணே சொல்லிலக்கணம்; முலையே அணியிலக்கணம்; உடலே யாப்பிலக்கணம்; உயிரே பொருள் இலக்கணம் என உணர்க.

---

1. உடல்
2. உயிர்

## 24. திறவுகோல்

முன்னோர்கள் செந்தமிழை மூட விளை[1] ந்தமிழாற்
றொன்னூல் விளக்கத்தைச் சொற்றினதாற் — பன்னூ
லிலக்கணவீ கங்[2]கட்கீ துதிறக்குங் கோலாற்
கலக்கமற் றி[3]தைநன்றாய்க் கல்.

முன்னோர்கள் செந்தமிழை மூட இளந்தமிழால்
தொன்னூல் விளக்கத்தைச் சொற்றினதால் — பன்னூல்
இலக்கணவீ கங்கட்கு ஈதுதிறக்கும் கோலால்
கலக்கம்அற்று இதைநன்றாய்க் கல்.

செந்தமிழ் இலக்கணப் பொருளை மற்றவர் அறிய இயலாதவாறு அருஞ்சொற்களால் கூறிப் பல்வகை இலக்கணப் பூட்டுக்களால் முன்னோர் மூடிவைத்தனர். எளிய தமிழால் தொன்னூல் விளக்கத்தைக் கூறியமையால் அப்பூட்டுக்களைத் திறக்கும் திறவுகோலாய் அஃது அமைந்தது. எனவே தெளிவுற அதனைக் கற்பாயாக.

---

1. இளந்தமிழ் — அகரத்திற்குஐகாரம் போலியாய் 'இளைந் தமிழ்' என அமைந்துள்ளது.
2. பூட்டு
3. 'கலக்கமற விதை' என மூலத்தில் உள்ளது. கலக்கமற் றிதை என்பதே யாப்புக்குப் பொருந்தும். 'கலக்கமற விதை' என்பது ஏடு பெயர்த்தெழுதியோர் பிழையாகலாம்.

## 25. இன்பம்

கற்றற் கெளிதாகக் கல்லார்க் கிலக்கணத்தைச்
சொற்றற் கெளிதாகத் தொன்னூலிற் — பற்றுதலாற்
சொன்னவற்றைக் கேட்கச் செவிக்கின்பந்
தூயபொருட்
பன்னமனம் வாய்க்குமின்பம் பார்.

கற்றற்கு எளிதுஆகக் கல்லார்க்கு இலக்கணத்தைச்
சொற்றற்கு எளிதுஆகத் தொன்னூ லில் —
பற்றுதலால்
சொன்னவற்றைக் கேட்கச் செவிக்குஇன்பம்
தூயபொருள்
பன்னமனம் வாய்க்கும்இன்பம் பார்.

கற்பதற்கும் எளிமையாகவும், கல்லாதவருக்கு எடுத்துச் சொல்வதற்கும் எளிமையாகவும் தொன்னூல் விளக்கம் அமைந்துள்ளது. எனவே பிறிதொருவர் அதன் பொருளை எடுத்துச் சொல்லக் கேட்கும்பொழுது செவிக்கும் இன்பம் தரும்; அதன் பொருளை உணர மனத்திற்கும், மனனம் செய்யும் வாய்க்கும் இன்பம் பயப்பதைக் காண்க.

## 26. கற்க எளிதாம்

ஏரெழுத்துச் சொற்பொருள் யாப்பணி யிவ்வைந்து
ளோரிழுக்கு மின்றியே வுள்ளபடி — வீரமுனி
கல்லாரெல் லாமெளிதாக் கற்கத்தொன் னூல்விளக்கத்
தெல்லா மியம்பிவைத்தா ரெண்.

ஏர்எழுத்துச் சொல்பொருள் யாப்புஅணி இவ்ஐந்துள்
ஓர்இழுக்கும் இன்றியே உள்ளபடி — வீரமுனி
கல்லார்எல் லாம்எளிதுஆக் கற்கத்தொன்
நூல்விளக்கத்து
எல்லாம் இயம்பிவைத்தார் எண்.

கல்லாதவர்கூட எளிதாகக் கற்றுக்கொள்ளும் வகையில், தம் தொன்னூல் விளக்கத்தில் அழகுநிறை எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்திலக்கணப் பிரிவுகளையும் யாதொரு குறையும் நேராதவாறு வீரமா முனிவர் சொல்லி வைத்துள்ளார் என அறிக.

## 27. இலக்கண ஆலை

எழுத்தாலை சொற்பகடி[1] யாப்பு வடம்பூட்டி
கழைபொருட் டாழியணி காய்ச்சிக் — குழம்புகற்
கண்டு சருக்கரைப்பா வாக்கித்தொன் னூல்விளக்கம்
விண்டளித்தார் வீரமுனி விள்.

எழுத்துஆலை சொல்பகடு யாப்பு வடம்பூட்டி
கழைபொருள் தாழிஅணி காய்ச்சிக் — குழம்புகல்
கண்டு சருக்கரைப்பா ஆக்கித்தொன் னூல்விளக்கம்
விண்டுஅளித்தார் வீரமுனி விள்.

வீரமாமுனிவர் 'தொன்னூல் விளக்கம்' என்னும் நூலைக் கற்கண்டு, சருக்கரைப் பாகு போல ஆக்கித் தந்துள்ளார். அவை ஆக்கப்பட்ட ஆலையே எழுத்து; கரும்பைப் பிழிய ஆலையை இயக்கப் பயன்பட்ட எருதே சொல்; ஆலையில் இடப்பட்ட கரும்பே பொருள்; எருதினை இயக்கப் பூட்டப்பட்ட கயிறே யாப்பு. கரும்பினின்று பிழியப்பட்ட சாற்றினைக் காய்ச்சப் பயன்படுத்திய தாழியே அணி எனக் கூறுக.

---

1. 'பகடு' என்பது அடுத்து வருமொழி முதலாக யகரம் வந்த மையின் இகரம் பெற்றுப் பகடி என வந்துள்ளது.

## 28. இலக்கணக் கப்பல்

மரமெழுத்துச் சொற்கால் வடம்யாப் பணியாய்ப்[1]
பொருள்சுக்கா னாகப் புரிந்து — பெருநீ
ரிலக்கணத்திற் றொன்னூ லெனுங்கப்ப லோட்டி
நிலைக்கவைத்தார் வீர முனி.

மரம்எழுத்துச் சொல்கால் வடம்யாப்பு அணிபாய்
பொருள்சுக்கான் ஆகப் புரிந்து — பெருநீர்
இலக்கணத்தில் தொன்னூல் எனும்கப்பல் ஓட்டி
நிலைக்கவைத்தார் வீர முனி.

வீரமாமுனிவர் இலக்கணக் கடலில் 'தொன்னூல் விளக்கம்' என்னும் கப்பலைச் செலுத்தி நிலைக்க வைத்தார். அக்கப்பலுக்கு எழுத்தே மரம்; சொல்லே அதனைச் செலுத்தும் காற்று; பொருளே திசை திருப்பப் பயன்படும் சுக்கான்; யாப்பே பாயைக் கட்டப் பயன்படும் கயிறு; அணியே காற்றால் தள்ளப்படும் பாய் எனக் கொள்க.

---

1. 'அணிபாய்' என்பதே ஏடு பெயர்த்தெழுதியோரால் 'அணியாய்' என எழுதப்பட்டுள்ளது.

## 29. எழுத்தியல்

தோற்ற மொருநான்கு சொல்வகுப்புக் கீரெட்டுச்
சாற்றும் விகார மிருபஃது — தேற்றமாய்ச்
சொற்றனர் சூத்திர நாற்பா னெழுத்தியற்குக்
கற்றகுரு வீரமுனி காண்.

தோற்றம் ஒருநான்கு சொல்வகுப்புக்கு ஈர்எட்டுச்
சாற்றும் விகாரம் இருபஃது — தேற்றம்ஆய்ச்
சொற்றனர் சூத்திரம் நாற்பான் எழுத்துஇயற்குக்
கற்றகுரு வீரமுனி காண்.

தொன்னூல் விளக்கத்தின் எழுத்தியற் பிரிவுகளில் தோற்றம் பற்றி நான்கு நூற்பாக்களும், சொல்வகுப்புப் பற்றிப் பதினாறு நூற்பாக்களும், விகாரம் பற்றி இருபது நூற்பாக்களுமாக நாற்பது நூற்பாக்களைக் கற்றறிந்த வீரமா முனிவர் தெளிந்து கூறியுள்ளதைக் காண்க.

## 30. நூற்பாத்தொகை

நூற்பாவாற் சொல்லுமொரு நூற்றிரண் டேயெழுத்து
நாற்பான் பொருளைம்பா னாலிரண்டே — யாப்புசதஞ்
சொன்னா ரணியெழுபான் சூத்திரமுந் நூற்றெழுபான்
றொன்னூல் விளக்கத் தொகை.

நூல்பாவால் சொல்லும்ஒரு நூற்றுஇரண் டேஎழுத்து
நால்பான் பொருள்ஐம்பான் நால்இரண்டே —
யாப்புசதம்
சொன்னார் அணிஎழுபான் சூத்திரமுந் நூற்றுஎழுபான்
தொன்னூல் விளக்கத் தொகை.

எழுத்திற்கு நாற்பதும், சொல்லுக்கு நூற்றிரண்டும், பொருளுக்கு ஐம்பத்தெட்டும், யாப்புக்கு நூறும், அணிக்கு எழுபதுமாகத் தொன்னூல் விளக்கத்தில் அமைந்துள்ள நூற்பாக்களின் எண்ணிக்கை முந்நூற்றெழுபதாகும்.

## 31. ஐம்பொருளிற் சிறந்தது

ஒருபொருளில் வீடுபே றொன்றேமேன் மைத்தே
யிருபொருளி லில்லற மேன்மைத் — திரு[1]பொருளி
னம்[2]பொறியே முக்கியமா நாற்பொருளிற்
புண்ணியமே
யைம்பொருளிற் றொன்னூலே யாம்.

ஒருபொருளில் வீடுபேறு ஒன்றேமேன் மைத்தே
இருபொருளில் இல்லறம் மேன்மைத் — திரிபொருளில்
னம்பொறியே முக்கியம்ஆம் நால்பொருளில்
புண்ணியமே
ஐம்பொருளில் தொன்னூலே ஆம்.

சிறந்த ஒரு பொருளேயெனில் அவ்வொரு பொருள் வீடுபேறே. ஈரறங்களிற் சிறந்தது எதுவெனில் இல்லறமே யாம். மனம், வாக்கு, காயம் ஆகிய முப்பொருள்களிற் சிறந்தது எதுவெனில் மனமேயாம். நாற்பொருள்களிற் சிறந்தது எதுவெனில் புண்ணியமே. அவ்வாறே ஐம் பொருள் கூறும் இலக்கண நூல்களிற் சிறந்தது தொன்னூல் விளக்கமேயாம்.

---

1. திரிபொருள் என்பது எதுகைச் சிறப்பு நோக்கித் திரு பொருள் எனத் திரிதல் விகாரமாக ஆளப்பட்டுள்ளது. ஏடு பெயர்த்தெழுதியோர் பிழையாகவும் அமைதல் கூடும்.

2. 'மனம்' என்பது செய்யுள் எதுகை நோக்கி முதற்குறை பெற்று 'னம்' என ஆளப்பட்டுள்ளது எனக் கொள்ளலே பொருந்தும்.

## 32. இலக்கணத்தில் தொன்னூல் விளக்கம்

கற்களின் மாணிக்கங் காண்டம் புராந்திம[1]
நெற்களிற் சம்பா நிழற்பாலி[2] — நற்கம[3]
மணத்திற்றெள் ளாம்பன் மலர்பஞ் சவிலக்
கணத்திற்றொன் னூல் விளக்கம்.

கற்களில் மாணிக்கம் காண்டம் புராதநம்
நெற்களில் சம்பா நிழல்பாலி — நல்கமம்
மணத்தில்தெள் ஆம்பல் மலர்பஞ் சஇலக்
கணத்தில்தொன் னூல் விளக்கம்.

கற்களில் சிறந்தது மாணிக்கம்; சமயங்களில் சிறந்தது புராதனச் சமயம்; நெல்மணிகளில் சிறந்தது சம்பா; நிழல் தருவதில் சிறந்தது ஆலமரம்; நிறைந்த நல்வாசனையைத் தருவதில் சிறந்தது தெள்ளிய அல்லிமலர். ஐந்திலக் கணங்கள் கூறுவதில் சிறந்நது தொன்னூல் விளக்கம்.

---

1. 'புராதநம்' என்பதனையே ஏடு பெயர்த்தெழுதியோர் தவறு பட 'புராந்திம' எனத் தகரநகங்களை மாற்றி எழுதியிருத்தல் வேண்டும்; மகரத்தில் இட வேண்டிய புள்ளியை நகரத்தில் இட்டிருத்தல் வேண்டும்.
2. ஆலமரம்
3. நிறை என்னும் பொருள் தரும் உரிச்சொல்.

## 33. கலக்கங்கள் நீக்கும்

தொன்னூல் விளக்கத்துட் சூத்திரங்க ளாதியந்த
முன்னூற்[1] றெழுபான் முகபாடம்[1] — பன்னூ
லிலக்கண நாடுவதே னெந்நூலி னுள்ளக்[2]
கலக்கங்க ணீக்குமிதைக் கல்.

தொன்னூல் விளக்கத்துள் சூத்திரங்கள் ஆதிஅந்தம்
முன்னூற்று எழுபான் முகபாடம் — பல்நூல்
இலக்கணம் நாடுவதேன்? எந்நூலின் உள்ள
கலக்கங்கள் நீக்கும்இதைக் கல்.

தொன்னூல் விளக்கத்தில் அடங்கியுள்ள முந்நூற்றெழுபது நூற்பாக்களே இலக்கணத் தொடக்கத்திற்கும் முடிவிற்கும் அறிய வேண்டிய முதற்பாடமாகும். அவ்வாறிருக்க வேறு பல இலக்கணங்களை ஏன் தேடிப் போக வேண்டும்? வேறு நூல்களில் காணப்படும் பொருள் மயக்கங்களை இது போக்கும். ஆதலின் இதனைக் கற்பாயாக.

---

1. முதன்முதல் அறிய வேண்டிய பாடம்.
2. உள்ள என்பதே பொருந்தும்.

## 34. தெள்ளிய நூல்

காரிகை காக்கைப்பா டியம்யாப் பருங்கலம்
வீரசோ ழியநேமி நாதமுமே — லாரியமாய்ச்[1]
சொன்னூற்கண் முன்னூற் றொகுப்பினுட் டெள்ளிநூற்
றொன்னூல் விளக்கமெனச் சொல்.

காரிகை காக்கைப்பா டியம்யாப் பருங்கலம்
வீரசோ ழியம்நேமி நாதமும்மேல் — ஆரியம்ஆய்ச்
சொல்நூல்கள் முன்நூல் தொகுப்பினுள் தெள்ளிநூல்
தொன்னூல் விளக்கம் எனச் சொல்.

யாப்பருங்கலக்காரிகை, காக்கைப்பாடினியம்,யாப்பருங்கலம், வீரசோழியம், நேமிநாதம் முதலிய அழகாக இலக்கணங் கூறுகின்ற முன்னைய நூல் தொகுதியுள் தெளிந்த நூல் தொன்னூல் விளக்கம் என்க.

---

1. அழகாய்

## 35. பல்காலும் பயில்

நன்னூ லெனுங்காட்டி னத்தமதை நாங்கடந்தேந்
தொன்னூல் விளக்கச் சுடராலே — யிந்நூலே
தொல்காப் பியக்களிற்றைச் சொல்விக்கத்[1]
தோட்டியதாற்
பல்காலு மீதே பயில்.

நன்னூல் எனும்காட்டின் அத்தம்அதை நாம்கடந்தேம்
தொன்னூல் விளக்கச் சுடராலே — இத்நூலே
தொல்காப் பியக்களிற்றைச் செல்விக்கத்
தோட்டியதால்
பல்காலும் ஈதே பயில்.

தொன்னூல் விளக்கம் என்னும் சுடர் விளக்கின் ஒளித் துணையால் நன்னூல் என்னும் இலக்கணக் காட்டைக் கடந்தோம். இந்நூலே தொல்காப்பியம் என்னும் இலக்கணக் களிற்றைக் கைக்கொண்டு செலுத்தப் பயன் படும் அங்குசமுமாகும். எனவே இதனைப் பன்முறை பயில்க.

1. 'செல்விக்க' என்பதே 'சொல்விக்க என ஏடுபெயர்த் தெழுதியோரால் தவறுபட எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

## 36. தொன்னூல் நெய்

குடமெழுத்துச் சொன்மத்துக் கேவணி யாப்பு
வடம்பொருளே தயிராக வார்த்துக் —
கடைந்தெடுத்தே
யாய னெனும்வீர மாமுனிவ னேயளித்தா
னேயதொன் னூல்விளக்க நெய்.

குடம்எழுத்துச் சொல்மத்துக் கேஅணி யாப்பு
வடம்பொருள் தயிர்ஆக வார்த்துக் —
கடைந்துஎடுத்தே
ஆயன் எனும்வீர மாமுனிவ னேஅளித்தான்
நேயதொன் னூல்விளக்கம் நெய்'

எழுத்து என்னும் குடத்தில் சொல் என்னும் மத்தை யிட்டு அணி, யாப்பு என்னும் கயிற்றை இருபுறமும் பிணைத்துப் பொருளாகிய தயிரைக் கடைந்து சிறந்த தொன்னூல் விளக்கம் என்னும் நெய்யை ஆயனாகிய வீரமாமுனிவன் அளித்துள்ளான்.

---

1. வடம்பொருள் என இருத்தலே யாப்புக்குப் பொருந்தும்.

## 37. தொன்னூல் கனி

வித்தெழுத்து வேர்பொருண் மேய்ந்தவிலை
சொன்மலர்
கொத்தணி யாப்புபல கோடாக — தித்தீப்பு
வாய்த்த விலக்கண மென்னும் பெருமரங்
காய்த்ததே தொன்னூற் கனி.

வித்துஎழுத்து வேர்பொருள் மேய்ந்தஇலை சொல்மலர்
கொத்துஅணி யாப்புபல கோடுஆக — தித்தீப்பு
வாய்த்த இலக்கணம் என்னும் பெருமரம்
காய்த்ததே தொன்னூல் கனி.

இனிமை நிறைந்த தமிழ் இலக்கணம் என்னும் பெரிய மரம் எழுத்து வித்தில் தோன்றியது. சொல்லே அம்மரத்தில் பூத்த மலர்கள்; பொருளே மரத்தின் வேர்; யாப்பே மரக் கிளைகள். அம்மரத்தில் காய்த்த கனியே தொன்னூல் விளக்கமாகும்.

## 38. தொன்னூல் ஆரம்

சொன்னமெழுத் தோம்[1]முசு[2] சொல்லாக்க யாப்பணி
வன்ன[3] நோக்[4]குப் பொருண் மாமணியாய்க் —
கன்னராம்
வீரமுனி விற்பனர்க்குத் தொன்னூ ல் விளக்கமெனு
மாரம மைத்தளித் தார்.

சொன்னம்எழுத் தாம்முசு சொல்ஆக்க யாப்புஅணி
வன்னநோக் குப்பொருள் மாமணிஆய்க் —
கன்னர்ஆம்
வீரமுனி விற்பனர்க்குத் தொன்னூ ல் விளக்கம்எனும்
ஆரம்அ மைத்துஅளித் தார்.

எழுத்தென்னும் பொன்னைச் சொல்லாகிய உலையில் இட்டு யாப்பு அணி என்னும் இரு கண்களால் நிறத்தைக் கூர்ந்து நோக்கிப் பொருளாகிய மணியை இணைத்துக் கொல்லராகிய வீரமாமுனி தமிழ் விற்பனர்கட்குத் தொன்னூல் விளக்கம் என்னும் மாலையைச் செய்து அளித்துள்ளார்.

---

1. 'எழுத்தோம்' என ஏடு பெயர்த்தெழுதியோரால் தவறுபட எழுதப் பட்டுள்ளது. 'எழுத்தாம்' எனலே பொருந்தும்.
2. 'முசு' என்பது செய்யுட்காக 'முசு' என ஆளப்பட்டுள்ளது.
3. 'வண்ண' என்பது எதுகை நோக்கி 'வன்ன' என ஆளப் பட்டுள்ளது.
4. 'வன்னரோக்' எனத் தவறுபட உள்ளது ஏடு பெயர்த்தெழுதி யோரால் ஏற்பட்ட பிழையாகலாம். 'வன்னநோக்கு' எனக் கொள்ளின் பொருள் பொருந்தும்.

## செய்யுள் முதற் குறிப்பகராதி

| | | | |
|---|---|---|---|
| 1. | அருள்மழை | ... | 2 |
| 2. | அறிவியல் | ... | 39 |
| 3. | அன்னை | ... | 25 |
| 4. | ஆயிரமாக | ... | 72 |
| 5. | ஆய்வுநெறி | ... | 56 |
| 6. | இலக்கணவுரை | ... | 31 |
| 7. | இறைபுகழ்ப் | ... | 2 |
| 8. | இன்றமிழில் | ... | 57 |
| 9. | ஏளனவிலக்கியம் | ... | 46 |
| 10. | ஒப்பாய் | ... | 61 |
| 11. | கற்கத் | ... | 53 |
| 12. | குருத்துவம் | ... | 66 |
| 13. | குருமாமுனியின் | | 16 |
| 14. | குறள்மொழி | ... | 42 |
| 15. | சதுரகராதியைச் | ... | 37 |
| 16. | சீரியதென்னும் | ... | 44 |
| 17. | தலைமகள் | ... | 2 |
| 18. | தனித்தமிழ் | ... | 59 |
| 19. | தொன்னூல் விளக்கம் | ... | 28 |
| 20. | நாட்டார் | ... | 50 |
| 21. | படைப்புப் | ... | 11 |
| 22. | பாவியம் | ... | 62 |
| 23. | மக்களின் தொண்டே | ... | 70 |
| 24. | முத்தமிழில் | ... | 21 |
| 25. | முந்நூறு | ... | 5 |
| 26. | மேனாட்டு | ... | 68 |
| 27. | வடிவக் குழப்பம் | ... | 64 |
| 28. | வரலாற்று | ... | 48 |
| 29. | வேத விளக்கமாம் | ... | 34 |

# சதுரகராதி

# வெற்றி மாலை

# நூன்முகம்

வெற்றி மாலையில் பதினேழு வெண்பாக்கள் காணப் படுகின்றன. புகழ்ச்சி மாலையின் தொடக்கத்திலே தொகுப்புப் பற்றிக் குறிப்பிடப்படுவதால் இதற்கெனத் தனித்துக் கூறப்படவில்லை. அக்குறிப்பு இதற்கும் பொருந்தும் என்னும் கருத்துப் போலும்.

தொடக்கத்தின் இருவெண்பாக்கள் வாய்பேசாது வரி வடிவில் சொல்விளக்கம் தருவதால் மவுன ஆசாரியன், மவுன ஆசான் எனவும், பின்னர் ஓர்பா நல்ஆசிரியர் எனவும் சதுரகராதியைச் சிறப்பிக்கின்றன (1, 2, 15). ஏம ஒளியாகவும், நாற்பொருள் காக்கும் நாற்படையாகவும் பின்னிரு வெண்பாக்களில் போற்றப்படுகிறது (3, 4). அஞ்சனம், சருக்கரையாக அடுத்த பாக்கள் காட்டுகின்றன (5, 6). கற்றோர் மட்டுமன்றி மற்றோர்க்கும் பொருளறியத் தந்த சிறப்பினை அடுத்த வெண்பாக்கள் (7, 8) சுட்டு கின்றன. அடுத்துப் பெயரகராதிச் சிறப்பு, இரு பாக்களிலும் (9, 10) பொருளகராதிச் சிறப்பு இரு பாக்களிலும் (11, 12) தொகையகாரதிச் சிறப்பு நான்கு பாக்களிலும் (13, 14, 15, 16), தொடையகராதிச் சிறப்பு இறுதிப் பாடலிலும் கூறப்படு கின்றன.

புகழ்ச்சி மாலையைப் போலவே ஏமவொளி (3), நாற் படை (4) என்பன போன்று உருவகித்துச் சதுரகராதி பேசப் படுகிறது. பன்னூற் பயன் பெற உதவும் எனவும் (9) பாவலன் ஆகத் துணைசெய்யும் எனவும் (11) புகழப்படு கிறது. 'இரத்தின ஆரம்' என்னும் சிறப்புப் பெயர் சங்கத்தில் ஆராய்ந்து சூட்டப்பட்டதாகக் குறிப்பிடப்படுவதற்கேற்பப் (16) பல்வண்ணம் காட்டி வாழ்வின் வெற்றிக்குத் துணை நிற்கும் மாலையாகத் திகழ்கிறது எனலாம்.

## 1. மவுன ஆசாரியன்

முதுநூற்க ளாய்பவற்றுண் மொய்த்த மருட்குச்
சதுரக ராதியிற் சன்ன[1] — விதுபயனென்
றோர்மொழியு மோதா துரைசெய் துணர்த்துவதாற்
கூர்மவுனா சாரியெனக் கொள்.

முதுநூல்கள் ஆய்பவற்றுள் மொய்த்த மருட்குச்
சதுர்அக ராதியில் சொன்ன — இதுபயன்என்று
ஓர்மொழியும் ஓதாது உரைசெய்து உணர்த்துவதால்
கூர்மவுன ஆசாரிஎனக் கொள்.

பழம்பெரு நூல்களை ஆராய்ந்தால் பொருள் அறிய இயலாத சொற்கள் மிகுதியாய் உள்ளன. அவற்றின் பயன் இதுதான் எனச் சதுரகராதி வாய் திறந்து கூறாது; ஆயினும் படித்துப் பார்ப்பவர்க்கு உணர்த்தி விடும். எனவே, அதனை வாய்திறவாது மௌனம் காக்கும் ஆசாரியனாகக் கொள்க.

(இதுவும் அடுத்த பாடலும் சதுரகராதியை ஆசிரியனுக்கு நிகராகக் கூறுகின்றன. ஆசிரியனுக்குக் கருவி அவனது வாய். ஆனால் சதுரகராதிக்கு வாயில்லை; எனினும் ஆசிரியன் பணியைச் செவ்வனுறச் செய்கிறது என்பது கருத்து).

---

1. 'சன்ன' என்பது ஏடுபெயர்த்தெழுதியதோரால் நேர்ந்த பிழையாகலாம்; 'சொன்ன' என்பதே பொருந்தும்.

## 2. மவுன ஆசான்

செந்தமிழ்ச் சொன்முற்றுஞ் சேர்ந்த வகராதி
வந்த கலையுண் மருட்சியறச் — சுந்தரமாய்ப்
பேசா துணர்த்திப் பிரித்துரைப்ப தான்மவுன
வாசா னமக்கென்று மாம்.

செந்தமிழ்ச் சொல்முற்றும் சேர்ந்த அகராதி
வந்த கலையுள் மருட்சிஅறச் — சுந்தரம்ஆய்ப்
பேசாது உணர்த்திப் பிரித்துஉரைப்ப தால்மவுன
ஆசான் நமக்குஎன்றும் ஆம்.

செந்தமிழ்ச் சொற்களனைத்தும் தொகுக்கப் பெற்றது சதுரகராதி. அது வாய் திறந்து பேசாது. கலைகளுள் அடங்கிய பொருளில் ஏற்படும் மயக்கத்தை முழுதும் தீர்க்கும் தன்மையது; அழகாகப் பொருளைப் பிரித்துக் காட்டி உணர்த்தும் பெற்றியது. ஆதலின் நமக்கு என்றும் மௌனம் காத்துப் புகட்டும் ஆசானாகும்.

## 3. ஏம ஒளி

பேர்தகழி நெய்பொருளாய் பேணித் திரிதொகையா
யேர்விளக்குத் தண்டுதொடை யிந்நான்கால் — சீர்வீர
மாமுனிவ னூலிருளை மாற்ற வகராதி
யேமவொளி யேற்றிவைத்தா ரெண்.

பேர்தகழி நெய்பொருள்ஆய்ப் பேணித்
திரிதொகைஆய்
ஏர்விளக்குத் தண்டுதொடை இந்நான்கால் — சீர்வீர
மாமுனிவன் நூல்இருளை மாற்ற அகராதி
ஏமஒளி ஏற்றிவைத்தார் எண்.

பெயர் அகராதி அகல் விளக்காகும். பொருள் அகராதி விளக்கில் ஊற்றப்படும் எண்ணெயாகும். தொகை அகராதி அதில் இடப்படும் திரியாகும். தொடை அகராதி விளக்கைத் தாங்கும் தண்டாகும். இந்நால்வகைப் பிரிவுகளால் ஆகிய அகராதியை நூல்களில் காணக்கிடக்கும் பொருள் மயக்க இருளைப் போக்கிப் பாதுகாப்பு அளிக்கும் ஒளிவிளக்காக சிறப்புமிகு வீரமாமுனிவர் ஏற்றி வைத்தார் என எண்ணுக.

(இப்பாடலில் உருவக அணி அமைந்துள்ளது. சதுரகராதி ஒளிவிளக்காக உருவகிக்கப்பட்டுள்ளது.)

## 4. நாற்படை

சூர னிலக்கணனாற் றுங்கபொரு ணாலரணா
யாருமண்ட வொட்டாம லாளவே — வீரமுனி
யண்டி சதுரங்க வகராதி நாற்படையைக்
கொண்டளித்தார் வெற்றி நமக்கு.

சூரன் இலக்கணனால் துங்கபொருள் நால்அரண்ஆய்
ஆரும்அண்ட ஒட்டாமல் ஆளவே — வீரமுனி
அண்டி சதுரங்க அகராதி நால்படையைக்
கொண்டுஅளித்தார் வெற்றி நமக்கு.

இலக்கணம் என்னும் சூரன் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பொருளையும் தன்னைப் பாதுகாக்கும் அரண்களாகக் கொண்டு ஆண்டு வந்தான். எவரும் அவனை நெருங்க முடியவில்லை. வீரமாமுனிவரோ, பெயர், பொருள், தொகை, தொடை என்னும் நாற்பிரிவுப் படைகளைக் கொண்டு அவனிடம் நமக்கு வெற்றியைத் தேடித் தந்தார்.

(அறம், பொருள், இன்பம், வீடு எனும் நாற்பொருள் களும், மலை, காடு, மதில், கடல் எனும் நாலரண்களாக வும், பெயர், பொருள், தொகை, தொடை எனும் சதுரகராதியின் நாற்பிரிவுகளும், யானை, குதிரை, தேர், காலாட்படைகளாகவும் உருவகப்படுத்தப்பட் டுள்ளன.)

---

1. இலக்கணம் வீரனாகவும், நாற்பொருள் அரண்களாகவும், வீரமாமுனிவர் வெற்றி வீரனாகவும், சதுரகராதிப் பிரிவுகள் அவர்தம் படைக்கருவிகளாகவும் உருவகப்படுத்தப்பட் டுள்ளன. இலக்கணத்தைச் சதுரகராதியின் துணையால் எளிதில் புரிந்து கொள்ள முடிந்தது என்பது கருத்து.

## 5. அஞ்சனம்

நூலின் புதைபொருளி னுட்பங்காட் டஞ்சனத்தைப்
போல வகராதி புலவர்க்கு — வாலறிவ
னாம[1]வீர மாமுனிவ னத்துத்தி லேயி[2]ட்டா
னாமஞ் சனங்காண வே.

நூலின் புதைபொருளின் நுட்பம்காட்டு அஞ்சனத்தைப்
போல அகராதி புலவர்க்கு — வால்அறிவன்
ஆம்வீர மாமுனிவன் அத்தத்தி லேஇட்டான்
நாம்அஞ் சனம்காண வே.

அறியவாராதனவற்றை அறிந்துகொள்ளப் பயன்படும் மை போல நூலில் மறைந்திருக்கும் பொருளைப் புலவர்கட்கு நுணுக்கமாகக் காட்டுவது அகாரதியே ஆம். கூர்மையான அறிவு பெற்ற வீரமாமுனிவன் நாம் சொற்பொருள் அறிந்துணரத் துணையாகும் மையாகச் சதுரகராதியைத் தந்துள்ளான்.

(திருட்டுப்போன பொருள்களைக் கண்டு பிடிக்கவும், பலன்களை அறிந்து கொள்ளவும் மை போட்டுப் பார்த்து அறியும் சோதிட முறை இன்றும் சிலரால் கையாளப்படுகிறது. அம்முறை இங்கு உவமையாக்கப் பட்டுள்ளது).

---

1. 'அறிவனாம்' என்பது எதுகை நோக்கி அகரச் சாரியை பெற்று 'அறிவனாம' என வந்தது.
2. 'அத்துத்திலே' என்பது ஏடு பெயர்த்தெழுதியோரால் நேர்ந்த பிழையாகலாம். 'அத்தத்திலே' என்பதே பொருந்தும்.

## 6. சர்க்கரை

நிகண்டுசூ டாமணிம தூ கம்பூ நேரே
யகராதி சர்க்கரைமுன் னாக — புகைகொல்லர்
வீதியினிற் சூசிவிலை கூறநேர் பிங் கலையு
மோதிவாக ரம்[1] முரிச்சொ லும்.

நிகண்டுசூ டாமணிம தூ கம்பூ நேரே
அகராதி சர்க்கரைமுன் னாக — புகைகொல்லர்
வீதியினில் சூசிவிலை கூறல்நேர் பிங்கைலையும்
ஓதிவாக ரம்உரிச்சொ லும்.

சர்க்கரை முன்னர் இலுப்பைப்பூப் போலச் சதுரகராதி முன்னர் சூடாமணி நிகண்டு ஆய்விடும். அவ்வாறிருக்க அதன் முன்னர் பிங்கலம், திவாகரம், உரிச்சொல் ஆகிய நிகண்டுகள் பற்றி எடுத்துக் கூறுவது கொல்லர் தெருவில் ஊசி விற்கும் நிலையினை ஒக்கும்.

(இதுவும் அடுத்துவரும் இரண்டு பாடல்களும் நிகண்டு களுடன் ஒப்பிட்டுச் சதுரகராதியின் சிறப்பினைக் கூறு கின்றன).

---

1. 'திவாகரமுரிச்சொலும்' என்பது செய்யுள் நோக்கி மகரம் விரித்தல் விகாரம் பெற்றுத் 'திவாகரம்முரிச்சொலும்' என வந்தது.

## 7. யாவர்க்கும் அளித்தார்

பாராம லேநிகண்டு பண்ணவருக் கல்லாதே
யார்யார்க் குமாக வகராதி — நேராகப்
பார்த்தறிய வேவீர மாமுனிவன் பன்னுதமிழ்
கோர்த்தளித்தார்[1] யாவருக் கும்.

பாராமலே நிகண்டு பண்ணவருக்கு அல்லாதே
யார்யார்க்கும் ஆக அகராதி — நேராகப்
பார்த்தறிய வேவீர மாமுனிவன் பன்னுதமிழ்
கோத்துஅளித்தார் யாவருக் கும்.

மனனம் செய்து நினைவில் வைத்துக் கொள்ளக் கூடியவர்கட்கு மட்டுமே பொருள் காண நிகண்டுகள் பயன் படும். அவ்வாறு அல்லாமல் எவருக்கும் தாமதமாகவே பொருள் பார்த்து அறியப் பயன்படுமாறு வீரமாமுனிவர் சொற்பொருள்களைத் தொகுத்து அகராதியை அளித்துள் ளார்.

---

1. 'கோத்தளித்தார்' என்பது எதுகை நோக்கி ரகரம் தோன்றல் விகாரமாகப் பெற்றுக் 'கோர்த்தளித்தார்' என வந்தது.

## 8. ஏங்காதெடுக்க அளித்தார்

பன்னிரண் டு தொகுதி[1] பாராமல் பண்ணபின்[2]
பின்னமொழி யிக்கவியி லித்தருண — மென்னபய
னென்றெண்ணி யேங்கா தெடுக்க வகராதி
நின்றளித்தார் வீர முனி.

பன்னிரண் டும்தொகுதி பாராமல் பண்ணினபின்
பின்னமொழி இக்கவியில் இத்தருணம் — என்னபயன்
என்றுஎண்ணி ஏங்காது எடுக்க அகராதி
நின்றுஅளித்தார் வீர முனி.

நிகண்டுகளின் பன்னிரண்டு தொகுதிகளையும் மனனம் செய்த பின்னருங்கூட இந்தக் கவிதையின், இந்தச் சொல்லுக்கு, இந்த இடத்தில் என்ன பொருள் என்று எண்ணித் தெரியாது தவித்தனர். அவ்வாறு ஏங்காது உடனே பொருள் கண்டுணர வீரமாமுனிவர் தாம் முன்வந்து சதுரகராதியை அளித்துள்ளார்.

---

1. 'பன்னிரண் டு தொகுதி' என்பது ஏடு பெயர்த்தெழுதியோர் பிழையாகலாம்.

 'பன்னிரண் டுந்தொகுதி' என்பதே செய்யுள் இலக்கணத்திற்குப் பொருந்தும்,

2. 'பண்ணபின்' என்பது ஏடு பெயர்த்தெழுதியோர் பிழையாகலாம்.

 'பண்ணியபின்' என்பதே பொருந்தும்.

## 9. பன்னூற்கும் பயன்

பெயரக ராதிப்[1] பிரித்துணர்வீ ராகிற்
பயனாய்ந் துணர்வீரே பாரீர் — நியமாகச்
சொன்னூ ற்கு நன்னூ ற்குந் தொன்னூ ற்கு
முன்னூ ற்கும்
பன்னூ ற்கு மோதும் பயன்.

பெயர்அக ராதி பிரித்துஉ ணர்வீ ராகில்
பயன்ஆய்ந்து உணர்வீரே பாரீர் — நியமாகச்
சொல்நூ ற்கும் நல்நூ ற்கும் தொல்நூ ற்கும்
முன்நூ ற்கும்
பல்நூ ற்கும் ஓதும் பயன்.

முறையாகச் சொல்லப்பட்ட நூல்கள், நல்ல நூல்கள், தொன்மையான நூல்கள், முன்னர்த் தோன்றிய நூல்கள் ஆகிய பலவகையான நூல்களின் சொற்பொருள் பயன் களை யெல்லாம் சதுரகராதியின் பெயரகராதிப் பிரிவினைப் பார்த்துப் பொருளுணர்ந்து பெறலாம் என்பதனை உணர்க.

(இதுவும் அடுத்த பாடலும் சதுரகராதியின் பெயரகராதிப் பிரிவின் சிறப்பினைக் கூறுகின்றன.)

---

1. 'அகராதிப் பிரித்து' என்பது ஏடு பெயர்த்தெழுதியோர் பிழை யாகலாம்.

'அகராதி பிரித்து' என்பதே பொருந்தும்.

## 10. போதிவைக்கும் வர்த்தி

துதியனைத்தும் பெற்றிடச் சொல்லுமிஃ தென்னை
மதிவளர்ப் போதிவைக்கும் வர்த்திச் — சதுரகரா
திக்குள்ளே மிக்கதெனத் தக்கவர்க ளொக்குவுந்து[1]
திக்கும் பெயரகரா தி.

துதிஅனைத்தும் பெற்றிடச் சொல்லும்இஃது என்னை
மதிவளர்ப் புஓதிவைக்கும் வர்த்திச் — சதுர்அகரா
திக்குஉள்ளே மிக்கதுஎனத் தக்கவர்கள்ஒக்கவும்து
திக்கும் பெயரகரா தி.

பலபடப் புகழ்ந்து கூறுவது தேவையன்று. அறிவை வளர்ப்பதாகவும் மலைமேலிட்ட மணமிக்க வத்தியாகவும் உள்ள சதுரகராதிக்குள்ளே, தகுதிமிக்கோர் அனைவரும் ஒருசேர சிறந்தது எனக் கூறுவதும், பாராட்டுவதும் பெயரகராதியே யாம்.

---

1. 'ஒக்குவுந் துதிக்கும்' என்பது ஏடு பெயர்த்தெழுதியோர் பிழையாகலாம்.

'ஒக்கவும் துதிக்கும்' என்பதே பொருந்தும்.

## 11. பாவலன் ஆவாய்

பொருளக ராதியுட் பூட்டினவை முற்றுந்
தெருளுணர்ந் தாய்ந்து தெளிந்தான் — மருணீங்கி
மேவலர்க்கு மேவலனாய் விற்பனர்க்கு முற்பனனாய்
நாவலர்க்கும் பாவலனா வாய்.

பொருள்அக ராதியுள் பூட்டினவை முற்றும்
தெருள்உணர்ந் துஆய்ந்து தெளிந்தால் — மருள்நீங்கி
மேவலர்க்கும் மேவலன்ஆய் விற்பனர்க்கும்
முற்பனன்ஆய்
நாவலர்க்கும் பாவலன்ஆ வாய்.

பொருள் அகராதியில் தொகுக்கப்பட்டுள்ள சொற்பொருள்கள் அனைத்தையும் தெளிவுற ஆராய்ந்து உணர்ந்துவிட்டால், அறியாமை நீங்கப் பெரியோர்கட்கும் மேலான பெரியோனாக, வல்லவர்கட்கும் மேலான வல்லவனாகப் பாவலர்கட்கும் மேலான பாவலனாகத் திகழ்வாய்.

(இதுவும் அடுத்த பாடலும் பொருளகராதிப் பிரிவின் சிறப்பினைக் கூறுகின்றன.)

## 12. ஓர்ந்தால் உணர்வாய்

ஓர்ந்தா லுணர்வாய் பெயர்த்தொகுப்பை வீரமுனி
தேர்ந்தே யொருங்குடன் சேர்த்ததா — லார்ந்த
விருளு மருளும் வெருளு முருளுந்
தெருளும் பொருளகரா தி.

ஓர்ந்தால் உணர்வாய் பெயர்த்தொகுப்பை வீரமுனி
தேர்ந்தே ஒருங்குஉடன் சேர்ந்ததால் — ஆர்ந்த
இருளும் மருளும் வெருளும் உருளும்
தெருளும் பொருள்அகரா தி.

பெயரகராதியில் உள்ள சொற்பொருட்களை வீரமாமுனிவர் தேர்ந்தெடுத்துத் தொகுத்துள்ளதால், சொற்பொருள் உணர இயலாமல் மண்டிக் கிடக்கின்ற மயக்கங்கள் எல்லாம் நீங்கித் தெளிவு பெறலாம் என்பதனைப் பெயரகராதிப் பிரிவைப் படித்தறிந்தால் உணர்வாய்.

## 13. தேவை நீ ஆவாய்

தொகையக ராதியுட் சூட்டியவை கற்று
வகையா கவருணித்து வந்தா — னகைபெருகப்
பாவலர்க்கு மாவலுறப் பாடப்பிர சங்கிக்க
யாவருக்குந் தேவைநீயா வாய்.

தொகைஅக ராதியுள் சூட்டியவை கற்று
வகையாக வருணித்து வந்தால் — நகைபெருகப்
பாவலர்க்கும் ஆவல்உறப் பாடப்பிர சங்கிக்க
யாவருக்கும் தேவைநீஆ வாய்.

தொகையகராதிப் பிரிவில் தொகுக்கப்பட்ட சொற்களை யெல்லாம் கற்று முறைப்படி விளக்கம் தர முற்பட்டால், பாவலர்கள் மகிழ்வோடும் ஆவலோடும் எதிர்பார்க்கும் தகுதி யுடையனவாக, பாடுவதற்கும், சொற்பொழிவு நிகழ்த்து வதற்கும், அனைவருக்கும் தேவைப்படுபவனவாக நீ ஆவாய்.

(இதுவும் அடுத்துவரும் மூன்று பாடல்களும் தொகை யகராதிப் பிரிவின் சிறப்பினைப் பேசுகின்றன.)

## 14. பின்னும் அகம் மகிழும்

உன்னப் பிரசங்க மோத வலங்கிறுதம்
பன்னச்சிங் காரம் பகுத்துணரப் — பின்னு
மகமகிழு மென்று மிகுபுகழு முண்டாந்
தொகையக ராதித் தொகுப்பு.

உன்னப் பிரசங்கம் ஓத அலங்கிறுதம்
பன்னச்சிங் காரம் பகுத்துஉணரப் — பின்னும்
அகம்மகிழும் என்றும் மிகுபுகழும் உண்டாம்
தொகைஅக ராதித் தொகுப்பு.

கேட்கும்பொழுதே சொற்பொழிவு மகிழ்ச்சி தரும். யாகம் நடைபெறும்பொழுதே ஓதுதல் சிறப்புத் தரும். அழகு படுத்திக் கொள்ளும் பொழுதே அலங்காரம் உவகை தரும். ஆனால் தொகையகராதிப் பிரிவைப் படிக்கும்பொழுது மட்டுமன்றிப் பின்னரும் மனம் மகிழும்; மிகுந்த புகழும் உண்டாகும்.

## 15. நல் ஆசிரியர்

கல்லா தவருங் கவிபாடக் கற்பிக்கு
நல்லா சிரியர்க் கிணையாகும் — வல்லாரா
யார்க்குந்தோற் றாத வருமொழிகள் காட்டிமரு
டீர்க்குந் தொகையகரா தி.

கல்லா தவரும் கவிபாடக் கற்பிக்கும்
நல்ஆ சிரியர்க்கு இணைஆகும் — வல்லார்ஆய்
யார்க்கும்தோற் றாத அருமொழிகள் காட்டிமருள்
தீர்க்கும் தொகைஅகரா தி.

வல்லராகிய எவருக்கும் புலப்படாத அரியதொகைப் பொருள்களையெல்லாம் விளக்கி மயக்கத்தைப் போக்கும் தொகையகராதிப் பிரிவு கற்றறியாதவருக்கும் கவிபாடும் முறையைக் கற்பித்துவிடும் நல்ல ஆசிரியருக்கு இணையாக உள்ளது.

## 16. இரத்தின ஆரம்

தொகையக ராதியெனச் சொற்றுமந் நாமந்
தகைபெற்ற தன்றெனத் தக்க — வகையாக
நிற்சங்கத் தாய்ந்து நியமித்த நாமமாம்
பிற்சங்க ரத்தினா ரம்.

தொகைஅக ராதிஎனச் சொற்றும்அந் நாமம்
தகைபெற்றது அன்றுஎனத் தக்க — வகையாக
நின்சங்கத்து ஆய்ந்து நியமித்த நாமம்ஆம்
பின்சங்க ரத்தினஆ ரம்.

தொகையகராதி எனக் கூறும் பெயர், தகுதிக்குப் பொருத்தமற்றது எனச் சங்கத்தில் ஆராய்ந்து பின்னர்ச் சூட்டிய பெயர் சங்க இரத்தின மாலை என்பதாகும்.

(இப்பாடல் பதினேழாம் பாடலாகத் தொகுப்பில் காணப்படுகிறது. எனினும் தொகையகராதிப் பிரிவு பற்றியதால் பொருள் இயைபு நோக்கிப் பதினாறாம் பாடலாக வைக்கப்பட்டுள்ளது.)

## 17. படபடவென வாசிப்பாய்

தொடையக ராதியுட் சொற்றவை கற்கி
லடிதொடை மோனை வழுவா — நொடியிற்
கடகடென[1] ச் சொல்லித் தடதடெனப்[2] பேசிப்
படபடென[3] வாசிப்பாய் பார்.

தொடைஅக ராதியுள் சொற்றவை கற்கில்
அடிதொடை மோனை வழுவா — நொடியில்
கடகடெனச் சொல்லித் தடதடெனப் பேசிப்
படபடென வாசிப்பாய் பார்.

தொடையகராதிப் பிரிவில் சொல்லப்பட்டுள்ள சொற்பொருளைக் கற்று விட்டால், அடி, தொடை, மோனை முதலியவற்றுள் பிழை எதுவும் ஏற்படாமல், விரைவாகக் கடகடவெனச் சொல்லி, தடதடவெனப் பேசி, படபடவென படிக்க முடிவதைக் காண்பாயாக.

(இப்பாடலுள் தொடையகராதிப் பிரிவின் சிறப்புக் கூறப்படுகிறது.)

---

1, 2, 3. கடகடவென, தடதடவென, படபடவென என அமைய வேண்டியவை, செய்யுளுக்காக வகரம் தொகுத்தல் விகாரமாகிக் கடகடென, தடதடென, படபடென என வந்துள்ளன.

## செய்யுள் முதற்குறிப்பகராதி

1. உன்ன
2. ஓர்ந்தால்
3. கல்லா
4. சூரன்
5. செந்தமிழ்
6. துதியனைத்தும்
7. தொகையகராதியுட் சூட்டியவை
8. தொடையகராதியுட் சொற்றவை
9. தொகையகராதியென
10. நிகண்டு
11. நூலின்
12. பன்னிரண்டு
13. பாராமலே
14. பெயரகராதி
15. பேர்தகழி
16. பொருளகராதி
17. முது நூல்கள்

# துணைநூற் பட்டியல்

## (தமிழ்)


1. இன்னாசி சூ., 'இலக்கணச் சிந்தனைகள்', வளனருள் வெளியீடு, 1984.
2. இன்னாசி, சூ., 'கிறித்தவ இலக்கியச் சிந்தனைகள்', வளனருள் வெளியீடு, 1984.
3. இன்னாசி. சூ., 'தேம்பாவணித்திறன்', வளனருள் வெளியீடு, 1983.
4. இன்னாசி, சூ., 'சதுரகராதி ஆராய்ச்சி', மதுரைப் பல்கலைக் கழகம்.
5. இன்னாசி, சூ., 'பத்துக் கட்டுரை', தமிழரசன் பதிப்பகம், 1977.
6. இன்னாசி, சூ., 'சதுரகராதி', (பதிப்பு), 1977.
7. சிவசுப்பிரமணியன், ஆ., 'சிறுகதைக்கு வித்திட்டவர்'.
8. சுந்தரம், ஜே. ஜி, 'தமிழ்த் தொண்டர் வீரமாமுனிவர்', தமிழ் இலக்கியக் கழகம், தூத்துக்குடி, 1948.
9. 'சுவாமி வீரமாமுனிவர் சிறப்பு மலர்', சாமா சுவாமிகள் (பதிப்பு), கத்தோலிக்க சேவா சங்கம், மதுரை, 1944.
10. சூரியநாராயண சாஸ்திரியார், வி. கோ., 'தமிழ் வியாசங்கள்', 1950.
11. 'திருக்குறள் இலத்தீன் மொழிபெயர்ப்பு', ஞானப்பிரகாசம், வி. மி. (மொழிபெயர்ப்பு), விரமாமுனிவர் தமிழ் ஆய்வுக் கழகம், 1977.
12. 'தேம்பாவணி 1 ஆம் காண்டம்', ஆரோக்கியம் பிள்ளை, ரா. லே., (பதிப்பு), தமிழ் இலக்கியக் கழகம், தூத்துக்குடி, 1961.
13. 'தேம்பாவணி — 2 ஆம் காண்டம்', ,, 1964.
14. 'தேம்பாவணி — 3 ஆம் காண்டம்', ,, 1974.
15. தொன்னூல் விளக்கம்', சுப்பிரமணியன், ச. வே., (பதிப்பு), 1978.

16. 'தொன்னூல் விளக்கம்', மெக்கன்ஜி காபன் அய்யர், ஜி., (பதிப்பு), 1891.

17. 'தொன்னூல் விளக்கம்', வேதகிரி முதலியார் (பதிப்பு), 1838.

18. 'பரிசுத்த வேதாகமம்', தமிழ்நாடு விவிலிய, மறைக்கல்வி, திருவழிபாட்டு நடுநிலையம், திண்டிவனம், 1980.

19. 'பிரபந்த மரபியல்', அருணாசலம்', மு.. (பதிப்பு), தமிழ்நாடு அரசு, 1976.

20. 'பிரயோக விவேகம்', ஆறுமுக நாவலர் (பதிப்பு), 1952.

21. வளன்அரசு, பா., 'வீரமாமுனிவர் ஒரு விளக்கம்', நோபிலி வெளியீட்டகம், மதுரை, 1982.

22. 'வித்தகர் வீரமாமுனிவர் சிறப்பு மலர்', வளனரசு, பா., (பதிப்பு), பாளையங்கோட்டை, 1977.

23. 'வீரமாமுனிவர் மலர்ச்செண்டு' வீரமாமுனிவர் நினைவுச் சிலை அமைப்புக்குழு, 1968.

## (ஆங்கிலம்)

1. A Grammar of High Tamil, Babington, B. G., (Translator), Besse, Fr. L., (Editor) 1917.

2. 'A Grammar of the Common Dialect of the Tamilian Language Called (கொடுந்தமிழ்), George William Mahon, A. M., (Translator), 1848.

3. Besse, Fr. L., 'Fr. Beschi, His Times and Writings', 1918.

4. John Murdoch, 'Classified Catalogue of Tamil Printed Books', 1968.

5. Pope, G. U., The Sacred Kural of Tiruvalluva Nayanar, Asian Educational Services, 1980.

6. 'Some Christian Pioneers in Tamilnadu', Vivekananda Kendra Patrika', 1979.

**துறையைப் பற்றி**

சென்னைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் இலக்கியத்தின் ஒரு பிரிவான கிறித்தவத் தமிழ் இலக்கியம் பற்றி ஆய்வு செய்யத் தமிழக அரசால் நிறுவப்பட்ட அறக்கட்டளைத் துறை கிறித்தவத் தமிழ் இலக்கியத்துறை. இத்துறை ஆய்வு நூல்களை வெளியிடவும், அரிய நூல்களை வெளிக்கொணரவும் செயல்பட்டு வருகிறது. இத்துறையில், பிஎச்.டி. (Ph D.), எம்.பில். (M.Phil.) ஆகிய பட்டங்கட்காகவும் ஆய்வு செய்து வருகின்றனர்.

**நூலைப் பற்றி**

இந்நூல் கிறித்தவத் தமிழ் இலக்கியத்துறையின் முதல் நூல். கிறித்தவத் தமிழறிஞருள் முதன்மை நிலை பெறத் தக்க வீரமாமுனிவரின் விழுமிய ஆற்றலை முழுதும் உணரத் துணை நிற்கும் சீரிய நூல்.

**ஆசிரியரைப் பற்றி**

1934–இல் பிறந்த இந்நூலாசிரியர் புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் என்னும் ஊரினர். பாளையங்கோட்டை தூய சவேரியார் கல்லூரியில், தமிழ் முதுகலை — ஆய்வுத்துறைத் தலைவரும் பேராசிரியருமாக விளங்கியவர். தற்பொழுது சென்னைப் பல்கலைக்கழகத்தில் கிறித்தவத் தமிழ் இலக்கியத்துறையின் தலைவராகவும், பேராசிரியராகவும் பணியாற்றுகிறார்.

இலக்கணம், மொழியியல், இலக்கியம், அகராதி முதலிய பல்துறைகளில் பதினேழுக்கு மேற்பட்ட நூல்களை ஆக்கியுள்ளார். ஆய்வரங்குகளில் பங்கேற்றும், ஆய்விதழ்களில் கட்டுரைகள் வழங்கியும் தமிழ் ஆய்வின் வளர்ச்சிக்குத் துணைநின்று வருகிறார்.

கவிதை, நாடகம், சிறுகதை முதலிய படைப்பிலக்கிய ஆற்றல் சான்ற இவ்வாசிரியருக்குப் பாராட்டும் பரிசும் கிடைத்துள்ளன.